



29.01.2025 - புதன்கிழமை

# ஒருவன்

ORUVAN - ඔරුවන්

ஆண்டு: 01 இதழ் : 80 குரோதி வருடம் தை மாதம் 16 ஆம் நாள் - ஹிஜ்ரி 1446 ரஜப் 29 பக்கங்கள் - 12


## அதிக விலையில் அரிசி விற்பனை: 10 இலட்சம் அபராதம்

(கனுஷியா புஷ்பகுமார்)

உள்நாட்டு வெள்ளை பச்சையரிசியை அதிக விலைக்கு விற்பனை செய்த குற்றச்சாட்டில் கிரிபத்கொட பிரதேசத்தில் உள்ள பல்பொருள் அங்காடி ஒன்றிற்கு 10 இலட்சம் ரூபாய் அபராதம் விதிக்க நேற்றுமுன்தினம் (27) மஹர நீதிமன்றம் உத்தரவிட்டதாக நுகர்வோர் விவகார அதிகாரசபை தெரிவித்தது.

குறித்த பல்பொருள் அங்காடியில் உள்நாட்டு வெள்ளை பச்சையரிசி கிலோ 02



## வாழ்க்கைத் தரத்தை உயர்த்த அனைத்து முடிவுகளையும் அரசு மேற்கொள்ளும்

### சுங்கத் திணைக்களம் மேற்கொள்ளும் முயற்சிகள் பாராட்டத்தக்கவை - ஜனாதிபதி

நாட்டின் எதிர்கால முன்னேற்றத்திற்கும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை முன்னேற்றுவதற்கும் தற்போதைய அரசாங்கம் சாத்தியமான அனைத்து முடிவுகளையும் எடுக்கும் என்று ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க தெரிவித்தார்.

சர்வதேச சுங்க தினத்தை முன்னிட்டு நேற்று முன்தினம் (27) பிற்பகல் சுங்கத் திணைக்கள கேட்போர் கூடத்தில் நடைபெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க இந்தக் கருத்துக்களைத் தெரிவித்தார்.

இந்த வருடம் சர்வதேச சுங்க தினம் " சுபீட்சமான தேசத்தை உருவாக்க வினைத்திறனான சுங்கத் திணைக்களம்" என்ற தொனிப்பொருளின் கீழ் கொண்டாடப்படுகிறது.

1952 ஆம் ஆண்டு 17 ஐரோப்பிய நாடுகளின் பங்கேற்புடன் 02

## புசல்லாவையில் குளவி கொட்டி மாணவன் மரணம்

புசல்லாவை பிளக்பொரஸ்ட் தோட்டத்தில் பாடசாலைக்குச் சென்று பெற்றோருடன் வீடு திரும்பிய மாணவர்கள் குளவிக்கொட்டுக்கு இலக்காகியுள்ளனர். இதில் 8 வயது மாணவன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

குறித்த மாணவர்கள் கம்பளை வைத்தியசாலையில் சிகிச்சைக்காக நேற்று அனுமதிக்கப்பட்ட நிலையில், தரம் நான்கில் கல்வி பயிலும் எட்டு வயது நிரம்பிய பாடசாலை மாணவரொருவர் 02

## யாழ். பல்கலை செயல்பாடுகளுக்கு இடையூறு விளைவிக்க இடமளியோம்



யாழ்ப்பாணம் பல்கலைக்கழக விவகாரம் தொடர்பில் விரைந்து நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

பல்கலைக்கழக செயற்பாடுகளுக்கு இடையூறு விளைவிக்கும் எந்தவித செயற்பாடுகளுக்கும் இடமளிக்க போவதில்லை என்று அமைச்சரவைப் பேச்சாளர் வைத்தியர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை 02

## அதானி நிறுவனத்துக்கு அரசு புதிய முன்மொழிவு

மன்னார் மற்றும் பூநகரி காற்றாலை மின் திட்டத்தின் கீழ் மின்சார கொள்முதல் விலையை ஒரு அலகுக்கு 6 அமெரிக்க சத்துக்கும் கீழே குறைக்க அதானி கிரீன் எனர்ஜி நிறுவனத்துடன் அரசாங்கம் பேச்சுவார்த்தை நடத்தி வருவதாக அமைச்சரவை பேச்சாளரும் அமைச்சருமான நளிந்த ஜெயதிஸ்ஸ தெரிவித்தார். 02

# வடக்கு கடலில் அத்துமீறிய இந்திய மீனவர்கள் மீது சூடு

## இருவர் காயம்; 13 பேர் கைது

(பு.கஜிந்தன்)

இலங்கைக் கடற்பரப்பரப்புக்குள் அத்து மீறி மீன்பிடித்த 13 இந்திய மீனவர்கள் நேற்று (28) அதிகாலை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். கைது நடவடிக்கையின்போது கடற்படையினரின் துப்பாக்கிப் பிரயோகத்தில் இரு இந்திய மீனவர்கள் காயமடைந்து யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.



தமிழகத்தைச் சேர்ந்த 13 மீனவர்கள் எல்லைத் தாண்டி யாழ்ப்பாணம்-பருத்தித்துறை கடற்பரப்புக்குள் மீன்பிடியில் 02

## இந்தியா கண்டனம்

### காயமடைந்தோரை பார்வையிட்டார் துணைத் தூதர்

இலங்கை கடற்பரப்பில் வைத்து 13 இந்திய கடற்றொழிலாளர்கள் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்ட போது இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்துக்கு இந்திய வெளிவிவகார அமைச்சு கடுமையான எதிர்ப்பை வெளியிட்டுள்ளது.

இந்திய வெளிவிவகார அமைச்சு விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

புதுடெல்லியில் உள்ள பதில் இலங்கை உயர்ஸ்தானிகரை அழைத்து கடுமையான எதிர்ப்பை வெளியிட்டதாக இந்திய வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

அத்துடன் கொழும்பில் உள்ள இந்திய உயர்ஸ்தானிகரகமும் இந்த விடயம் தொடர்பில் இலங்கை வெளிவிவகார 02

## மாவை சேனாதி அதி தீவிர சிகிச்சைப்பிரிவில் அனுமதி



இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராஜாவின் உடல் நிலை மோசமடைந்து வருவதாக யாழ்.போதனா வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன.

அவர் அதி தீவிர சிகிச்சைப்பிரிவில், சிகிச்சை பெற்று வருவதாக யாழ். போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் த. சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.

நேற்று அதிகாலை வீட்டில் விழுந்த நிலையில் தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலையில் 02

## ஜனாதிபதியின் யாழ் விஜயம்: வேலையற்ற பட்டதாரிகள் கவனயீர்ப்பு போராட்டம் !

(பு.கஜிந்தன்)

ஜனாதிபதியின் யாழ். வருகையை முன்னிட்டு யாழ்ப்பாணத்தில் வேலையற்ற பட்டதாரிகள் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றை முன்னெடுக்கவுள்ளதாக வடமாகாண பட்டதாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று ஊடக சந்திப்பை மேற்கொண்டு வடமாகாண பட்டதாரிகள் சங்க ஊடக பேச்சாளர் கி.டனிசன் இவ்வாறு தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

வேலையற்ற பட்டதாரிகளின் கோரிக்கைக்கு சரியான வகையில் இதுவரை எந்தவொரு தரப்பினரும் தீர்வை தரவில்லை. வடக்கின் ஆளுநரிடமும் பல தடவைகள் 02

## ஆசிரியர் ஆலோசகர் சேவை: பரீட்சை நடாத்தி புதியவர்களை நியமிக்க கல்வியமைச்சு தீர்மானம்

(முகம்மட் முக்தார்)

கல்வியமைச்சால் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட இலங்கை ஆசிரியர் ஆலோசகர் சேவைக்கு உள்ளீர்ப்பு செய்யப்பட்டும் இதுவரை கடமையேற்காதவர்கள் கடமையேற்பதற்கான இறுதி சந்தர்ப்பம் பெப்ரவரி 15 வரை வழங்கப்படுவதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

இது தொடர்பாக கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் அமல் எதிரிசூரிய மாகாணக் கல்விப்பணிப்பாளர்கள், வலயக் கல்விப்பணிப்பாளர்களுக்கு அறிவித்துள்ளார். 02

## சுத்திகரிப்பில் குவிந்த பிளாஸ்ரிக் கழிவுகள்



(வி.சுகிர்தகுமார்)

அண்மையில் பெய்த அடைமழையினால் அக்கரைப்பற்று கல்முனை பிரதான வீதி, மணிக்கூட்டுக் கோபுரத்திற்கு அண்மையிலுள்ள வடிகானுக்குள் சேர்ந்த பிளாஸ்டிக் கழிவுகளை 02

## ஜனாதிபதி மீது வடக்கு மக்கள் நம்பிக்கை; நியூஸிலாந்திடம் கூறினார் ஆளுநர்



(பு.கஜிந்தன்)

ஜனாதிபதி அநுரகுமார தலைமையிலான அரசாங்கம் பாரபட்சமாக நடத்தாது என்றும், இந்த அரசாங்கத்தின் காலத்தில் தமக்கான நீதியைப் பெற்றுக் கொள்ளலாம் எனவும் வடக்கு மக்கள் நம்புகின்றனர் என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் ,நியூஸிலாந்துத் தூதுவர் டேவிட் பின்னியிடம் தெரிவித்துள்ளார். 02

## இலங்கையுடன் பேசி மீனவர் பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டும்

(திருச்சி எம். கே. ஷாகுல் ஹமீது)

மத்திய அரசு காலம் தாழ்த்தாது உடனடியாக இலங்கை அரசுடன் பேசி தமிழக மீனவர் பிரச்சினைக்கு



நிரந்தர தீர்வு காண வேண்டும் என்றும் மீனவர்கள் கைதை தடுக்க திமுக கூட்டணி எம்.பி.க்கள் நாடாளுமன்றத்தில் அழுத்தம் தர வேண்டும் என்று அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார். 02

## இந்தியா கண்டனம்..

அமைச்சிடம் கேள்வி எழுப்பியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் வாழ்வாதார தேவைகளைக் கருத்திற் கொண்டு கடற்றொழிலாளர்கள் பிரச்சினையை மனிதாபிமான ரீதியாக கையாள வேண்டும் என இந்தியா தொடர்ந்தும் வலியுறுத்தி வருவதாகவும், எந்த சந்தர்ப்பத்திலும் பலத்தைப் பயன்படுத்துவது ஏற்றுக் கொள்ளத் தக்க விடயமல்ல எனவும் இந்திய வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பில் இரு நாட்டு அரசாங்கங்களுக்கு இடையேயான புரிதல் கண்டிப்பான பின்பற்றப்பட வேண்டும் எனவும் இந்திய வெளிவிவகார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, குறித்த துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்தவர்களின் நிலைமை ஆபத்தாக இல்லை எனவும் அவர்களுக்கு தொடர்ந்தும் சிகிச்சையளிக்கப்பட்டு வருவதாகவும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

## வடக்கு கடலில்...

ஈடுபட்ட சமயமே கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மீனவர்களுக்கு காயம் ஏற்பட்டதன் காரணமாக கைதான இந்திய மீனவர்களை கடற்றொழில் நீரியல் வள திணைக்களம் பொறுப்பேற்க மறுத்ததையடுத்து காங்கேசன்துறை பொலிஸாரிடம் இந்திய மீனவர்கள் ஒப்படைக்கப்பட்டனர்.

பொலிஸாரின் நடவடிக்கைகளின் பின்னரே அவர்கள் மீது நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யவுள்ளதாக நீரியல்வள திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதேவேளை, இந்திய மீனவர்கள் மீதான கைது நடவடிக்கையின் போது கடற்படை வீரர் ஒருவர் இந்திய மீனவர்களின் படகில் ஏறி அவர்களை கைது செய்ய முயற்சித்தவேளை கடற்படை வீரருடன் படகு தப்பிச்செல்ல முற்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இதனையடுத்து ரோந்து படகில் சென்ற இலங்கை கடற்படையினர் துப்பாக்கி பிரயோகம் நடத்தியதாகவும் இதன் காரணமாகவே இந்திய மீனவர்கள் இருவர் காயமடைந்ததாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை,துப்பாக்கிப் பிரயோகத்தில் காயமடைந்த இந்திய மீனவர்களை யாழ்ப்பாணத்திலுள்ள இந்திய துணைத் தூதுவர் சாய்முரளி வைத்தியசாலைக்குச் சென்று பார்வையிட்டுள்ளார்.இதன்போது இந்திய மீனவர்களை நாட்டுக்கு அனுப்புவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

## பரீட்சை நடாத்தி...

பெப்ரவரி 15 ம் திகதி வரையும் இலங்கை ஆசிரியர் சேவைக்கான பொறுப்பினை ஏற்காத ஆசிரியர்களை உடனடியாக வெற்றிடமுள்ள பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்குமாறும் வலயக்கல்விப்பணிப்பாளர்கள் கேட்கப்பட்டுள்ளனர்.

இதேவேளைநாடளாவியரீதியில்வெற்றிடமாகவுள்ள இலங்கை ஆசிரியர் ஆலோசகர் சேவையில் பாடரீதியான வெற்றிடங்களை நிரப்புவதற்கான போட்டிப்பரீட்சையினை நடாத்துவதற்கான நடவடிக்கைகளில் கல்வி அமைச்சு ஈடுபட்டுள்ளது.

தற்போது ஆசிரியர் சேவையின் 2-1, முதலாம் தரத்திலுள்ள 50 வயதுக்குட்பட்ட ஆசிரியர்களிடமிருந்து இதற்கான விண்ணப்பங்களை இலங்கை ஆசிரியர் ஆலோசகர் சேவை பிரமாணக்குறிப்பிற்கமைய கோரவுள்ளதாகவும் மேலதிக செயலாளர் அமல் எதிரிசூரிய தெரிவித்தார்.

இலங்கை ஆசிரியர் ஆலோசகர் சேவையின் நியமன அதிகாரி கல்வியமைச்சு செயலாளர் என்ற வகையில் இலங்கை ஆசிரியர் ஆலோசகர் பதவிக்காக பதில், கடமைபார்க்கும் அடிப்படையில் நியமனம் வழங்கும் அதிகாரம் மாகாண கல்விப் பணிப்பாளர், வலயக்கல்விப் பணிப்பாளர்களுக்கும் வழங்கப்படவில்லை எனவும் அவ்வாறான நியமனங்கள் செல்லுபடியற்றதும் எனவும் அவர் தெரிவித்தா

## ஜனாதிபதி மீது வடக்கு...

வடக்கு மாகாண ஆளுநருக்கும், இலங்கை மற்றும் மாலைதீவுக்கான நியூஸிலாந்துத் தூதுவர் தலைமையிலான குழுவினருக்கும் இடையிலான சந்திப்பு நேற்றுக் (28)காலை ஆளுநர் செயலகத்தில் நடைபெற்றது.

வடக்கு மாகாணத்தின் தற்போதைய நிலைமைகள், பொருளாதார மேம்பாடு தொடர்பிலும் குறிப்பாக சுற்றுலாத்துறை தொடர்பிலும் வடக்கு மாகாண ஆளுநரிடம், தூதுவர் கேட்டறிந்து கொண்டார்.

பலாலியில் அமைந்துள்ள யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தின் செயற்பாடு தொடர்பாகவும் அதன் எதிர்கால அபிவிருத்தி தொடர்பாகவும் விரிவாக ஆளுநர் விளக்கமளித்தார். அத்துடன் பயணிகள் கப்பல் சேவை ஆரம்பிக்கப்பட்டு நடைபெறுகின்றமையும் எதிர்காலத்தில் பொருட்கள் கப்பல் சேவை நடைபெறவுள்ளமையையும் ஆளுநர் சுட்டிக்காட்டினார்.

புலம்பெயர் தமிழர்கள் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வந்திறங்கி வடக்கு மாகாணத்துக்கு வருவதற்காக போக்குவரத்துக்கு பெருமளவு நேரத்தை விரயமாக்கின்றனர் எனக் குறிப்பிட்ட ஆளுநர், கொழும்பிலிருந்து அநுராதபுரம் வரையிலாவது அதிவேக நெடுஞ்சாலை நிர்மாணிக்கப்படுவது அவசியம் எனவும் தெரிவித்தார்.

அதேவேளை கொழும்புக்கும், யாழ்ப்பாணத்துக்கும் இடையிலான உள்ளூர் விமான சேவைகளை அதிகரிப்பதற்கு கவனம் செலுத்துவது தொடர்பிலும், நியூஸிலாந்துத் தூதுவருக்குத் தெரியப்படுத்தினார்.

பொருளாதார நெருக்கடியின் தாக்கம் வடக்கு மாகாணத்தில் எவ்வாறு இருக்கின்றது என்பது தொடர்பில் நியூஸிலாந்துத் தூதுவர், ஆளுநரிடம் கேட்டறிந்து கொண்டார். விளிம்புநிலையில் உள்ள மக்கள் குறிப்பாக பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் இன்னமும் பாதிப்பை எதிர்கொண்டுள்ளன எனவும், ஒரு வேளை உணவுடன் அவர்கள் தமது அன்றாட உணவு உட்கொள்ளலை நிறுத்திக்கொள்கின்றனர் என்றும் ஆளுநர் குறிப்பிட்டார்.

பாடசாலை மாணவர்களுக்கு உணவு வழங்கும் செயற்றிட்டம் முன்னெடுக்கப்படுகின்றது என்றும் பாதிக்கப்பட்ட மக்களுக்காக அரசாங்கத்தால் அஸ்வெசும நலன்புரி திட்டத்தின் கீழ் உதவிகள் வழங்கப்படுகின்றன எனவும் ஆளுநர் தெரிவித்தார். இருப்பினும் தற்போதைய நடைமுறைகளின் கீழ் சரியான பயனாளிகளை இனம் காண்பதில் கள அலுவலர்கள் சிக்கல்களை எதிர்கொள்வதாகவும் சுட்டிக்காட்டிய ஆளுநர், நடைமுறைகளை மாற்றியமைப்பதன் மூலம் எதிர்காலத்தில் பயனாளிகளின் எண்ணிக்கையை குறைக்க முடியும் என்றும் குறிப்பிட்டார்.

பல்கலைக்கழக மாணவர்களுக்கு அரசாங்கத்தால் பல்வேறு கொடுப்பனவுகள் வழங்கப்படுகின்றபோதும் தற்போதைய வாழ்க்கைச் செலவு அதிகரிப்புக்கு மத்தியில் அவை போதுமானதாக இல்லை என்றும் ஆளுநர் தெரிவித்தார்.

## இலங்கையுடன் பேசி...

அதிமுக பொதுச்செயலாளரும், சட்டமன்ற எதிர்க்கட்சி தலைவருமான எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது,

25.01.2025ம் திகதி வங்கக்கடலில் மீன் பிடித்துக்கொண்டிருந்த இராமேஸ்வரத்தை சேர்ந்த மீனவர்கள் 33 பேரை இலங்கை கடற்படை கைது செய்ததுடன், அவர்களது படகுகளையும் பறிமுதல் செய்துள்ளதாக வரும் செய்தி அதிர்ச்சியளிக்கிறது.

மீன்பிடிக்கச் செல்லும் தமிழக மீனவர்கள் அடிக்கடி இலங்கை கடற்படையினரால் கைது செய்து சிறையில் அடைக்கப்படுவதும், மீனவர்களது படகுகளை இலங்கை கடற்படையினர் பறிமுதல் செய்வதும், சேதப்படுத்துவதும் அதிகரித்துள்ளது என்றும், திமுக அரசு மீனவர்கள் கைது செய்யப்பட்டவுடன், மத்திய அரசுக்கு கடிதம் எழுதுவதுடன் தனது வேலை முடிந்துவிட்டதாக கருதி அடுத்த வேலையை பார்க்கப் போய்விடுவதாக பாதிக்கப்படும் மீனவர்களின் குடும்பத்தினர் மிகுந்த வருத்தத்துடன் தெரிவிக்கின்றனர்.

தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் அடிக்கடி கைது செய்யப்படுவதையும், படகுகளை பறிமுதல் செய்வதை தடுக்கவும் திமுக மற்றும் கூட்டணி கட்சிகளின் 39 எம்.பி.க்களும் நாடாளுமன்றத்தில் உரிய அழுத்தம் கொடுக்க வலியுறுத்துகிறேன்.

மத்திய அரசும் காலம் தாழ்த்தாது உடனடியாக இலங்கை அரசுடன் பேசி தமிழக மீனவர்கள் கைதுசெய்யப்படும் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காண நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அனைத்திந்திய அதிமுக சார்பில் வலியுறுத்துகிறேன் இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது

## சுத்திகரிப்பில் குவிந்த...

அகற்றும் பணி வீதி அபிவிருத்தி அபிவிருத்தி அதிகார சபையின் ஒத்துழைப்போடு நேற்று முன்தினம் (27) முன்னெடுக்கப்பட்டது.

வடிகான்கள் மழைகாலத்திற்கு முன்னர் சுத்திகரிப்புச் செய்யப்படவில்லை. இதனால், பிரதான வீதியும் அதனை அண்டிய பகுதியும் ஏனைய வீதிகளும் வெள்ளத்தில் மூழ்கியிருந்ததால், மக்கள் பலத்த சிரமங்களை எதிர்கொண்டிருந்தனர்.

இது சம்பந்தமாக விடுக்கப்பட்ட கோரிக்கையையடுத்து,வீதி அபிவிருத்தி அபிவிருத்தி அதிகார சபையின் ஒத்துழைப்போடு குறித்த இடத்தில் வடிகான்களைத் தோண்டிய போது வந்து குவிந்த பிளாஸ்ரிக் கழிவுகளையே படத்தில் காண்கிறீர்கள்.

ஆலையடிவேம்பு பிரதேச சபை, அக்கரைப்பற்று மாநகர சபைக்குட்பட்ட வடிகான்பகுதிகள், துப்புரவு செய்யப்பட வேண்டும் என்பதுடன் அரசாங்கத்தின் கிளீன் சிறிலங்கா வேலைத்திட்டம் அக்கரைப்பற்று நகர் பகுதியிலும் உரிய முறையில் முன்னெடுக்கப்பட வேண்டும் என்பது பொது மக்களின் கோரிக்கையாகும்.

## அதிக விலையில்...

ஒன்று 255 ரூபாய்க்கு விற்பனை செய்தமை தொடர்பில் கம்பஹா மாவட்ட நுகர்வோர் அதிகார சபை அதிகாரிகள் மஹர நீதிமன்றில் முன்னிலைப்படுத்திய சாட்சியங்களின்படி, இந்த அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

கடந்த சில தினங்களில் அரிசியை அதிக விலைக்கு விற்பனை செய்த வியாபாரிகளுக்கு எதிரான வழக்குகளுக்காக நீதிமன்றம் 3 மில்லியனுக்கும் அதிகமான தொகையை அபராதமாக விதித்துள்ளதாக அதிகாரசபை கூறுகிறது.

அரிசியை அதிக விலைக்கு விற்பனை செய்கின்றமை தொடர்பில் நுகர்வோர் அதிகார சபையானது அண்மைய தினங்களில் 140 சுற்றிவளைப்புகளுக்கு மேல் மேற்கொண்டுள்ளதாகவும் எதிர்வரும் நாட்களிலும் சுற்றிவளைப்புகளை மேற்கொள்ளவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## புசல்லாவையில்...

சிகிச்சை பலனின்றி நேற்று (28) காலை உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சம்பவம் பற்றிய மேலதிக விசாரணைகளை புசல்லாவை மற்றும் கம்பளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## வாழ்க்கை தரத்தை உயர்த்த...

சுங்க ஒத்துழைப்பு கவுன்சிலாக நிறுவப்பட்ட இந்த சர்வதேச அமைப்பில் 1967 ஆம் ஆண்டு இலங்கை உறுப்பினராக இணைந்தது. 1994 ஆம் ஆண்டில், சுங்க ஒத்துழைப்பு கவுன்சில் உலக சுங்க அமைப்பு என பெயரிடப்பட்டது.

1953 ஆம் ஆண்டு ஜனவரி 26 ஆம் திகதி பெல்ஜியத்தின் பிரஸ்ஸல்ஸில் நடைபெற்ற சுங்க ஒத்துழைப்பு கவுன்சிலின் முதல் அமர்வை நினைவுகூரும் வகையில் இந்தத் தினம் சர்வதேச சுங்க தினமாக பெயரிடப்பட்டது. அதன்படி, ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 26 ஆம் திகதி, உலகின் அனைத்து நாடுகளிலும் உள்ள சுங்க நிறுவனங்கள் சர்வதேச சுங்க தினத்தைக் கொண்டாடுகின்றன.

யுகத்திற்கு ஏற்ற நிறுவனக் கட்டமைப்பை உருவாக்கத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும், இலங்கை சுங்கம், மதுவரித் திணைக்களம் மற்றும் உள்நாட்டு இறைவரித் திணைக்களம் ஆகிய நிறுவனங்களில் கட்டமைப்பு ரீதியான சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்படும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

காலத்தின் சவால்களுக்கு ஏற்ப சட்டம் அல்லது நிறுவனங்கள் மாற வேண்டும் என்றும் எந்தவொரு சட்டமோ அல்லது நிறுவனமோ எக்காலமும் நிலையாக இருக்க முடியாது என்றும் ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க தெரிவித்தார்.

ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க மேலும் கருத்து தெரிவிக்கையில்:

கடந்த ஆண்டு சுங்கத்திற்கு வழங்கப்பட்ட பொறுப்பு நிறைவேற்றப்பட்டுள்ளது. பொருளாதாரத்தை சீராக்க சுங்கம் மேற்கொண்ட முன்னெடுப்புகள் பாராட்டத்தக்கவை. கடந்த ஆண்டு சுங்கம் அடைந்த இலக்குகளை நாங்கள் பாராட்டுறோம். வீழ்ச்சியடைந்த நாட்டின் பொருளாதாரத்தை, வருவாய் இலக்குகளை அடைவதன் மூலம் மட்டும் மீண்டும் கட்டியெழுப்ப முடியாது. பொருளாதார நெருக்கடியைச் சமாளிக்க, வருமான விகிதத்தை அதிகரிக்க வேண்டும். பொருளாதார சரிவு காரணமாக இறக்குமதி மற்றும் ஏற்றுமதி சந்தை சுருங்கியது. சர்வதேச நாணய நிதியத்தின் அளவீடுகளின்படி நாம் அனைத்து பணிகளையும் மேற்கொள்கிறோம். எனவே, மேலோட்டமாகப் பார்க்கும்போது பொருளாதார தேகம் மீண்டுவிட்டதாகத் தோன்றினாலும், முழு பொருளாதார கட்டமைப்பும் பாதிக்கப்பட்டுள்ளது. எனவே, பொருளாதார நெருக்கடியை சீராக்க நாம் கவனமாக செயற்பட வேண்டும்.

ஒரு சிறிய தவறு கூட பொருளாதாரத்தில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தும். எனவே, சுங்கத் திணைக்களம் 2550 பில்லியன் ரூபாய் வருமான இலக்கை எட்டுவதற்கு கூட்டாகச் செயல்பட வேண்டும்.

சுங்கத்திற்கான வசதிகளை வழங்குவது தொடர்பிலும் புதிய சம்பள அளவை ஸ்தாபிப்பது தொடர்பிலும் பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டன. அது குறித்து நிதியமைச்சு, திறைசேரியுடன் கலந்துரையாடி தீர்வொன்றை வழங்க எதிர்பார்க்கிறேன்.

இந்த ஆண்டு வரவு செலவு திட்டத்தில் அரச ஊழியர்களின் அடிப்படை சம்பளம் அதிகரிக்கப்படவுள்ளது. அரச சேவையை மேலும் திறம்படச் செயற்படுத்த, டிஜிட்டல் மயமாக்கல் மற்றும் தொழில்நுட்பத்தை இணைத்துக்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது. வலுவான நிறுவன கட்டமைப்புகளை உருவாக்குவதற்கான சட்ட சீர்திருத்தங்களை மேற்கொள்ள நடவடிக்கை எடுப்போம்.

முன்னைய அரசியல் தரப்பு மற்றும் அரச சேவை பொறிமுறைக்கு இடையே முரண்பாடுகள் இருந்தன. அந்த கருத்து வேறுபாடுகள் காரணமாக நிறுவன கட்டமைப்பை வலுப்படுத்த அரசியல் தரப்பில் கொண்டு வரப்பட்ட சீர்திருத்தங்களை சரியான நேரத்தில் மேற்கொள்ள முடியவில்லை. சரியான நேரத்தில் நல்லதொரு நிறுவன கட்டமைப்பை உருவாக்க தவறியதால் எதிர்பார்க்கப்பட்ட பிரதிபலன்கள் கிடைக்கவில்லை. அதனால் நாம் பல விடயங்களை கையகப்படுத்தும் முன்பாக வெளியாட்கள் அவற்றை கைப்பற்றிக் கொண்டனர். இதன் விளைவாக, இலங்கையின் இயற்கையான அமைவிடத்தைப் பயன்படுத்துவதற்கான சில வாய்ப்புகளை ஒரு நாடு என்ற வகையில் இழந்திருக்கிறோம்.

எதிர்காலத்தில் இலங்கை துறைமுகத்தில் 113 இலட்சம் கொள்கலன் செயற்பாடுகளை முன்னெடுக்க தேவையான முன்னெடுப்புகள் செய்யப்பட வேண்டும். அதற்கான கூட்டு முயற்சியை ஊழியர்கள் மேற்கொள்ள வேண்டும். அவ்வாறு செய்யாமல் நாம் ஒரு நாடாக முன்னோக்கிச் செல்ல முடியாது. இந்த வருடத்தில் சுங்க திணைக்களத்திற்கு 2550 பில்லியன் ரூபா வருமான இலக்கு வழங்கப்பட்டுள்ளது.

இதன்போது, சிறப்பாக பணியாற்றிய 20 சுங்க அதிகாரிகளை பாராட்டும் விதமாக உலக சுங்க அமைப்பின் சான்றிதழ்கள் ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவினால் வழங்கி வைக்கப்பட்டன. மேலும் இரண்டு அதிகாரிகளுக்கு தகைமை விருதுகளும் வழங்கப்பட்டன.

அதனையடுத்து சுங்கப் பணிப்பாளர் நாயகத்தினால் ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவிற்கு சுங்க நினைவுச் சின்னம் ஒன்றும் வழங்கி வைக்கப்பட்டது.

தொழில் அமைச்சர் மற்றும் பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர் கலாநிதி அனில் ஜயந்த பெர்னாண்டோ, நிதி மற்றும் திட்டமிடல் பிரதி அமைச்சர் கலாநிதி ஹர்ஷன சூரியப்பெரும, ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க, சட்டமா அதிபர் பாரிந்த ரணசிங்க, நிதி அமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தன, மத்திய வங்கி ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க, சுங்கப் பணிப்பாளர் நாயகம் சரத் நோனிஸ் உட்பட சுங்கத் திணைக்கள அதிகாரிகள் பலரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்

## யாழ். பல்கலை செயல்பாடுகளுக்கு...

அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

தொழிற்சங்க நடவடிக்கைக்குச் செல்வதானால், தொழிற்சங்க நடவடிக்கைக்கு முன்னர் அமைச்சுடன் பேச்சுவார்த்தை நடத்துவது தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும் என தெரிவித்த அமைச்சரவைப் பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ, பேச்சுவார்த்தையின் பின்னர் அடுத்தக்கட்டம் தொடர்பில் சிந்திக்கலாம் என்றும் சுட்டிக்காட்டினார்.

## அதானி நிறுவனத்துக்கு...

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று செவ்வாய்கிழமை நடைபெற்ற வாராந்த அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

“ஆரம்பத்தில் ஒரு அலகுக்கு 8.25 சதம் (டொலர்) என முன்மொழியப்பட்ட இந்த திட்டம் போட்டி ஏலம் இல்லாததால் விமர்சனங்களை எதிர்கொண்டது.இந்த திட்டம் ரத்து செய்யப்படாது, இந்த ஒப்பந்தம் குறித்த விவாதங்கள் 2022 இல் தொடங்கின.புதுப்பிக்கத்தக்க எரிசக்தி முயற்சிகள் அவசியமாகும். இதில் சூழல் பாதிப்புகள் இருக்கும். ஆனால் எமது நாட்டுக்கு அதிக பயன்தரும் வகையில் திட்டம் மாற்றியமைக்கப்படும்,

அதன்காரணமாகவே ஒரு அலகு 6 சத்துக்கும் கீழான அமெரிக்கா டொலரை அரசாங்கம் முன்மொழிகிறது” என்றும் அமைச்சர் கூறினார்.

## ஜனாதிபதியின் யாழ்

கோரிக்கை முன்வைத்திருந்தும் அவரும் எம்மை கண்டு கொள்ளாதவராகவே இருந்துவருகின்றார்.

இந்நிலையில் வேலையற்ற பட்டதாரிகள் ஆகிய நாம் நாளை (இன்று 29) முதல் 31ஆம் திகதி வரை எமது பிரச்சினைகளை வெளிக்கொணரும் வகையில் கவன ஈர்ப்பு போராட்டம் ஒன்றை முன்னெடுக்கவுள்ளோம்.

குறிப்பாக எமது மூன்று நாள் போராட்டமானது 29 ஆம் திகதி பசுமை தானம் என்னும் தொனிப்பொருளில் மரக்கன்று விநியோகித்தலுடன் யாழ் வீரசிங்கம் மண்டபம் முன்றலில் ஆரம்பிக்கப்படுவதுடன், 30 ஆம் திகதியன்று கலைத்தூது கலையரங்கில் இரத்த தான முகாமும் நடைபெறவுள்ளது.

இறுதி 31 ஆம் திகதியன்று ஜனாதிபதியின் யாழ் வருகையை முன்னிட்டு மாவட்ட செயலகம் முன்பாக பட்டதாரிகள் ஒன்றிணைந்து ஜனாதிபதிக்கு எமது நிலையை எடுத்துக் கூறும் வகையில் கவன ஈர்ப்பு போரட்டம் ஒன்றை முன்னெடுக்கவுள்ளோம் என அவர் தெரிவித்தார்.

வடமாகாணம் தழுவிய ரீதியில் உள்ள பட்டதாரிகளின் சார்பில் ஒலிக்கும் குரலாக நடைபெறும் எமது இந்த போராட்டத்துக்கு வலுச்சேர்க்க அனைத்து தரப்பினரிடமிருந்தும் ஒத்துழைப்பை எதிர்பார்க்கின்றோம் என்றும் அவர் அழைப்பு விடுத்தார்.

இதேநேரம் வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தின் தலைவர் சசிதரன் கூறுகையில், வேலையற்ற பட்டதாரிகள் என்ற வகைக்குள் கலைத்துறையில் பட்டங்களை பெற்றவர்களே முழுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.இந்த நிலைக்கு நாட்டின் கல்வி கட்டமைப்பே காரணமாக இருக்கின்றது.

இதேவேளை, நாட்டின் கல்வி திட்டத்தின் ஊடாக முறையான தகுதி திறனை நாம் கொண்டிருக்கின்றோம். எமக்கு வேலைவாய்ப்பு வழங்கபடவில்லையெனில் அதற்கு முழுப் பொறுப்பும் இந்த கல்வி திட்டத்தினை கொண்டிருக்ககூடிய அரசினதே ஆகும்.

வடமாகாணத்தில் இன்று பல்வேறுபட்ட திணைக்களங்களில் வேலைவாய்ப்பு வெற்றிடம் காணப்படுகின்றது.இலங்கை அரச கட்டமைப்பின் பட்டபடிப்பு மூலமே நாம் கல்வித் தகுதியை பெற்றுள்ளோம்.அதற்கு உரிய தொழில் வாய்ப்புகள் கிடைக்க வேண்டும் என்பதற்காகவே, அரசுக்கு அழுத்தம் கொடுக்கவே நாம் இவ்வாறு போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றோம்.

இதேநேரம் ஆளுநர் அலுவலகத்தினை முற்றுகையிட்டு எமது நிலைப்பாடுகள் அடங்கிய கோரிக்கை கடிதம் ஒன்றினை வழங்கியுள்ளோம். மேலும் அரசாங்கம் உருவாகி சில மாதங்களே கடந்துள்ளது. இந்த அரசாவது எமக்கான தீர்வை தரும் என நாம் எதிர்பார்த்தோம். அதுவும் ஏமாற்றமாகவே இருக்கின்றது என்றும் தெரிவித்தார்

## மாவை அதி தீவிர

அனுமதிக்கப்பட்ட அவர் பின் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.


அவருக்கு எடுக்கப்பட்ட சி.ரி. ஸ்கேன் பரிசோதனையில் தலையில் கணிசமான அளவில் இரத்தப் பெருக்கு இருப்பதை வைத்திய நிபுணர்கள் கண்டறிந்துள்ளதாக வைத்தியசாலையின் பணிப்பாளர் சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.அவருக்கு மூளையில் ஏற்பட்ட இரத்த கசிவு காரணமாக ஆபத்தான நிலையில் செயற்கை சுவாச உதவியுடன் சிகிச்சை பெற்று வருவதாக பணிப்பாளர் தனது சமூக ஊடக பதிவில் மேலும் தெரிவித்துள்ளார்.

மாவை சேனாதிராஜாவின் உடல் நிலை மோசமடைந்து வருவதாக யாழ். போதனா வைத்தியசாலையின் பிந்திய தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த வருடம் டிசம்பர்,14இல் வவுனியாவில் இடம்பெற்ற இலங்கை தமிழ் அரசுக்கட்சியின் மத்திய குழுக்கூட்டத்திற்கு பின்னர் அவர் மனச்சோர்வுடன் காணப்பட்டதாகவும், படிப்படியாக தடுமாற்ற கதைகள் கதைத்து வந்ததாகவும் இந்நிலையிலேயே அவர் நேற்று கீழே விழுந்து சுயநினைவை இழந்துள்ளதாகவும் அவரின் மகன் கலையமுதன் தெரிவித்துள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

## புகையிரத இ - டிக்கட்

# தேவைக்கேற்ப விநியோகம் இன்மையே இணையவழி மோசடிகளுக்கு காரணம்



## பிரதி அமைச்சர் பிரசன்ன குணசேன

(எம்.ஏ.அமீனுல்லா)

மலையகப் பாதையில் புகையிரத பயணச்சீட்டுகள் தேவைக்கேற்ப வகையில் விநியோகம் இல்லாத காரணத்தினாலேயே பயணச்சீட்டுகள் தொடர்பான இணையதள மோசடிகள் இடம்பெற்று வருவதாக கண்டறியப்பட்டுள்ளதாக போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் பிரதி அமைச்சர் பிரசன்ன குணசேன தெரிவித்துள்ளார்.

மேலும் சம்பந்தப்பட்டுள்ள புகையிரத பயணச்சீட்டு மோசடி தொடர்பில் தொடர்ந்தும் முறையான விசாரணைக்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளும் அதே வேளை, மக்களின் தேவைக்கேற்ப மலையகத்திற்கான புகையிரத பாதையில் பல புதிய புகையிரத வழித்தடங்களை செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளதாகவும் பிரதி அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

கண்டியில் நேற்று முன்தினம் (26) ஊடகங்களுக்கு தெரிவிக்கையிலே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு தொடர்ந்துரையாற்றிய பிரதி அமைச்சர் கலாநிதி பிரசன்ன குணசேன. மலையக புகையிரத வீதிகளுக்கான பயணச்சீட்டமோசடிகளை வெறுமனே சட்டங்களால் மாத்திரம் கட்டுப்படுத்த முடியாது. அதற்கான அதீத தேவையுடனான குறைபாடுகள் நிவர்த்தி செய்யும் பொது, அவ்வாறான மோசடிகளை தவிர்த்துக்கொள்ள முடியும்.

நீண்ட நாட்களாக புகையிரத டிக்கெட்டுகளை முன்பதிவு செய்து அதிக விலைக்கு விற்பனை செய்யும் மோசடி தொடர்பில் குற்றப்புலனாய்வு திணைக்களம் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதுடன், அதனூடாக மோசடிகளை மேற்கொண்டவர்கள் பீதியடைந்துள்ளதாகவும், பிரச்சினைக்கான காரணத்தை கண்டறிந்து அதற்கான தீர்வுகளை வழங்க முயற்சிப்பதாகவும் பிரதி அமைச்சர் மேலும் வலியுறுத்தினார்.



யாழ் கடற்பரப்பில் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் காயமடைந்த இந்திய மீனவர்களை யாழ். இந்திய துணைத் தூதுவர் சாய்முரளி வைத்தியசாலைக்குச் சென்று பார்வையிட்டார்.

### அரச ஊழியர்களுக்கு விசேட லீவு

## சுற்றுநிருபம் வெளியிடப்படாததால் உத்தியோகத்தர்கள் கவலை

(முகம்மட் முக்தார்)

நாடளாவிய ரீதியில் கடந்த நவம்பர், டிசம்பர் மாதங்களில் ஏற்பட்ட வெள்ளம், சூறாவளி உள்ளிட்ட இயற்கை அழிவுகளால் கடமைக்கு செல்லமுடியாத அரச ஊழியர்களுக்கு லீவு வழங்குதல் தொடர்பான சுற்றறிக்கையினை பொதுநிருவாக அமைச்சு இன்னும் வெளியிடவில்லை என அரச உத்தியோகத்தர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இவ்வாறு விசேட லீவு வழங்குவதற்கான சுற்று நிருபம் வெளியிடப்படாமை காரணமாக அக்காலப்பகுதியில் கடமைக்கு செல்லாதோருக்கு சொந்த லீவை பெற வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளதாகவும் உத்தியோகத்தர்கள் தெரிவிக்கின்றனர்.

வழமையாக இவ்வாறான இயற்கை அழிவுகள் ஏற்பட்டு ஒரு மாத காலத்திற்குள் அசாதாரணமான காலப்பகுதியை விசேட லீவாக கணிக்கும் சுற்றறிக்கையினை பொது நிருவாக அமைச்சு வழமையாக வெளியிடுகின்ற போதிலும் இம்முறை அவ்வாறான சுற்றுநிருபம் இதுவரை வெளியிடப்படவில்லை.

வடக்கு, கிழக்கு, மலையகம், வடமேல், மத்தி, ஊவா உள்ளிட்ட பல மாகாணங்களில் வெள்ளம், மண்சரிவு, சூறாவளி என்பன ஏற்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இக்காலப்பகுதியில் பாடசாலைகள் மூடப்பட்டு, க.பொ.த.உயர்தர பரீட்சை நடவடிக்கைகளும் நிறுத்தப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

## உங்கள் ராசிபலன் எப்படி

குரோதி வருடம் தை மாதம் 16ஆம் நாள் புதன்கிழமை

**மேஷம்** இன்று உங்களுக்கு சாதகமான நாள்.

**ரிஷபம்** இன்று நீங்கள் நம்பிக்கையான மனநிலை கொண்டிருப்பீர்கள்.

**மிதுனம்** பணியிடத்தில் பதட்டமான சூழ்நிலை காணப்படும்.

**கடகம்** இன்று நற்பலன்கள் கிடைக்கும் நாள்.

**சிம்மம்** இன்று ஆன்மீக ஈடுபாடு ஆறுதலை அளிக்கும்.

**கன்னி** இன்று வருத்தப்படும்படியான சில சூழ்நிலை காணப்படும்.

**துலாம்** இன்று ஆற்றலும் ஆரோக்கியமும் குறைந்து காணப்படும்.

**விருச்சிகம்** இன்று பண வரவு அதிகமாக காணப்படும்.

**தனுசு** பணியிடச் சூழல் மகிழ்சிகரமாக இருக்காது.

**மகரம்** இன்று திட்டமிட்டு முயற்சி செய்தால் நல்ல பலன் கிடைக்கும்.

**கும்பம்** இன்று அர்த்தமுள்ள நாளாக இருக்காது.

**மீனம்** இன்று உங்களுக்கு சிறப்பான நாள்.

## இன்றைய பஞ்சாங்கம்

**திதி:** இன்று மாலை 07:21 வரை அமாவாசை பின்பு பிரதமை.
**நட்சத்திரம்:** இன்று காலை 09:20 வரை உத்திராடம் பின்பு திருவோணம்.
**யோகம்:** அமிர்த,சித்த.
**சந்திராஷ்டமம்:** புனர்பூசம்.
**சூலம்:** வடக்கு.
**இராகு காலம்:** 12:00 PM முதல் 01:30 PM வரை.
**குளிகை:** 10:30 AM முதல் 12:00 PM வரை.
**எமகண்டம்:** 07:30 AM முதல் 09:00 AM வரை.

# இந்தியா - சீனா இடையே மீண்டும் நேரடி விமான சேவை

(திருச்சி எம்.கே.ஷாகுல் ஹமீது)

இந்தியா–சீனா இடையே மீண்டும் நேரடி விமான சேவை தொடங்கவும் கைலாஷ் மானசரோவர் யாத்திரையை மீண்டும் தொடங்கவும் கொள்கை அளவில் இருதரப்பும் ஒப்புதல் அளித்துள்ளன.

இரு நாடுகளுக்கு இடையிலான பரஸ்பர உறவுகள் நிறுவப்பட்டதன் 75வது ஆண்டு நிறைவைக் குறிக்கும் வகையில், இந்தியாவும் சீனாவும் இதற்கு ஒப்புக் கொண்டுள்ளன. இந்தியா–சீனா இடையே மீண்டும் நேரடி விமான சேவையை தொடங்க இரு நாடுகளும் திங்கட்கிழமை முடிவெடுத்துள்ளன. கொரோனா பெருந்தொற்று, எல்லையில் பதற்றம் என இருதரப்பு உறவில் விரிசல் ஏற்பட்டிருந்த நிலையில், 2020–க்குப் பிறகு மீண்டும் நேரடி விமான சேவை தொடங்கப்படவுள்ளது.

பல்வேறு துறைகளில் இந்தியா–சீனா இடையேயான உறவை மேம்படுத்துவது தொடர்பாக அந்நாட்டு அதிகாரிகளை சந்தித்து ஆலோசனை நடத்த இந்திய வெளியுறவுத் துறை செயலாளர் விக்ரம் மிஸ்ரி இரு நாள் பயணமாக சீனா சென்றுள்ளார். சீன வெளியுறவு அமைச்சர் வாங் யி உள்ளிட்ட உயரதிகாரிகளுடன் மிஸ்ரி நடத்திய பேச்சுவார்த்தையில் உடன்பாடு ஏற்பட்டதயடுத்து இந்த முடிவெடுக்கப்பட்டுள்ளதாக இந்திய வெளியுறவு அமைச்சகம் திங்கள்கிழமை தெரிவித்தது.

இதுகுறித்து இந்திய வெளியுறவு அமைச்சகம் வெளியிட்ட செய்திக்குறிப்பில், 'ரஷியாவின் காஸன் நகரில் கடந்தாண்டு நடைபெற்ற பிரிக்ஸ் மாநாட்டின்போது இந்திய பிரதமர் மோடி மற்றும் சீன அதிபர் ஜி ஷின்பிங் இருவரும் சந்தித்தனர். அப்போது எல்லை விவகாரங்கள் குறித்து இரு நாட்டு தலைவர்களும் மேற்கொண்ட ஒப்பந்தத்தை இருதரப்பும் அமுல்படுத்தி வருகிறது.அதைத் தொடர்ந்து மக்கள் தொடர்பை மேம்படுத்துவது, இருதரப்பை மறுசீரமைப்பது குறித்து இருநாடுகளும் பல்வேறு முன்னெடுப்புகளை மேற்கொண்டு வருகின்றன.

அந்தவகையில், 2020–க்கு பிறகு இந்தியா–சீனா இடையே மீண்டும் நேரடி விமான சேவைகளை தொடங்க இருநாடுகளும் முடிவெடுத்துள்ளன. இதற்காக இரு நாடுகளைச் சேர்ந்த நிபுணர் குழுவும் விரைவில் சந்தித்து நடைமுறைகளை வகுக்கவுள்ளனர். 2025 கோடைகாலம் முதல் கைலாஷ்–மானசரோவர் யாத்திரையை தொடங்கவும் முடிவெடுக்கப்பட்டுள்ளது' என தெரிவிக்கப்பட்டது. சீன வெளியுறவு அமைச்சராக மட்டுமின்றி இந்தியா–சீனா உறவில் சீனாவின் சிறப்பு பிரதிநிதியாகவும் வாங் யி உள்ளார். கடந்த மாதம் இரு நாடுகளின் சிறப்பு பிரதிநிதிகளும் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்திய நிலையில் இரு நாள் பயணமாக விக்ரம் மிஸ்ரி சீனா சென்றுள்ளார்.

சீனா–இந்தியா இடையேயான உறவு மேம்படுவதால் இரு நாட்டு மக்கள் மட்டுமின்றி தெற்குல நாடுகளின் பாதுகாப்புக்கும் அது வலு சேர்க்கும். குறிப்பாக ஆசிய பிராந்தியத்தில் அமைதி, ஸ்திரத்தன்மை மற்றும் வளர்ச்சிக்கு இரு நாடுகளிடையே நல்லுறவு நீட்டிப்பது அவசியமானது' என தெரிவிக்கப்பட்டது.

# மாகாணக் கல்விப்பணிப்பாளர் பதவிக்கு விண்ணப்பம் கோரல்

### வடக்கு, கிழக்கு, மேல் மாகாணங்களில் வெற்றிடங்கள்

(முகம்மட் முக்தார்)

வெற்றிடமாகவுள்ள மாகாணக் கல்விப் பணிப்பாளர் பதவிகளை நிரப்புவதற்கான விண்ணப்பங்களை கோருவதற்கான அனுமதியை அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கல்விச்சேவைக்குழு கல்வி அமைச்சிற்கு வழங்கியுள்ளதாக குழுவின் செயலாளர்.ஏ.ஆர்.பி.விமலவீர தெரிவித்தார்.

வடக்கு, கிழக்கு, மேல் மாகாணங்களுக்கான மாகாணக் கல்விப் பணிப்பாளர் பதவிகளுக்கான வெற்றிடங்கள் நிலவுகின்றன. இப்பதவிகளில் கடமையாற்றியோர் இலங்கை கல்வி நிருவாக சேவையின் முதலாம் தர விசேட வகுப்புக்கு பதவி உயர்வு பெற்றமையால் இப்பதவிகள் வெற்றிடமாகின. இப்பதவிக்கு நியமன அதிகாரி அரச சேவை ஆணைக்குழுவின் கல்விச்சேவைக்குழு எனவும் விண்ணப்பம் கோரி, நேர்முக பரீட்சையினை நடாத்தும் அதிகாரம் கல்வி அமைச்சுக்குரியது எனவும் செயலாளர் விமலவீர தெளிவுபடுத்தினார். தற்போது மாகாணக் கல்விப் பணிப்பாளர் பதவி இலங்கை கல்வி நிருவாக சேவை தரம் ஒன்றுக்கானதாயினும் அதனை இலங்கை கல்வி நிருவாக சேவை முதலாம் வகுப்பு விசேட தர பதவிக்குரியதாக மாற்றுவதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்படுவதாகவும் குழுவின் செயலாளர் விமலவீர மேலும் தெரிவித்தார்.

இதேவேளை மாகாணக் கல்விப்பணிப்பாளர் பதவியினை மாகாணங்களுக்கிடையே இடமாற்றம் செய்யும் பதவியாகவும் மாற்றியமைக்கவும் தேவையான திருத்தங்கள் சேவைப்பிரமாணக்குறிப்பில் செய்யப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

## கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் இன்று அறிவோர் ஒன்று கூடல்

கொழும்புத் தமிழ் சங்கத்தில் இன்று 29ஆம் திகதி புதன்கிழமை அறிவோர் ஒன்று கூடல் நிகழ்ச்சி நடைபெறவுள்ளது.

சங்கத்தின் உதவி நிதிச்செயலாளர் பா.நந்தகுமார் தலைமையில் மாலை 5.30 மணிக்கு விநோதன் மண்டபத்தில் இந்நிகழ்வு நடைபெறவுள்ளது. அறிவோர் ஒன்று கூடல் நிகழ்ச்சியில் "தமிழர் பிரதேசங்களில் பெற்றோர்களும் சொத்துக்களும்" எனும் தலைப்பில் கிழக்குப் பல்கலைக்கழக மேனாள் முதுநிலை விரிவுரையாளர் முனைவர் ஞா.தில்லைநாதன் உரையாற்றவுள்ளார்.

# பல்கலைக்கழக மாணவர்களை இலக்கு வைத்துள்ள மதுசார நிறுவனங்களும், போதைப்பொருள் வியாபாரிகளும்

சர்வதேச ரீதியாக இடம்பெறும் அகால மரணங்களுள் 5.3 வீதமான மரணங்கள் மதுசார பாவனையினால் ஏற்படுவதோடு எமது நாட்டில் வருடாந்தம் சுமார் 100,000 பேர் அகால மரணமடைவதாக மதுசாரம் மற்றும் போதைப்பொருள் தொடர்பான தகவல் மத்திய நிலையம் தெரிவிக்கின்றது. மேலும் சமூக, பொருளாதார சீர்கேடுகள் பலவற்றிற்கு மதுசாரம் காரணமாக அமைகின்றது எனவும் கஞ்சா மற்றும் போதைப்பொருள் பாவனைகளால் பல்வேறு மன நோய்கள் ஏற்படுவதோடு, அவற்றிலும் பல சமூக, பொருளாதார சீர்கேடுகள் ஏற்படுகின்றதாகவும் அம் மத்திய நிலையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது. அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

பல்கலைக்கழக மாணவர்களும், இளைஞர்களும், சிறுவர்களும் மிகவும் ஆழமாக மதுசார நிறுவனங்களாலும், போதைப்பொருள் மோசடி வியாபாரிகளாலும் இலக்கு வைக்கப்படுகின்றனர். கல்வியறிவுடைய சமூகத்தை ஏமாற்றுவதற்காக பல்வேறு நுட்பங்களைப்பயன்படுத்தி, இணையத்தளத்தை பயன்படுத்தி தமது விளம்பரங்களை மேற்கொண்டு இளைஞர்களுக்கு மதுசாரம் மீதும், போதைப்பொருள் மீதும் ஈர்ப்பை ஏற்படுத்துகின்றனர். எண்ணங்கள் ரீதியான மாற்றங்களை ஏற்படுத்துவதற்காக இளைஞர்களுக்கு விருப்பமான விடயங்களுடன் ஒன்றிணைத்தே இவ்விளம்பரங்களை மேற்கொள்ளுகின்றனர் என்பது திண்ணம்.

பல்கலைக்கழக மாணவர்கள் அதிகமாக இலக்கு வைக்கப்படுகின்றனர். காரணம் எதிர்காலத்தில் முடிவுகளை நிர்ணயிக்கும் பதவிகளில் அமருவதற்கு எதிர்ப்பார்ப்பவர்களின் எண்ணங்களை இப்போதிருந்தே மாற்றுவதற்காகவும் மட்டுமின்றி மாணவர்களின் ஊடாக கிளர்ச்சிகளை ஏற்படுத்த முடியும். அதனால் இலாபம் பெற முடியும் என்பதற்காகவுமே ஆகும். மதுசார பாவனையை பல்கலைக்கழக மாணவர்களிடையே பிரபல்யப்படுத்துவதன் மூலம், மதுசாரமானது இளைஞர்கள் பருக வேண்டியதொன்று. கல்விகற்றவற்களும் மதுசாரத்தை அருந்தலாம், தன்னை ஒரு இடத்தில் வீரனாக சித்தரிப்பதற்கு மதுசாரம் அருந்தலாம் என்கின்ற பல்வேறு சமூக நம்பிக்கைகளை உருவாக்கி மாணவர்களினதும் அவர்களைச் சார்ந்த சமூகத்தினரினதும் எண்ணங்களை மாற்றுவதற்கே குறிப்பிட்ட நிறுவனங்களும், குழுக்களும் தொழிற்படுகின்றன.

மதுசார நிறுவனத்தால் விதைக்கப்படும் விளம்பரங்களும், சமூக நம்பிக்கைகளும் எமது சமூகத்தை ஏமாற்றுவதற்காக மதுசார நிறுவனங்களால் மேற்கொள்ளப்படும் சதித்திட்டம் என்பது பாவனை செய்பவர்களுக்கோ அல்லது பாவனை செய்யாவதர்களுக்கோ புரிந்துகொள்ள முடியாத அளவில் மிகவும் நுணுக்கமான முறையில் ஊடுருவப்பட்டுள்ளன.

இளைஞர்கள் மதுசார பாவனைக்கும், புகைத்தல் மற்றும் ஏனைய போதைப்பொருள் பாவனைகளுக்கும் ஏமாறுவதால் பாரியளவில் பாதகமான விளைவுகள் எதிர்காலத்தில் ஏற்படும் என்பதில் எவ்விதமான ஐயமுமில்லை. மதுசார பாவனையில் ஈடுபடும் இளைஞர்களுக்கு நுண்ணறிவு வீதம் குறைவடையும், தமது வாழ்க்கையை மதுசாரத்திற்கு மட்டுப்படுத்திக்கொள்ள வேண்டிய நிலைமை ஏற்படும், உண்மையான வாழ்க்கையை இரசித்து வாழ முடியாத நிலைமை ஏற்படும்.

ஒருவனின் நோக்கில்...
No. 752/5, Dr Danister De Silva Mawatha,
Second Floor, Bellatrix Building, Colombo 09
0114701510 / editorial@oruvan.com

# பெரும்பான்மையை பயன்படுத்தாதது ஏன்?

"நாட்டு மக்களின் பிரச்சினைகளை தீர்ப்பதில் காலத்தை செலவிடாமல் அரசியல் பழிவாங்கலில் அரசாங்கம் ஈடுபடுகிறது" இது யோஷிதவின் கைது குறித்து நாமல் ராஜபக்ஷவின் குற்றச்சாட்டு.

நாட்டு மக்களுக்கு தீர்வு காண வேண்டிய பல பிரச்சினைகள் இன்னமும் அப்படியே இருக்கின்றமை உண்மைதான். சிறிய சிறிய பிரச்சினைகளை பெரிய அளவிற்கு கொண்டு செல்வதும் அரசாங்கம் தான். இது ஒரு அரசியல் நாடகம் என பலராலும் விமர்சிக்கப்பட்டும் வருகிறது.

யோஷித ராஜபக்ஷவின் கைது ஒரு அரசியல் பழிவாங்கல் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன மாத்திரமன்றி எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி சார்பிலும் சில கருத்துக்கள் வெளியாகியிருந்தன.

இதைத் தவிர, முன்னாள் ஜனாதிபதிகளின் உத்தியோகபூர்வ இல்லங்களை அரசாங்கம் மீள பெற்றுக்கொண்டமை ஆகிய விடயங்கள், அரசியல் பழிவாங்கல்களுக்கான வலுவான காரணியாக பார்க்கப்படுகிறது.

எனினும், இவ்விரு விடயங்களையும் அரசாங்கத்தின் சில்லறை செயலாக எடுத்துக் கொள்ளமுடியாது.

தற்போதைய ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க,அப்போதைய தேர்தல் மேடைகளில் ஊழல்வாதிகள் தகுதி தராதரம் பாராது தண்டிக்கப்படுவார்கள் என வாக்குறுதியளித்திருந்தார். ஆக, யோஷி தவின் கைதும் தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றும் ஒரு செயலாக நிச்சயம் நாம் கருத முடியும்.

அடுத்ததாக, முன்னாள் ஜனாதிபதிகளின் உத்தியோகபூர்வ இல்லங்களை மீள அரசாங்கத்திடம் பெற்றுக்கொண்டமை கூட அரசாங்கத்தை பாராட்டக் கூடிய ஒரு விடயமாகும். மாதாந்தம் குறிப்பிட்ட ஒரு தொகையை முன்னாள் ஜனாதிபதிகளின் உத்தியோகபூர்வ இல்லங்களுக்கு செலுத்துவதற்கு மக்கள் வரிப்பணமே பயன்படுத்தப்படுகிறது. இவ்வாறு முன்னாள் ஜனாதிபதிகளின் உத்தியோகபூர்வ இல்லங்களை மீளப் பெற்றுக் கொள்வதன் மூலம் அரச செலவீனமானது குறைக்கப்படுகிறது.

கடந்த காலங்களில் ஊழலால் பெருத்துப்போன அரசியல்வாதிகளின் ஊழல்களை வெளிக்கொண்டுவர முன்வந்திருக்கும் தற்போதைய அரசாங்கத்திற்கு பலரும் சேறு பூசி வரும் நிலையில் இன்னும் சில அரசியல்வாதிகள் அச்சத்தில் உளறிக் கொட்ட ஆரம்பித்துள்ளனர்.

ஜேவிபியின் முகத் தோற்றமுடைய தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் நிறைவேற்ற முடியாத பல வாக்குறுதிகளை மக்கள் முன் நிறுத்தியமை உண்மைதான். சில வாக்குறுதிகள் தேர்தல் மேடைகளுக்கு இனித்தாலும் நடைமுறைக்கு சாத்தியமில்லை என்பதை அரசாங்கம் தற்போது புரிந்து கொண்டும் உள்ளது.

அரசாங்கத்தால் நிறைவேற்ற முடியாத வாக்குறுதிகளை, நிறைவேற்றுமாறு நாம் கட்டாயப்படுத்துவதும் ஒரு வகையிலான மடத்தனமான செயல்பாடு என்று கூறலாம்.

இன்று முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மீது ஜேவிபி தலைமையிலான தேசிய மக்கள் சக்தி பழிவாங்கல்களை மேற்கொண்டு வருகிறது என குற்றம் சுமத்தப்பட்டாலும் கூட,கடந்த காலங்களில் ஜேவிபி மஹிந்தவுடன் இணைந்தும் செயற்பட்டதை நாம் அறிவோம்.

2005 ஆம் ஆண்டில் மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக பதவியேற்றதற்கு ஜேவிபி துணையாக இருந்துள்ளது.

மஹிந்த ராஜபக்ஷ சுனாமி நிதியை மோசடி செய்ததாக அப்போதிருந்த எதிர்க்கட்சிகள் குற்றம் சுமத்தி வந்த போதிலும் ஜேவிபியானது தனது அரசியல் மேடைகளில் மஹிந்த ராஜபக்ஷவை காப்பாற்றி வந்ததாகவும் கருத்துக்கள் உள்ளன.

எனினும், ஒரு நாணயத்திற்கு இரு பக்கங்கள் இருப்பது போல இவ்விடயத்திலும் நாம் இரு விடயங்களை அவதானிக்க முடியும்.

உண்மையிலேயே, அரச செலவீனத்தை குறைப்பது தான் அநுரகுமார திஸாநாயக்கவின் நோக்கமாக இருந்தால் அதற்கான சரத்துக்களை அரசியலமைப்பில் திருத்தம் செய்து சலுகைகளை மீளப் பெற்றிருக்கலாம். அதற்கான பெரும்பான்மை அதிகாரமும் தற்போதைய அரசாங்கத்திடம் உள்ளது.

எனினும், மக்கள் சந்திப்புகளில் கலந்து கொண்டு பகிரங்கமாக மஹிந்த ராஜபக்ஷவின் பெயரை பயன்படுத்தி குற்றம் சுமத்துவது தற்போதைய விமர்சனங்களுக்கு ஏதுவாக அமைந்துள்ளது. நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஒரு ஜனாதிபதி தனக்கு மக்கள் வழங்கியிருக்கும் அதிகாரங்களை தாராளமாக பயன்படுத்த முடியும் எனினும், இவ்வாறு பொது இடங்களில் பகிரங்க குற்றச்சாட்டுகளை முன்வைப்பது ஒரு வகையிலான பிரசாரமாக இருக்கலாம் என விமர்சிக்கப்படுகிறது.

மக்கள் ஆணையை காப்பாற்றுவோம் என உறுதி பூண்டுள்ள அரசாங்கம் ஊழல்வாதிகள் தொடர்பில் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் அனைத்தும் வரவேற்கத்தக்கவை. அவை மக்களால் அவதானிக்கப்பட்டும் வருகின்றன. எனினும், அவை ஒருபோதும் சுய அரசியல் இலாபங்களை மையமாகக் கொண்டவையாக இருந்துவிடக் கூடாது.

அரசியலமைப்பில் திருத்தங்களை மேற்கொள்ளக் கூடிய அளவிற்கு பெரும்பான்மையுடன் ஆட்சியமைத்துள்ள தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தால் நாடாளுமன்றத்தினூடாக பல மக்கள் கோரிக்கைகளை நிறைவேற்ற முடியும். எனினும், அதைத் தவிர்த்து விட்டு பொதுமக்கள் சந்திப்புகளில் மஹிந்தவின் பாதுகாப்பை 60 ஆக குறைத்து விட்டோம், அதிகம் புலம்பினால் அதையும் நிறுத்தி விடுவோம்" என்றொரு அதிகாரத் தொனியில் கூறியிருந்தமையும் அனைவராலும் அவதானிக்கப்பட்டது.

எவ்வாறாயினும், ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க உள்ளிட்ட தற்போதைய அரசாங்கத்திடம் மக்கள் பல விடயங்களை முன்வைத்துள்ளனர்.

அதில் முக்கியமானது இலங்கையின் பொருளாதாரம் ஸ்திரப்படுத்தப்பட வேண்டும் என்பதாகும். மக்கள் அது நிறைவேறும் வரை காத்திருக்கிறார்கள் என்பதை அரசாங்கம் உணர வேண்டும்.

நாளுக்கு நாள் அத்தியாவசியப் பொருட்களை இறக்குமதி செய்ய வேண்டிய நிலை உருவாகும் போது மக்கள் நிலை தடுமாறுவதற்கான வாய்ப்புகளும் உள்ளன. அரிசி நெருக்கடி தீர்ந்து, தற்போது அரிசி கட்டுப்பாட்டு விலையை மீறி விற்பனை செய்யப்படுவது அதிகமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

ஆக, ஊழலை ஒழிக்கும் திட்டங்களில் காட்டும் அதீத ஆர்வத்தை அரசாங்கம் பொருளாதாரத்திலும் காட்ட வேண்டும் என்பதும் மற்றொரு கோரிக்கை.

# அவலத்தின் விளிம்பில் கிண்ணியா விவசாயிகள்



கிண்ணியா
கியாஸ் ஷாபி

கிண்ணியா பிரதேச சபை பிரிவுக்குட்பட்ட, மகாமாறு குளத்துக்கட்டு வீதி, கன மழையினால் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக பயணம் செய்ய முடியாத அளவுக்கு படுமோசமாக பாதிக்கப்பட்டிருப்பதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

இந்த வீதி, கல்லடிவெட்டுவான், சுங்கான்குழி, நடுவூற்று, குரங்குபாஞ்சான் மற்றும் தீனேரி ஆகிய விவசாய கிராமங்களை இணைக்கின்ற ஒரு முக்கியமான வீதியாகும்.

இந்த விவசாய கிராமங்களில், ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் வேளாண்மை செய்கை பண்ணப்படுகின்றது. மேலும் மேட்டு நில பயிர்ச்செய்கை, கால்நடை பண்ணைகள் என கிண்ணியா பிரதேசத்தின் பொருளாதார முதுகெலும்பு இந்தப் பகுதியிலேயே அமைந்துள்ளது.

அத்தோடு, செங்கல் உற்பத்தியாளர்களும் இந்தப் பகுதியில் அதிகமாக இருப்பதையும் இங்கு குறிப்பிட வேண்டி இருக்கின்றது.

இதன் காரணமாக, நாளாந்தம் நூற்றுக்கணக்கான விவசாயிகளும் சிறு கைத்தொழில் உற்பத்தியாளர்களும் இந்த வீதியை பயன்படுத்தி வருகின்றனர்.

8 வருடங்களாக இந்த துன்பத்தை அனுபவித்து வருகின்றோம். இப்போது பெரும்போக அறுவடை ஆரம்பித்திருக்கின்றது. இந்த வீதியின் ஊடாகவே நெல்லை ஊருக்குள் கொண்டு சேர்க்க வேண்டும். ஆனால், உழவு இயந்திரம் சேற்றுக்குள் புதைகின்றது. இதனால், போக்குவரத்து செலவு அதிகமாகின்றது. இந்த நிலையில், நெல்லுக்கு போதுமான நிர்ணயவிலை இல்லை. இதனால் நாங்கள் நட்டமடைகிறோம் என விவசாயிகள் தங்கள் கவலையை தெரிவிக்கின்றனர்.

இம்முறை ஏற்பட்ட கனமழை காரணமாக, ஏற்பட்ட வெள்ளத்தால், விளைந்த வயல் நிலங்கள் பல அழிந்து பாதிக்கப்பட்டிருக்கின்றன. இந்த நிலையில், எஞ்சிய வேளாண்மையை அறுவடை செய்து, சந்தைப்படுத்துவதில் இந்த வீதி பல்வேறு, தடைகளை ஏற்படுத்துகின்றது. இந்த நிலையில்,

> ஒவ்வொரு நாளும் பிள்ளைகளை சீராக பாடசாலைக்கு அனுப்ப முடியாது கஷ்டப்படுகின்றோம். ஒரே ஒரு உடுப்பு. ஒரு நாள் சென்றால் சேறு படிந்த அழுக்கோடு வீடு திரும்புகிறார்கள். அடுத்த நாள், அவற்றை சுத்தம் செய்ய முடியாது.

நெல்லை சந்தைப்படுத்த முடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

பசும்பாலை நகருக்கு கொண்டும் வியாபாரிகள் இந்த வீதியை காரணம் காட்டி, இங்கு வருவதற்கு தயங்குகின்றனர். இதன் காரணமாக பசும்பாலை சந்தைப்படுத்த முடியாத நிலை ஏற்பட்டிருப்பதாக கால்நடை பண்ணையாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

நடுவூற்று சக்கரியா வித்தியாலயம், மகாமாறு அலிகார் மகாவித்தியாலயம் மற்றும் கல்லடி வெட்டுவான் வித்யாலயம் ஆகிய பாடசாலை மாணவர்களின் பிரதான வீதி இதுவாகும். பாடசாலைக்கு நடந்தும் செல்ல முடியாது சைக்கிளிலும் செல்ல முடியாது தவித்துக் கொண்டிருக்கின்றார்கள்.

ஒவ்வொரு நாளும் பிள்ளைகளை சீராக பாடசாலைக்கு அனுப்ப முடியாது கஷ்டப்படுகின்றோம். ஒரே ஒரு உடுப்பு. ஒரு நாள் சென்றால் சேறு படிந்த அழுக்கோடு வீடு திரும்புகிறார்கள். அடுத்த நாள், அவற்றை சுத்தம் செய்ய முடியாது. சவர்க்காரத்தை ஒவ்வொரு நாளும் வாங்குவதற்கு வசதி இல்லை. இதனால் ஒவ்வொரு நாளும் பாடசாலைக்கு பிள்ளைகளை அனுப்ப முடியாது. ஆனால், அதிபரும் ஆசிரியர்களும் ஒவ்வொரு நாளும் பாடசாலைக்கு வரவேண்டும் என உத்தரவு போடுகின்றார்கள். இந்த நிலையில் நாங்கள் என்ன செய்வது? என பெற்றோர்கள் கேட்கின்றனர்.

இந்த மகாமாறு கிராமத்தை அண்டிய பல விவசாய குக் கிராமங்கள் காணப்படுகின்றன. இந்த கிராம மக்கள் தொடர்ச்சியாக, காட்டு யானைகளின் அச்சுறுத்தல்களுக்கு முகம்கொடுத்து வருகின்றனர். இவர்கள் போக்குவரத்துக்காக பயன்படுத்துகின்ற பிரதான வீதியும் இதுதான்.

இந்த நிலையில், காட்டு யானைகள் ஊருக்குள் நுழைகின்ற போது, பாதுகாப்பு கருதி அவசரமாக இந்த வீதியால் செல்ல முடியாது எனவும், வனவிலங்கு பாதுகாப்பு அதிகாரிகளை அழைக்கின்ற போது, புதிய காரணம் காட்டி அவர்கள் வருவதற்கு தயங்குகிறார்கள் எனவும் பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

கிண்ணியா பிரதேச சபைக்குட்பட்ட, குரங்குபாஞ்சான், வெள்ளம்குளம், துவரம்குளம், கற்குழி, பட்டியனூர் மற்றும் நடுவூற்று ஆகிய பகுதிகளில், செங்கல் உற்பத்தி இடம்பெறுகின்றன.

இங்கு முப்பது வருடங்களுக்கு மேலாக, நூற்றுக்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் செங்கல் உற்பத்தியில் ஈடுபட்டு வருகின்றனர். இவர்கள் பயன்படுத்தும் வீதியும் இதுதான்.

வீதி உட்கட்டமைப்பு வசதி சீராக இல்லாததால், தொழிலாளர்களை வேலைக்கு வரவைப்பதில் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குவதோடு, உற்பத்தி செய்யப்பட்ட செங்கலை விற்பனைக்கு நகர் பகுதிக்கு கொண்டு செல்ல முடியாத நிலைக்கு ஆளாகி இருக்கிறோம் இதற்கு காரணம் இந்த வீதியின் படுமோசமான நிலைதான் செங்கல் உற்பத்தியாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

ஒவ்வொரு வருடமும் பருவ மழை காலங்களில் இதே கஷ்டத்தை தான் தொடர்ந்து இவர்கள் அனுபவித்து வருகின்றார்கள். இது தொடர்பாக இந்தப் பகுதியில் உள்ள சமூகமட்ட அமைப்புக்கள் கிண்ணியா பிரதேச செயலாளருக்கு அறிவித்தும் இதுவரை எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை என பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

> மிக மோசமாக பாதிக்கப்பட்டிருக்கும் மகாமாறு குளத்துக்கட்டு வீதி! பல முறை கோரிக்கைகள் விடுத்தும் பலனேதுமில்லை













# ஆண்டவர் சிலுவையின் காலில் இருந்து வடிந்த நீர்!



(பு.கஜிந்தன்)

யாழ்.வடமராட்சி கிழக்கு கட்டைக்காடு பகுதியில் உள்ள ஆண்டவரின் சிலுவையில் இருந்து நேற்று செவ்வாய்க்கிழமை (28) நீர் கசிந்துள்ளது.

மூன்று மணித்தியாலங்களுக்கு மேலாக ஆண்டவர் சிலுவையின் விரல் பகுதியில் இருந்து நீர் கசிந்தது.

இச் சம்பவம் அறிந்து பல்வேறு இடங்களில் இருந்து வருகை தந்த மக்கள் ஆண்டவரின் காலில் இருந்து வழிந்தோடிய நீரை சேகரித்துச் சென்றனர்.

சகோதர மதத்தினர் மற்றும் இராணுவத்தினர், பொலிஸார், பொது மக்கள் என பலர் இந்த காட்சியை பார்வையிட்டதுடன் புகைப்படங்களையும் எடுத்துச் சென்றனர்.

சம்பவம் தொடர்பாக ஆலய பங்குத்தந்தையால் உறுதிப்படுத்தப்பட்ட பின்னரே மேலதிக தகவல்களை வெளியிட முடியுமென கப்பலேந்தி மாதா ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்தனர்.



யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு அம்பன் அமெரிக்கன் மிஷன் தமிழ் கலவன் பாடசாலை மாணவர்களால் போதை ஒழிப்பு தொடர்பான விழிப்புணர்வு பேரணி ஒன்று நேற்றுமுன்தினம் (27) திங்கட்கிழமை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அதிபர் கண்ணதாசன் தலைமையில் பாடசாலை முன்றலிலிருந்து ஆரம்பமான குறித்த மது ஒழிப்பு விழிப்புணர்வு பேரணி அம்பன் கிழக்கு வரை சென்று நிறைவடைந்துள்ளது. (படம்: பு.கஜிந்தன்)

# யாழில் இடம்பெறும் விபத்துக்கள்

# பொலிஸாரும் காரணமா?

(பு.கஜிந்தன்)

அண்மைக்காலமாக நாடளாவிய ரீதியில் வீதி விபத்துகளின் எண்ணிக்கை அதிகரித்து காணப்படுகின்றன. இதனால் மரணங்கள், அங்கவீனங்கள் போன்றன ஏற்படுகின்றன.

அந்தவகையில் இந்த விபத்துக்களுக்கு கட்டாக்காலி கால்நடைகள், மது போதையில் சாரத்தியம், அவதானமின்மை, வீதி விதிமுறைகளை பின்பற்றாமை, அதிக வேகம் மற்றும் உறக்கம் என்பன காணப்படுகின்றன. அத்துடன் பொலிஸாரின் செயற்பாடுகளும் விபத்துக்களுக்கு காரணமாக அமைகின்றமை அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.



போக்குவரத்து பொலிஸார், வாகனங்களை நிறுத்தக் கூடாத இடங்களான வீதி ஓரத்தில் உள்ள மஞ்சள் கோடு, வீதியின் திருப்பங்கள் போன்ற இடங்களில் நின்று வாகனங்களை மறிக்கின்றனர். அத்துடன் இரவு வேளைகளில் கடமையில் இருக்கும் போக்குவரத்து பொலிஸார் இருள்சூழ்ந்த இடங்களில் வாகனங்களை நிறுத்திவிட்டு டோர்ச் லைட்டின் ஒளியினை வீதியில் செல்லும் சாரதிகளின் கண்களை நோக்கி பாய்ச்சி அவர்களை மறிக்கின்றனர். இதுவும் விபத்துகள் ஏற்பட காரணமாக அமைகின்றன.

இளவாலை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பண்டத்தரிப்பு – சித்தங்கேணி வீதியில் இவ்வாறான சம்பவம் இடம்பெற்றுள்ளது. குறித்த பகுதியில் ஆபத்தான இரண்டு திடீர் திருப்பங்கள் காணப்படுகின்றன. அந்த வீதி ஓரத்தில் மஞ்சள் கோடும் காணப்படுகின்றன.

அந்த திருப்பத்தில் பொலிஸார் நிற்பது இரண்டு பக்கத்தில் இருந்து வரும் வாகனங்களின் சாரதிகளுக்கும் தெரியாது. அந்த பகுதியில் சாதாரணமாகவே விபத்துக்களும் ஏற்படுவதற்கான சூழ்நிலை காணப்படுகிறது.

குறித்த பகுதியில் நிற்கும் பொலிஸார் ஆபத்தான முறையில் வாகனங்களை மறிப்பது வழமை. வீதியால் வரும் வாகனங்களின் கண்களில் தாங்கள் தென்படாது இருப்பதற்காகவே அந்த பகுதியில் நின்று வாகனங்களுக்கும், சாரதிகளுக்கும், பயணிகளுக்கும் ஏற்படும் ஆபத்தையும் பொருட்படுத்தாமல் வாகனங்களை மறிக்கின்றனர்.

இவ்வாறான பகுதியில் நின்று வாகனங்களை மறிக்கக்கூடாது, அப்படி மறிப்பது வீதி விதிமுறைகளுக்கு எதிரானது, ஆபத்து நிறைந்தது என பலரும் அந்த பகுதியில் நிற்கும் பொலிஸாருக்கு எடுத்துக்கூறினாலும் பொலிஸார் மக்களை மிரட்டுவது போல செயற்படுகின்றனர் என தெரிவிக்கப்படுகிறது.

வீதி விபத்துகளை தவிர்ப்பதற்காக பொலிஸாரை கடமையில் அமர்த்தும்போது, பொலிஸாரே விபத்துக்களுக்கு காரணமாக அமைகின்றனர் என்ற விடயமானது மக்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. இது குறித்து வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர், மற்றும் யாழ்ப்பாண மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஆகியோரின் கவனத்துக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மன்னார் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டம்;

# கனிய மணல் அகழ்வுக்கு பொது அமைப்புகள் கடும் எதிர்ப்பு

(எஸ்.ஆர்.லெம்பேட்)

மன்னார் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் மன்னார் மாவட்டச் செயலகத்தில் நேற்று (28) செவ்வாய்க்கிழமை காலை 10 மணியளவில் மன்னார் மாவட்ட அரச அதிபர் க.கனகேஸ்வரன் ஏற்பாட்டில் பிரதியமைச்சரும் அபிவிருத்திக் குழுத் தலைவருமான உபாலி சமரசிங்கவின் தலைமையில் இடம்பெற்றது.



இக் கூட்டத்தில் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், ரிஷாட் பதியுதீன்,காதர் மஸ்தான், து.ரவிகரன், பா. சத்திய லிங்கம், மயில்வாகனம் ஜெகதீஸ்வரன், செல்லத்தம்பி திலகநாதன், முத்து முஹமட் ஆகியோர் கலந்து கொண்டதுடன் பிரதேச செயலாளர்கள்,அழைக்கப்பட்ட திணைக்களத் தலைவர்கள், பொலிஸ் கடற்படை, அதிகாரிகள் சிவில் சமூக அமைப்புக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் மாவட்ட மட்டத்தில் கலந்துரையாடப் பட வேண்டிய பல்வேறு விடயங்கள் மற்றும் தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினைகள் குறித்தும் விசேடமாக கலந்துரையாடப்பட்டது.

குறிப்பாக 2ஆம் கட்ட காற்றாலை மின் உற்பத்தி நடவடிக்கைகள் இடை நிறுத்தப்பட்டுள்ள நிலையில் இவ் விடயம் தொடர்பாகவும் ஆராயப்பட்டது.

மேலும் மன்னார் தீவு பகுதியில் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற கணிய மணல் அகழ்வு குறித்து கலந்துரையாடப்பட்டது.எனினும் குறித்த கலந்துரையாடலில் கலந்து கொண்ட மன்னார் பிரஜைகள் குழு மற்றும் மீனவ அமைப்புக்களின் பிரதிநிதி ஆகியோர் தமது கடுமையான எதிர்ப்பை தெரிவித்தோடு,மன்னார் மாவட்ட மக்கள் மன்னார் தீவு பகுதியில் முன்னெடுக்கப்படும் கணிய மணல் அகழ்வை எதிர்ப்பதாகவும் க விடயம் தொடர்பாக இங்கு ஆராயப்பட வேண்டிய தேவை இல்லை எனவும் தெரிவித்தோடு, மன்னார் தீவில் கனிம மண் அகழ்வுக்கு ஒரு போதும் அனு மதியை வழங்க முடியாது என அவர்கள் தெரிவித்தனர்.

இதன் போது மக்களின் எதிர்ப்பை மீறி மாவட்டத்தில் எவ்வித நடவடிக்கைகளையும் முன்னெடுக்க அனுமதி வழங்க முடியாது என்றும், மன்னார் தீவு பகுதியில் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற கனிம மண் அகழ்வு குறித்து மக்கள் தொடர்ந்து எதிர்ப்பு தெரிவித்து வருகின்ற மையினால் இவ்விடயம் தொடர்பாக வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் ஒன்றிணைந்து ஜனாதிபதியை சந்தித்து குறித்த விடையம் தொடர்பாக கலந்துரையாட வேண்டியுள்ளது.

எனவே ஜனாதிபதியிடம் சந்திப்பிற்கான நேரத்தை ஒதுக்கி தருமாறு வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் ஒன்றாக பிரதியமைச்சரும் அபிவிருத்திக் குழுத் தலைவருமான உபாலி சமரசிங்க விடம் கோரிக்கை விடுத்தனர்.

# தமிழ் மக்கள் ஒற்றுமைப்படாவிட்டால் அனைத்து சபைகளையும் தேசிய மக்கள் சக்தி கைப்பற்றும் அபாயம்



தமிழ் மக்கள் ஒற்றுமைப்படவில்லை என்றால் அனைத்து சபைகளையும் தேசிய மக்கள் சக்தி கைப்பற்று அபாயம் இருப்பதாக அரசியல் ஆய்வாளரும், சட்டத்தரணியும், சமூக விஞ்ஞான ஆய்வு மைய இயக்குனருமான சி.அ. யோதிலிங்கம் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் உரும்பிராயிலுள்ள தனது அலுவலகத்தில் நேற்று ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் இலங்கை தமிழரசு கட்சியின் பதில் தலைவர் சி.வி.கே சிவஞானம் ஆகியோருக்கு இடையிலான சந்திப்பு ஒரு நல்ல சந்தர்ப்பத்தை உருவாக்கியுள்ளது.

என்.பி.பி அரசு பல்வேறு வழிகளிலும் வடக்கு கிழக்கில் தமிழ் மக்களிடம் இருந்து. அவர்களுக்கான அனைத்து விடயங்களையும் கையாண்டு மக்கள் மத்தியில் ஓர் அரசியல் மாற்றத்தை கொண்டு வருவதற்கு திட்டமிட்டு இருக்கிறார்கள்.

இது ஒரு ஆபத்தான நிலைமையாகும். இதனை தடுப்பதற்காக அனைத்து அரசியல் கட்சிகளும் ஒன்று திரள வேண்டும் என்றும். இவ்வாறான நடவடிக்கை அனைத்து சிவில் சமூகங்களுக்கும் பொறுப்பு இருக்கிறது என்று அவர் மேலும் தெரிவித்தார்.

# அனுமதியின்றி செய்தி சேகரிப்பு

# ஊடகவியலாளரிடம் பொலிஸார் விசாரணை

(பு.கஜிந்தன்)

மருத்துவமனைக்குள் மருத்துவரின் அனுமதியின்றி சென்று செய்தி சேகரித்தார் என மருதங்கேணி பிரதேச வைத்தியசாலை பொறுப்பு வைத்தியர், ஊடகவியலாளர் மரியசீலன் திலெக்ஸ் மீது முறைப்பாடு ஒன்றினை மருதங்கேணி பொலிஸ் நிலையத்தில் பதிவு செய்திருந்தார்.

அதனடிப்படையில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை (27) காலை 11 மணியிலிருந்து 1:00 மணிவரை மருதங்கேணி பொலிஸ் நிலையத்தில் விசாரணை இடம்பெற்றுள்ளது.

இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

ஒரு சில தினங்களிற்கு முன்னர் வடமராட்சி கிழக்கு வத்திராயனை சேர்ந்த கடற்றொழிலாளி ஒருவர் கடலில் இடம் பெற்ற சம்பவம் ஒன்றின்போது காயமடைந்த நிலையில் மருதங்கேணி பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் அந் நபரை பார்வையிடுவதற்காக மருதங்கேணி பிரதேச வைத்தியசாலைக்கு சென்று மருத்துவமனை உத்தியோகத்தர்களிடம் ஊடகவியலாளர்கள் அனுமதி கோரியுள்ளனர்.

இந்நிலையில் மருத்துவமனை உத்தியோகத்தர்கள் பார்வை நேரத்திற்கு முன் விடுதியில் நோயாளர்களை பார்வையிட அனுமதிக்கப்படுவதில்லை என்றும் பொறுப்பு மருத்துவரின் அனுமதியை பெற்று காயமடைந்த நபரை பார்வையிடுமாறு தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் குறித்த ஊடகவியலாளர் சக ஊடகவியலாளர் ஒருவருடன் சென்று மருத்துவமனை பொறுப்பு மருத்துவரிடம் அனுமதி கோரியிருந்தனர்.

இந்நிலையில் பொறுப்பு மருத்துவர் ஊடகவியலாளர்களை பார்வை நேரத்திற்கு முன் நோயாளியை பார்வையிட அனுமதிக்காத நிலையில் ஊடகவியலாளர்கள் வளாகத்திலிருந்து வெளியேறியிருந்தனர்.

இந்நிலையிலும் ஊடகவியலாளர்கள் தந்திரோபாயமாக மாற்று வழிகளை பயன்படுத்தி கடலில் காயமடைந்தவர் தொடர்பான செய்தியை மருத்துவ மனையின் விடுதியில் தங்கியிருந்த புகைப்படத்துடன் வெளியிட்டிருந்தனர்.

குறித்த செய்தியை பார்வையிட்ட பொறுப்பு மருத்துவர் பிரதேச ஊடகவியலாளர் மரியசீலன் திலெக்ஸ்க்கு எதிராக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தார். குறித்த முறைப்பாட்டின் அடிப்படையில் இன்று இரண்டு மணிநேரம் மரியசீலன் திலெக்ஸ் மீது விசாரணைகள் இடம்பெற்றது.

இது குறித்து கருத்து தெரிவித்த பிரதேச ஊடகவியலாளர் மரியசீலன் திலெக்ஸ், தானும் தனது சக ஊடகவியலாளரும் குறித்த சம்பவ தினத்தில் செய்தி சேகரிப்பதற்கு மருத்துவமனை அதிகாரிகளிடம் அனுமதி கோரியிருந்ததாகவும், அனுமதி மறுக்கப்பட்ட நிலையில் தாம் மருத்துவமனையிலிருந்து திரும்பி வந்ததாகவும், மருத்துவர் குற்றம் சாட்டியது போன்று எதுவும் இடம்பெறவில்லையென்றும், அனுமதி மறுக்கப்பட்டதால் தாம் நாகரீகமாக வெளியேறியதாகவும் தெரிவித்தார்.

பொறுப்பு மருத்துவரின் குற்றச்சாட்டு உண்மைக்கு புறம்பானது என்று சக ஊடகவியலாளர்களும் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

# யாழில் மண்கலந்த நீர் விநியோகம்!

(பு.கஜிந்தன்)



யாழ்ப்பாணம் மாநகர சபைக்கு உட்பட்ட சோமசுந்தரம் பகுதிக்கு மண் கலந்த குடிநீர் விநியோகிக்கப்பட்டுள்ளது.

குறித்த விடயம் தொடர்பில் தெரியவருவதாவது.

யாழ். மாநகர சபைக்கு உட்பட்ட பகுதிகளில் குழாய் மூலமான நீர் வழங்கல் வீடுகளுக்கு செல்கிறது.

நேற்று முன்தினம் (27) திங்கட்கிழமை யாழ்ப்பாணம் மாநகர சபைக்கு உட்பட்ட சோமசுந்தரம் வீதியில் உள்ள வீடுகளுக்கு வழமையான குழாய் நீர் விநியோகிக்கப்பட்ட நிலையில் வீடுகளில் வைக்கப்பட்டுள்ள நீர் தாங்கிகளில் குறித்த நீர் நிரப்பப்பட்டுள்ளது. குறித்த பகுதியில் உள்ள வீட்டின் உரிமையாளர் ஒருவர் நீரை போத்தலில் எடுத்த போது சிவப்பு நிறமாக காட்சி அளித்ததை அவதானித்துள்ளார்.

குறித்த விடயம் தொடர்பில் ஆராய்ந்த போது, குழாய் நீரில் ஏற்பட்ட பழுது காரணமாக திருத்த வேலைகள் இடம்பெற்றுள்ளமை தெரியவந்துள்ளது. திருத்த வேலையின் போது மண் உட்புகுந்த காரணத்தினால் அருகில் இருக்கும் வீடுகளின் குடிநீரில் சிவப்பு மண் கலந்த நீர் விநியோகிக்கப்பட்டுள்ளது.

குறித்த விடயம் தொடர்பில் யாழ்ப்பாணம் மாநகர சபை ஆணையாளர் குறித்த சம்பவம் தொடர்பில் சம்பந்தப்பட்டவர்களுடன் கலந்துரையாடுவதாகத் தெரிவித்தார்.

# இதைச் செய்து பாருங்கள் தொப்பை மடமடனு குறையும்?

ஆரோக்கியமான வாழ்க்கைக்கு மன அழுத்தம் இல்லாத வாழ்க்கை மிகவும் முக்கியம். மேலும் அதற்கேற்றாற்போன்ற உணவுப்பழக்கங்களும் மிகவும் முக்கியமாகும். ஆனால், தொப்பை வயிறு கொண்டவர்கள் அதை குறைப்பதற்காக பல வழிகளில் முயற்சித்தும் முடியாமல் மன அழுத்தத்துக்கு ஆளாவதால் பல சிரமங்களுக்கு ஆளாகின்றனர்.

உடற்பயிற்சியே இல்லாமல் ஒரு பானத்தின் மூலம் தொப்பையை குறைக்கலாம் என்றால் நம்ப முடியுமா? ஆம் முடியும்.

இப்போது அந்த ஜப்பானிய நீரைக் குடிப்பதால் என்னென்ன நன்மைகள் கிடைக்கும் என்பதையும், அந்த நீரை எப்படி தயாரிப்பது என்பதையும் காண்போம்.

முதலில் ஒரு துண்டு இஞ்சியை எடுத்து, அதன் தோலை நீக்கிவிட்டு தட்டி, 1 1/2 கப் நீரில் போட்டு, குறைந்தது 5-6 நிமிடங்கள் கொதிக்க வைத்து இறக்க வேண்டும்.

பின் வெதுவெதுப்பான நிலைக்கு வந்ததும், அதை வடிகட்டி, அதில் பாதி எலுமிச்சையைப் பிழிந்து கலந்து கொள்ள வேண்டும்.

இந்த நீரை ஒரு நாளில் எப்போது வேண்டுமானாலும் குடிக்கலாம். ஆனால், அதிகபட்ச பலனைப் பெற வேண்டுமானால், இந்த பானத்தை காலையில் எழுந்ததும் வெறும் வயிற்றில் குடிக்க வேண்டும். இப்படி குடிப்பதன் மூலம், செரிமான மண்டலத்தின் செயல்பாடு சிறப்பாக இருக்கும் மற்றும் உடலின் மெட்டபாலிசம் மேம்பட்டு, உடலில் தேங்கியுள்ள கொழுப்புக்கள்



திறம்பட எரிக்கப்பட்டு, தொப்பை இல்லாத தட்டையான வயிற்றை விரைவில் பெறலாம். இந்த பானத்தை குடிப்பதால் தொப்பை மட்டுமல்ல பல உடல் சார்ந்த நன்மைகளும் ஏற்படுகின்றது.

**செரிமானம் மேம்படும்**

செரிமான பிரச்சினைகளை கொண்டிருந்தாலே தொப்பை விரைவில் வந்துவிடும். ஆனால் இந்த ஜப்பானிய நீரில் உள்ள இஞ்சி மற்றும் எலுமிச்சையில் இருக்கும் நொதிகள், செரிமானத்தை ஊக்குவித்து, மலச்சிக்கல், அசிடிட்டி, வயிற்று உப்புசம் போன்ற பிரச்சினைகளை தடுக்கிறது. மேலும் இது குடல் ஆரோக்கியத்தை மேம்படுத்தி, நோயெதிர்ப்பு மண்டலத்தை வலுவாக வைத்துக் கொள்கிறது.

**சருமத்தின் அழகு மேம்படும்**

முகப்பருவால் அவதிப்படுபவர்கள் மற்றும் பொலிவிழந்த முகத்துடன் இருப்பவர்கள் இந்த ஜப்பானிய நீரைக் குடித்து வந்தால், அதில் உள்ள வைட்டமின் சி சரும செல்களின் ஆரோக்கியத்தை மேம்படுத்தி, சருமத்தை அழகாகவும், பொலிவாகவும் வைத்துக் கொள்ள உதவுகிறது.

**இரத்த அழுத்தம் மற்றும் கொலஸ்ட்ரால் குறையும்**

ஜப்பானிய நீரைக் குடித்து வருவதன் மூலம், அது இரத்த அழுத்தம் மற்றும் கெட்ட கொழுப்புக்களை கரைக்க உதவுகிறது. அதுவும் இந்த பானத்தில் உள்ள இஞ்சி உடலில் இரத்த ஓட்டத்தை அதிகரிக்கிறது. எலுமிச்சையில் உள்ள பொட்டாசியம், இரத்த குழாய்களின் அழுத்தத்தைக் குறைத்து, இதயத்தை ஆரோக்கியமாக வைத்துக் கொள்ள உதவுகிறது. எனவே இந்த பானத்தை தினசரி குடித்து வந்தால் இதயம் தொடர்பான பிரச்சனைகளின் அபாயத்தைக் குறைக்கலாம்.

**தொப்பை குறையும்**

வயது அதிகரிக்கும் போது வயிற்றுப் பகுதியில் கொழுப்பு தேங்கி தொப்பை வர ஆரம்பித்து, அது மிகுந்த மன உளைச்சலுக்கு ஆளாக்கும். மேலும் தொப்பை வந்துவிட்டால், அதுவே பல ஆரோக்கிய பிரச்சனைகளை வரத் தூண்டிவிடும். ஆனால் இஞ்சி எலுமிச்சை நீரைக் குடித்து வந்தால், அதில் உள்ள உட்பொருட்கள் கொழுப்பைக் கரைக்கும் பணியை திறம்பட செய்து, தொப்பையைக் குறைத்து, ஃபிட்டாக வைத்துக் கொள்ளலாம்.



ஒருவன் HEALTH GOALS

எஸ்.டொரின்

சுகவாழ்வுக்கோர் வழி

# வாரமொரு மூலிகை ...

## அரைக்கீரை

சாதாரணமாக பயிரக்கூடிய ஒரு பயிர் தான் அரைக்கீரை. இதன் இலை மேற்பாகம் பச்சையாகவும், அடிப்பபாகம் சிவப்பாகவும் காணப்படும்.

கிளைவிட்டு வளரக்கூடியது. கர்ப்பிணிகளுக்கும் பிரசவமான பெண்களுக்கும் மிகவும் சிறந்தது. இதன் விதை, இலை, தண்டு, வேர் என அனைத்தையும் பயன்படுத்தலாம்.

இந்த கீரையில் அதிகமாக இரும்புச் சத்து நிறைந்து காணப்படுவதால் சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை அனைவரும் உண்ணலாம்.

இந்த கீரையை சமைத்து சாப்பிடும் போது, காய்ச்சல், நடுக்கம், ஜன்னி, கயரோகம், வாதநோய் ஆகிய நோய்கள் குணமடையும். மேலும், சளிக்கு சிறந்த நிவாரணயாகவும் செய்படுகின்றது.

இக்கீரையை அறுகீரை, அறக்கீரை, அரக்கீரை, கிள்ளுக்கீரை என வேறு பெயர்களிலும் அழைப்பர்.

இதன் ஏனைய குணங்கள்

பித்தசுரம் போக்கும்

குளிர்க்காய்ச்சலை குணமாக்கும்

உடல் வலிகள் நீக்கும்

நீர்க்கோர்வை, ஜன்னி, வாதசுரம், சளி, இருமல் ஆகியனவற்றை குணமாக்கும்

உடலுக்கு வலுவூட்டும்



சூதக சன்னிக் கோளாறுகளை நீக்கும்

ஜீவசக்தியைப் பெருக்கும்

நரம்புத்தளர்ச்சியை போக்கும்

மண்டை பீநிசத்தை நீக்கும்

# இனி இப்படி செய்யுங்க!! குறட்டைக்கு குட்பாய்

குறட்டை என்பது ஒரு பொதுவான தூக்கம் தொடர்பான பிரச்சனையாகும். குறட்டை உயிருக்கு ஆபத்தான பெரிய பிரச்சினையாக இல்லாவிட்டாலும், குறட்டை விடுபவர்களை விட, அவர்களின் அருகில் படுப்பவர்கள் தான் அதிகம் சிரமப்படுவார்கள்.

குறட்டை சப்தம், தூக்கத்தில் வாய் மற்றும் மூக்கின் வழியாக சுவாசிக்கும் போது ஏற்படும் தடைகளால் தொண்டை



திசுக்களில் ஏற்படும் அதிர்வுகளின் ஓசையாகும்.

ஒருவருக்கு குறட்டை பல்வேறு காரணங்களால் வரலாம். அதில் உடல் பருமன், மூக்கு அல்லது தொண்டையின் அசாதாரண அமைப்பு, மூக்கடைப்பு, மதுப்பழக்கம், தூக்க நிலை போன்றவை குறிப்பிடத்தக்கவை.

**குறட்டையை இல்லதொழிக்க என்ன செய்யலாம்?**

உடல் எடையைப் பராமரிக்கவும்

அதிக உடல் எடை, குறிப்பாக கழுத்தைச் சுற்றியுள்ள பகுதி அதிகம் வீங்கியிருந்தால், அது சுவாசப்பாதையை சுருக்கி, குறட்டை வரும் அபாயத்தை அதிகரிக்கும். எனவே உடல் எடையை கணிசமான அளவில் குறைப்பதன் மூலும், சுவாசப்பாதையில் ஏற்படும் அழுத்தம் குறைந்து, குறட்டையும் குறையும்.

**பக்கவாட்டில் தூங்கவும்**

தூங்கும் போது ஒரு நேராக அதாவது, முதுகுப் பகுதியில் தரையில் படுமாறு படுக்கும் போது, நாக்கு மற்றும் மென்மையான திசுக்கள் தொண்டையை நோக்கி தள்ளப்பட்டு, சுவாசிக்கும் போது சுவாச ஓட்டத்தில் தடையை உண்டாக்கி, குறட்டையை ஏற்படுத்தும். எனவே குறட்டை வருவதைத் தடுக்க வேண்டுமானால், தூங்கும் போது பக்கவாட்டில் ஒருபக்கமாக திரும்பி தூங்குங்கள்.

தலையை உயர்த்திய நிலையில் வைக்கவும்

குறட்டை பிரச்சினையைக் கொண்டவர்கள் படுக்கும் போது சற்று உயரமான தலையணையை பயன்படுத்தி, தலை உயர்ந்த நிலையில் வைத்து தூங்க வேண்டும். இப்படி தூங்குவதன் மூலம் காற்றோட்டம் சீராக இருந்து, குறட்டை வருவது குறையும்.

**நீரை அதிகம் குடிக்கவும்**

உடலில் நீர்ச்சத்து போதுமான அளவில் இல்லாமல் இருந்தால், அது காற்றுப் பாதையில் சளியை இறுக்கமடையச் செய்து, குறட்டையை அதிகரிக்கும். எனவே குறட்டை வராமல் இருக்க வேண்டுமானால், போதுமான அளவில் நீரைக் குடியுங்கள்.

**மது பழக்கத்தைத் தவிர்க்கவும்**

மதுப்பழக்கம் தொண்டை சதையை தளர்வடையச் செய்து, காற்றுப் பாதையில் சுவாச ஓட்டத்தில் தடையை ஏற்படுத்தி குறட்டை சப்தத்தை அதிகரிக்கும். எனவே குறட்டை வராமல் இருக்க வேண்டுமானால், மதுப்பழக்கத்தை கைவிட வேண்டும்.

# பிரசவத்தைத் தொடர்ந்து உடல் எடை அதிகரித்துவிட்டதா? என்ன செய்யலாம்.. இதோ எளிய வழிமுறைகள்...

பொதுவாகவே பெண்கள் தங்களுடைய வாழ்க்கையில் அதிக மனவுளைச்சல் மற்றும் பிற காரணங்களால் அதிக உடற்பருமனுக்கு ஆளாகின்றனர்.

விசேடவிதமாக கர்ப்ப காலத்தை தொடர்ந்து சிலர் மெல்லிய உடல் அமைப்பையும் சிலர் அளவுக்கு அதிகமான உடல் எடை அதிகரிப்புக்கும் முகங்கொடுக்கின்றனர்.



**எலுமிச்சை தண்ணீர்**

சிசேரியனுக்கு பிறகு வயிற்றை சுற்றியுள்ள சதைகளை குறைக்க எலுமிச்சை தண்ணீரை குடிப்பது எடையைக் குறைக்க மிகவும் அவசியமாகும்.

சூடான நீரை எடுத்துக்கொண்டு அதில் சிறிது எலுமிச்சை சாறையும் தேனையும் கலக்க வேண்டும். இந்த நீரை தினமும் காலையில் குடிக்க வேண்டும். சூடான நீர், எலுமிச்சை சாறு மற்றும் தேன் கலந்த கலவை வயிறை சுற்றியுள்ள சதைகளை எளிதாக குறைக்க உதவும். இதை தொடர்ந்து செய்து வந்தால் விரைவில் மாற்றத்தைக் காணலாம்.

**பெல்ட் அணிதல்**

சிசேரியனுக்கு பின் எடையை குறைக்கும் பெல்ட் அணிவது வயிற்று சதையை குறைப்பதில் நன்கு உதவுகிறது. இந்த பெல்ட் வயிற்றுத் தசையில் பிணைப்பைப் ஏற்படுத்தி, வயிற்றுத் தசைகளை குறைக்க உதவுகிறது, இதன் மூலம் வயிற்று கொழுப்பைக் குறைத்து, முதுகுவலியையும் குறைக்கிறது. பிரசவத்திற்கு பிறகு வயிறு பகுதியில் இருந்து கொழுப்பு இழக்க விரும்புபவர்களுக்கு இந்த பெல்ட் பரிந்துரைக்கப்படுகிறது.

**போதுமான அளவு தண்ணீர் குடித்தல்**

போதுமான அளவு தண்ணீர் குடிப்பது பெண்கள் உடலின் நீர் மேலாண்மையை மட்டும் பராமரிப்பதில்லை, உடலில் உள்ள தேவையில்லாத கொழுப்புகளையும் குறைக்க உதவுகிறது. சிசேரியனுக்கு பிறகு அதிக தண்ணீர் குடிப்பது உடலின் நீர் மேலாண்மையை சரி செய்வதோடு அதிக உணவு உண்பதையும் தடுக்கிறது. எனவே சிசேரியனுக்குப் பிறகு வயிற்றை குறைக்க முதலில் செய்ய வேண்டியது அதிகளவு நீர் குடிக்கப்பதுதான்.

**ஒழுங்கான உணவுமுறை**


பொதுவாக பெண்களுக்கு நாளொன்றுக்கு 300 முதல் 500 வரை கலோரிகள் தேவைப்படுகிறது. சிசேரியனுக்குப் பிறகு அவர்களால் வழக்கமான உடற்பயிற்சிகளை செய்ய இயலாது. எனவே அளவான உணவை சரியான அளவில் எடுத்துக்கொண்டு நொறுக்கு தீனிகளில் இருந்து விலகி இருக்க வேண்டும். சரியான உணவை எடுத்துக்கொள்வதே உங்களின் வயிற்றை குறைக்க பெரிதளவில் உதவும்.

**சிறிய நடைப்பயிற்சி**

அறுவைசிகிச்சை காரணமாக அவர்கள் கடுமையான உடற்பயிற்சியிலோ நீண்ட தூர நடைப்பயிற்சியிலோ ஈடுபட இயலாது. ஏனென்றால் அது வயிற்றையும், வயிற்றை சுற்றியுள்ள பகுதியையும் பெரிதளவில் பாதிக்கும். எனினும், காலையோ, மாலையோ அரைமணி நேரம் நடைப்பயிற்சி செய்வது எடையைக் குறைக்க அவசியம். தினசரி இதுபோன்ற சுறுசுறுப்பான நடைப்பயிற்சி தொப்பையை குறைக்க பெரிதும் உதவும்.

# அடி முதுகு வலி, தசை வலி, எலும்பு வலியா? முதலில் இதைக் கவனியுங்கள்

வைட்டமின் டி எலும்பு மண்டலத்தை வலுப்படுத்துவதற்கு வேண்டிய வைட்டமின்களில் இவை மிகவும் முக்கியமானது. இது கல்சியத்தை உறிஞ்சுவதற்கு இவை அவசியமானது. மேலும் இதய நோய்கள், நீரிழிவு நோய், தொற்றுகள், புற்றுநோய்கள் வரை பல ஆபத்தான நோய்களிலிருந்து இவை பாதுகாக்கிறது. பெரும்பாலும் வயதானவர்கள் வைட்டமின் டி குறைபாட்டுக்கு ஆளாகிறார்கள். சூரிய ஒளி வெளிப்பாட்டுக்கு உட்படாததால், குடல் உறிஞ்சுதலில் குறைபாடு, கல்லீரல் மற்றும் சிறுநீரகங்களில் செயலிழப்பு குறைபாடு போன்றவற்றால் வைட்டமின் டி குறைபாடு உண்டாகலாம். வைட்டமின் குறைபாடுகள் எப்போதும் உடனடியாக வெளிப்படாது. மாதங்கள் தொடங்கி வருடங்கள் வரை படிப்படியாக அதிகரிக்கும். வைட்டமின் டி குறைபாடு குளிர்மாதங்களில் அதிகரிப்பதோடு அறிகுறிகளையும் வெளிப்படுத்தும்.



**அடி முதுகு வலி மற்றும் எலும்புகளில் வலி**

வைட்டமின் டி குறையும் போது உடலில் எலும்புகளில் வலி இருக்கும். குறிப்பாக அடி முதுகில் நன்றாகவே வலியை உணர்வீர்கள். மூட்டுகளில் இணைப்புகளில் வலி உணர்வு இருக்கும். காயங்கள், நாள்பட்ட நோய்த்தொற்றுகள் உட்பட வைட்டமின் டி குறைபாடும் இதற்கு காரணமாக இருக்கலாம். வழக்கத்தை விட அடி முதுகில் வலியை உணர்ந்தால் அதற்கு காரணம் வைட்டமின் டி குறைபாடாக இருக்கலாம்.

# அம்பாறை மாவட்டம்:

# அறுவடைக்கு ஆயத்தமாக இருந்த ஆயிரக்கணக்கான வயல்கள் பாதிப்பு



(வி.சுகிர்தகுமார்)

அம்பாறை மாவட்டத்தில் பெய்த அடை மழை மற்றும் இரண்டாவது தடவையாகவும் ஏற்பட்ட பெரும் வெள்ளம் காரணமாக அறுவடைக்கு தயராகவிருந்த ஆயிரக்கணக்கான ஏக்கர் வயல் நிலங்கள் மிக மோசமாக பாதிக்கப்பட்டன.

இதனால் பல விவசாய நிலங்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளதுடன் எதிர்கால விவசாய செய்கை தொடர்பிலும் சிந்திக்க தொடங்கியுள்ளனர்.

குறிப்பாக ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட நீத்தையாற்றுக்கண்டம், பொத்தானை, கீத்துப்பத்து, பட்டிமேடு, பாமங்கை, அலிக்கம்பை, கண்ணக்கிராமம், பனங்காடு உள்ளிட்ட பல்வேறு பிரதேசங்களிலும் விவசாய செய்கைகள் பாதிக்கப்பட்டுள்ளன.

இதில் அதிகளவான விவசாய நிலங்கள் அறுவடை செய்ய முடியாத நிலைக்கும் தள்ளப்பட்டுள்ளன.

ஆற்றை அண்டிய வயல் நிலங்கள் அதிகமாக பாதிக்கப்பட்டுள்ளதுடன் கீத்துப்பத்து அணை உடைப்பெடுத்ததாலும் அதனோடு இணைந்த பல்வேறு விவசாய நிலங்களும் சேதம் அடைந்தன.

இதேநேரம் சில விவசாய நிலங்களின் வரம்புகளின் ஏற்பட்ட முறிவுகளை சரி செய்வதற்கு கூட விவசாயிகள் அதிக பணத்தை செலவு செய்யவேண்டிய நிலை உருவாகியுள்ளது.ஆகவே அரசாங்கம் விவசாயிகளின் நிலையினை கருத்திற்கொண்டு அவர்களுக்கு தேவையான மானிய உதவிகளை வழங்குவதோடு உடைப்பெடுத்த ஆற்றின் அணைகளை சீர் செய்வதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது. இதேநேரம் அறுவடையும் இடம்பெற்றுவரும் நிலையில் நிர்ணய விலை தீர்மானிக்கப்பட்டபோதும் நெல்லிற்கான உரிய விலையினை பெற்றுக் கொள்வதிலும் விவசாயி கள் சிரமங்களை எதிர்கொண்டுள்ளதாக தெரிவிக்கின்றனர்.

இந்நிலையில் விவசாய திணைக்களத்தினால் அறிவிக்கப்படும் ஆரம்ப கூட்டத்தீர்மானத்தின்படியான கால எல்லைக்குள் விவசாயிகள் விதைப்பு நடவடிக்கையினை முன்னெடுப்பது அவசியம் எனவும் இதன் மூலம் பாதிப்புக்களில் இருந்து ஓரளவேனும் தப்பித்துக்கொள்ள முடியும் எனவும் இதன் மூலம் சுட்டிக்காட்டப்படுகின்றது.

## மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் அன்பளிப்பு



(எம்.யூ.எம்.சனூன்)

புத்தளம் நகரில் பல்வேறு சமூக சேவை செய்யும் புத்தளம் நுஸ்கி பவுண்டேஷன் கடந்த வருடங்களைப் போன்று இம்முறையும் மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களை வழங்கி வைத்துள்ளது.

நிகழ்வை நுஸ்கி பவுண்டேஷன் தலைவரான சமூக ஆர்வலர் எம்.என்.எம்.நுஸ்கி ஏற்பாடு செய்திருந்தார். புத்தளம் வடக்கு, பெரிய பள்ளி குடியிருப்பு, புதுக்குடியிருப்பு ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளில் வதியும் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களை சேர்ந்த மாணவர்களுக்கே இந்த கற்றலுக்கான உபகரணங்கள் வழங்கப்பட்டன.

பாலர் பாடசாலை மாணவர்கள் மற்றும் தரம் 1 தொடக்கம் உயர்தரம் வரை கல்வி பயிலும் மொத்தமாக 175 மாணவர்களுக்கு இந்த பாடசாலை உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

## கற்பிட்டி பிரதான வீதியின் சிரமதான பணி ஆரம்பம்

(எம்.எச்.எம்.சியாஜ்)

கிளீன் ஸ்ரீலங்கா வேலைத் திட்டத்தின் ஊடாக கற்பிட்டி பிரதேச சபையினால் முன்னெடுக்கப்படும் கற்பிட்டி தொடக்கம் பாலாவி வரையான பிரதான பாதையின் இரு ஓரங்களில் பாரிய சிரமதான வேலைத்திட்டம் செவ்வாய்க்கிழமை (28) நுரைச்சோலை பொருளாதார மத்திய நிலையத்தில் கற்பிட்டி பிரதேச சபையின் செயலாளர் மங்கல ராமநாயக்க தலைமையில் ஆரம்பிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஜே. எம்.பைசல், தேசிய மக்கள் சக்தியின் புத்தளம் மாவட்ட அமைப்பாளர் நிமல் பத்திரண, கற்பிட்டி கடற்படைத் தளபதி, கற்பிட்டி , கண்டக்குளி சிவில் பாதுகாப்பு பிரிவினர், நுரைச்சோலை பொலிஸ் நிலைய பொறுப்ப திகாரிகள். கற்பிட்டி பிரதேச செயலாளர், உட்பட உத்தி யோகத்தர்கள், கற்பிட்டி பிரதேச சபை உத்தியோகத்தர்கள், சமூக சேவை அமைப்புக்களின் பிரதி நிதிகள், விளையாட்டுகழக வீரர்கள், நலன் விரும்பிகள் என பல்வேறு தரப்பினரும் கலந்து கொண்டனர்.

கற்பிட்டி தொடக்கம் பாலாவி வரையிலான பிரதான வீதியின் இரண்டு பக்கங்களையும் சிரமதானம் மூலம் துப்புரவு செய்தல் வேலைத்திட்டத்திற்கு நுரைச்சோலை பொருளாதார மத்திய நிலையத்தில் இரு குழுக்கள் பிரிக்கப்பட்டு நுரைச்சோலையிலிருந்து பாலாவி வரை வீதியோர சிரமதான பணியை மேற்கொள்வதற்கு ஒரு குழுவும் மற்றைய குழு நுரைச்சோலையிலிருந்து கற்பிட்டி வரை வீதியோர சிரமதான பணிகளை மேற் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

## சாரதி, நடத்துநர் மீது தாக்குதல்;

## பொலிஸார் பாரபட்சம்: ஜனாதிபதிக்கு கடிதம்

(ஏ.எச்.ஏ.ஹுஸைன்)

தனியார் பஸ் சாரதி, நடத்துநர் மற்றும் ஒருவரால் தாக்கப்பட்ட தனது முறைப்பாட்டுக்கு அமைய பொலிஸாரால் உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை எனக் கூறி இலங்கைப் போக்கு வரத்துச் சபை பஸ் நடத்துநர் ஒருவர் ஜனாதிபதியிடம் நீதி கோரி கடிதம் அனுப்பி வைத்துள்ளார்.

இந்தக் கடிதம் திங்களன்று 27.01.2025 ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இலங்கைப் போக்குவரத்துச் சபை வாழைச்சேனை சாலையில் பஸ் நடத்துநராகக் கடமையாற்றும் அபூதாலிப் முஹம்மது ஹிஸாம் என்பவரே ஜனாதிப தியின் கவனத்திற்கு தனது முறைப்பாட்டைக் கொண்டு சென்றுள்ளார்.

ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள அந்த முறைப்பாட்டில் முறைப்பாட்டாளரான முஹம்மது ஹிஸாம் மேலும் தெரிவித்துள்ளதாவது,

கடந்த 2025-01-22ஆம் திகதி எங்களது பஸ் வாழைச்சேனையிலிருந்து மட்டக்களப்பிற்கு சேவையில் ஈடுபட்டிக் கொண்டிருந்து. அன்றைய தினம் பி.ப. 4.30 மணிக்கு எமக்கு வாழைச்சேனையிலிருந்து மட்டக்களப்பிற்கான நேரமாகும். இந்நிலையில் எமக்குரிய நேரத்தில் எமது பஸ் வண்டிக்கு முன்னால் EP NB 7021 இலக்க தனியார் பஸ், அவ்விடத்தில் நிறுத்தி வைத்து பயணிகளை ஏற்றிக்கொண்டிந்தார்கள்.

அந்நேரம் நான் பஸ்ஸிற்குள் இருந்த பயணிகளுக்கு டிக்கற் வழங்கிக்கொண்டிருந்தேன். அப்போது தனியார் பஸ்ஸின் சாரதி, நடத்துநர் மற்றும் இன்னும் ஒருவருமாக மூன்று பேர் எமது பஸ்ஸிற்குள் ஏறி வந்து எனக்கு தலையில் அடிக்க முற்பட்டனர். அப்பொழுது நான் தடுத்ததேன். அடி எனது கையில் பட்டதோடு, இன்னுமொருவர் பொல்லால் எனது தலையில் அடித்து பின்பு என்னை பஸ்ஸிலிருந்து வெளியில் இழுத்தெடுத்து என்னைத் தாக்கினார்.



தாக்கியவர்கள் என் கையிலிருந்த டிக்கட் இயந்திரத்தையும் பறித்தெடுத்து என் கையிலிருந்த 2200 ரூபாய் பணத்தையும் அபகரித்துக் கொண்டு தப்பியோடி விட்டனர். அதன் பின்னர் என்னை வாழைச்சேனை வைத்தியசாலையில் அனுமதித்து மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பிற்கு மாற்றி கடந்த 2025-01-24 ஆம் திகதி மாலை வீட்டிற்கு வந்தேன். அவர்கள் என்னைத் தாக்கியதில் எனது இடது தோள் பட்டையில் வெடிப்பு ஏற்பட்டுள்ளதாக வைத்தியர்கள் கூறினார்கள்.

தற்போது இது தொடர்பாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததற்கிணங்க தனியார் பஸ் வண்டியின் சாரதியை கைது செய்துள்ளனர். மற்றை இருவரையும் கைது செய்யவில்லை.

இந்த தாக்குதலில் ஈடுபட்டவர்கள் ஏற்கெனவே எமது சாலை பஸ் சாரதி, நடத்துநர்களோடு பிரச்சினைப்பட்டுள்ளனர். அதற்கான முறைப்பாடும் உள்ளது. இவர்கள் அடிக்கடி இந்த வழிப்பாதையில் பிரச்சினையை ஏற்படுத்துகின்றவர்கள்.

இது இவ்வாறிருக்க, இதுவரையில் இது தொடர்பாக இலங்கை போக்குவரத்து வாழைச்சேனை சாலையால் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை. அத்தோடு சாலை முகாமையாளர் தனியார் பஸ் நபர்களோடு சமாதானமாகுமாறு என்னிடம் கூறுகின்றார்.என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சமீரகம முஸ்லிம் வித்தியாலயம் 41 வருட வரலாற்றில் சாதனை



(எம்.எச்.எம்.சியாஜ்)

தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சையில் புத்தளம் - தெற்கு கோட்டத்திற்கு உட்பட்ட புத்தளம் சமீரகம முஸ்லிம் வித்தியாலயத்தின் மாணவர்களான அப்துல் வஹாப் மொஹமட் பதீ 144 புள்ளிகள், மொஹமட் அசாம் அஸ்மா 143 புள்ளிகள், அப்துல் ஜப்பார் முஆத் 141 புள்ளிகள், அஜ்மல் கான் அஹமட் 140 புள்ளிகள் என மாவட்ட வெட்டுப் புள்ளிக்கு மேல் பெற்று முதன்முறையாக நான்கு மாணவர்கள் சித்தியடைந்து 41 வருட பாடசாலை வரலாற்றில் சாதனை படைத்துள்ளதாகவும் அத்தோடு இவ் வருடம் முதன் முறையாக இப் பாடசாலையில் இருந்து க.பொ.த சாதாரண தரப் பரீட்சைக்கு மாணவர்கள் தோற்ற உள்ளதாகவும் பாடசாலையின் அதிபர் அஷ்ஷெய்க் எம் எம் எம் மிஹ்ழார் (நளீமி) தெரிவித்தார்.

பாடசாலையில் இருந்து தரம் 05 புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களில் 70 புள்ளிகளுக்கு மேல் 83.3 சதவீத சித்திகள் பெற்றுள்ளனர் எனவும் இம் மாணவர்கள் மற்றும் அவர்களுக்கு அச்சாணியாக தரம் 03 தொடக்கம் கடமையாற்றிய ஆசிரியர் திருமதி எம்.ஆர் ஹஸ்னா பேகம் ஆகியோருக்கு அதிபர் பாடசாலை நிர்வாகம், அபிவிருத்திக் குழு, பழைய மாணவர்கள் சார்பாக தமது வாழ்த்துக்களையும் பாராட்டுக் களையும் தெரிவித்துள்ளார்.

## கோட்டைக்கல்லாறு பொது நூலகத்தில் பொங்கல் விழா



(செ.துஜியந்தன்)

மண்முனை தென் எருவில் பற்று பிரதேச சபைக்குட்பட்ட கோட்டைக்கல்லாறு பொது நூலகத்தில் பொங்கல் விழா வாசகர் வட்டத்தலைவர் அ.புருஷோத்மன் தலைமையில் நடைபெற்றது.

இன்று(28) நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதியாக களுதாவளை பிரதேச சபையின் முன்னாள் செயலாளர் சா.அறிவழகன் கலந்து கொண்டார். கௌரவ அதிதிக ளாக மட்டக்களப்பு மாவட்ட சிரேஷ்ட சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர், களுதா வளை உள்ளூராட்சி உதவியாளர் மனோன்மணி தட்சிணாமூர்த்தி, அபிவிருத்தி உத்தியோகத்தர் சிவராகினி வரப்பிரகாசம், கோட்டைக் கல்லாறு மகாவித்தியாலய பிரதி அதிபர் சி.உருத்திரராஜா, ஓய்வு நிலை ஆசிரியர்களான பா.செல்லத்துரை, உமாபதி சிவம், நூலகப் பொறுப்பாளர் வினோதா அன்ரோ, நூலக உதவியாளர் பா.தனஞ்சயன் உட்பட பலர் கலந்து கொண்டனர். கோட்டைவாசல் நாகதம்பிரான் ஆலய பிரதம குரு சிவசிறிஅ. தனுராஜ் தலைமையில் விசேட பூசை வழிபாடுகள் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

## அநுராதபுரம் சாஹிராவில் ஆறு மாணவர்கள் சித்தி



(எம்.ரீ.ஆரிப்)

தரம் 05 புலமைப் பரிசில் பரீட்சையில் அநுராதபுரம் சாஹிரா கல்லூரியில் ஆறு மாணவர்கள் சித்தியடைந்துள்ளதாக அதிபர் ஜே.ஏ.அசாத் மொஹமட் தெரிவித்தார்.

அதனடிப்படையில் என்.நஹ்சா 167, எம்.என்.ஹுதா 155, எம்.ஆர். எம்.றக்ஷான் 149, எம்.ஆர்.சாரா 142, எம்.என்.ராஹில் மஹ்மூத் 140, எம்.ஆர்.எப். சிம்யா 140 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ளனர்.

இம்மாணவர்கள் மற்றும் அவர்களுக்கு அச்சாணியாக திகழ்ந்த ஆசிரியர்களையும் அதிபர் பாடசாலை நிர்வாகம் அபிவிருத்தி குழு பழைய மாணவர்கள் சார்பாக தமது வாழ்த்துக்களையும் பாராட்டுக் களையும் தெரிவித்துள்ளார்.

# மர்ஹூம் ஏ.ஆர்.எம். ஜிப்ரியின் ஐந்தாவது ஆண்டு நினைவேந்தல்

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

இலங்கை ஒலிபரப்பாளர் ஒன்றியத்தின் ஆதரவில், ஏ.ஆர்.எம். அட்வடைஸிங் அனுசரணையில், சிரேஷ்ட ஒலிஃஒளிபரப்பாளர் அறிவுக்களஞ்சியப் புகழ் அதிபர் மர்ஹூம் ஏ.ஆர்.எம். ஜிப்ரியின் 05 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு பெப்ரவரி மாதம் 02 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 க்கு சாய்ந்தமருது அல்ஹிலால் வரவேற்பு மண்டபத்தில் நடைபெறும். ஒலி/ஒளிபரப்பாளரும் சிரேஷ்ட ஊடகவியலாளரும், இலங்கை ஒலிபரப்பாளர் ஒன்றியத்தின் தலைவருமான யூ.எல்.யாக்கூப் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில், அரசியலமைப்பு பேரவை உறுப்பினரும், அம்பாறை மாவட்ட கரையோரப் பிரதேசங்களின் அபிவிருத்திக்குழு தலைவருமான நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.ஆதம்பாவா பிரதம அதிதியாகக் கலந்து கொள்கிறார். நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.எஸ். உதுமாலெப்பை, அஷ்ரப் தாஹிர் மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அலிஸாஹிர் மௌலானா ஆகியோர் நிகழ்வில் கௌரவ அதிதிகளாகவும் கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர்ஜே. லியாக்கத் அலி, சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம்.ஆசிக், மன்னார் பொது வைத்தியசாலையின் பணிப்பாளர் டாக்டர் அஸாத் எம். ஹனீபா, கல்முனை வலயக்கல்விப் பணிப்பாளர் எம்.எஸ். சஹ்துல் நஜீம், கல்முனை மெடிலேண்ட் வைத்தியசாலையின் பணிப்பாளர் எஸ். எம்.ஏ. அஸீஸ், சாய்ந்தமருது பிரதேச வைத்தியசாலையின் பொறுப்பதிகாரி டொக்டர் சனூஸ் காரியப்பர், அம்பாறை பிரதம பொறியியலாளர் ஏ.எம். சாஹிர், அ.இ.ம.கா கொள்கை பரப்புச் செயலாளரும் முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினருமான கே.எம்.ஏ.றஸாக் (ஜவாத்), முன்னாள் சட்ட ஒழுங்கு அமைச்சின் மேலதிக செயலாளரும், பொதுச் சேவை ஆணைக்குழு உறுப்பினருமான ஏ.எல்.எம். சலீம், முன்னாள் இலங்கை வங்கி முகாமையாளர் கவிஞர் எம்.எம்.எம். பாஸில், பிறை எப்.எம்.பிரதிப் பணிப்பாளர் பஷீர் அப்துல் கையூம், சிரேஷ்ட ஒலி/ஒளிபரப்பாளர் ஏ.எம். தாஜ், கவிஞரும், சிரேஷ்ட ஒலிபரப்பாளருமான ஊடக வித்தகர் எஸ்.ரபீக், சாய்ந்தமருது – மாளிகைக்காடு வர்த்தக சங்கத் தலைவர் எம்.எஸ். முபாறக், சாய்ந்தமருது அல்ஹிலால் வித்தியாலயத்தின் அதிபர் யூ.எல். நஸார், திருகோணமலை ஓ.ஐ.சி



எம்.எஸ்.நஜீம், ஐ.சீ. எச்.எஸ். தவிசாளர் எம்.ஏ. அஹமட் நிப்ராஸ் LLB (Hons). BA. Phd) ஆகியோர் நிகழ்வில் சிறப்பு அதிதிகளாகவும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். தமிழ்ச்சேவை தென்றல் அலைவரிசையின் அறிவிப்பாளரும் செய்தி வாசிப்பாளருமான எம்.எஸ். எம். பஹுறுதீன் நிகழ்வில் நிகழ்ச்சித் தொகுப்பை மேற்கொள்கிறார்.

## கிளீன் ஸ்ரீலங்கா வேலைத்திட்டம்

# கல்முனையில் ஓய்வூதிய பிரிவு திறந்து வைப்பு



(றியாஸ் ஆதம்)

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் கீழ் பணியாற்றி அரச சேவையில் இருந்து ஓய்வு பெற்றுச்செல்லும் வைத்தியர்கள், அரச உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களுக்கு ஓய்வூதியத்தினை விரைவாக பெற்றுக்கொடுக்கும் நோக்கில் ஓய்வூதிய பிரிவொன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது. அரசாங்கத்தின் Clean Srilanka வேலைத்திட்டத்தின் கீழ் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் வழிகாட்டலில் குறித்த பிரிவு செவ்வாய்க்கிழமை (28) பிராந்திய பணிமனையில் உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்பட்டது.

பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி சகீலா, ஸ்ஸடீன் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிராந்திய கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டொக்டர் எம்.சீ.எம். மாஹிர், திட்டமிடல் பொறுப்பு வைத்திய அதிகாரி டொக்டர் ஏ.ஏ.எஸ்.எம்.எஸ்.ஷ ாபி, தாய் சேய் நலன் பிரிவு வைத்திய அதிகாரி டொக்டர் எம்.எச்.றிஸ்பின், தொற்றா நோய் தடுப்பு பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டொக்டர் எச்.ஐ.எம்.எஸ்.,ர்ஷ ாத், பொது சுகாதார பொறுப்பு வைத்திய அதிகாரி ஏ.எல்.எம்.அஜ்வத், உயிரியல் மருத்துவ பொறியியலாளர் என்.எம்.,ப்ஹாம், கணக்காளர் உசைனா பாரிஸ் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

அரச சேவையில் இருந்து ஓய்வு பெற்றுச்செல்லும் அரச உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் தங்களது ஓய்வூதியத்தினை பெற்றுக்கொள்வதில் பல்வேறு ,ன்னல்களையும் அசௌகரியங்களையும் எதிர்கொண்டு வரும் இக்காலத்தில் கல்முனை பிராந்திய பணிமனையில் ஓய்வூதிய பிரிவு திறந்து வைக்கப்பட்டுள்ளமை பெரும் வரவேற்பினை பெற்றுள்ளது.

# சர்வ மதத்தவர்களின் பங்கேற்புடன் சமாதான அருங்காட்சியகத்தில் நிகழ்வு





(ஏ.எச்.ஏ. ஹுஸைன்)

கிளிநொச்சியில் அமையப் பெற்றுள்ள சமாதான சகவாழ்வு அருங்காட்சிக் கலையரங்கில் சர்வ மதத்தவர்களின் பங்கேற்புடன் சமாதான நிகழ்வுகள் இடம்பெற்றதாக அருங்காட்சியக திட்ட இணைப்பாளர் எம். யாழினி தெரிவித்தார்.

பௌத்த, ஹிந்து, இஸ்லாமிய, கிறிஸ்தவ சமயப் பெரியார்கள், செல்வநாயகம் நினைவு அறக்கட்டளையின் செயற்பாட்டாளர்கள், சமாதான சகவாழ்வு ஆர்வலர்களான நெதர்லாந்து நாட்டுப் பிரஜைகள், சமூகத் தலைவர்கள், இளைஞர் யுவதிகள் ஆகியோர் பங்குபற்றிய இந்த நிகழ்வில் சமாதான சௌஜன்ய சகவாழ்வக்கான நிகழ்வுகள் இடம்பெற்றன. வளரிளம் பருவத்தினருக்கிடையில் சாதி, சமய, மொழி வேறுபாடுகளைக் கடந்த ஒப்புரவும் ஒருங்கிணைவும் நிலவ வேண்டியதன் அவசியத்தை சர்வமதப் பெரியார்கள் பாரம்பரிய மத விழுமியங்களுடன் சுட்டிக் காட்டினர். குறிப்பாக, இளையோர்கள் மத்தியில் இன, மத பாகுபாடுகள் இருக்கக் கூடாது என்பது வலியுறுத்தப்பட்டதுடன் மனித நேயம், காருண்யம், அன்பு, அகிம்சை, அரவணைப்பு ஆகிய விழுமியங்கள் மேலோங்க வேண்டும் என்றும் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன. மேலும், வன்முறைக்குப் பதிலாக நன்முறைகளைப் பயன்படுத்திக் கொண்டு சமூகங்களுடன் இணைந்து வாழ்வதற்கு இளையோர் வழி காட்டவும், வழி தேடவும் வேண்டும் என்றும் அங்கு வலியுறுத்தப்பட்டது. நிகழ்வுகளின் துவக்கத்தில் சமாதான, சௌஜன்ய சகவாழ்வுப் பொங்கல் பொங்கி பரிமாறப்பட்டது. தந்தை செல்வா சமாதான சகவாழ்வு அருங்காட்சிக் கலையரங்கு தந்தை செல்வா அவர்களின் நினைவாகவும் யுத்தத்திலிருந்து மீண்டெழும் தமிழ் பேசும் மக்களின் வல்லமையின் எடுத்துக் காட்டாகவும் 15.11.2022 இல் கிளிநொச்சியில் திறந்து வைக்கப்பட்டது.

# கடற்கரைச்சேனை அ.த.க.வி மாணவர்கள் வரலாற்றுச்சாதனை




(கிண்ணியா கியாஸ் ஷாபி)

2024ஆம் ஆண்டு தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் மூதூர் வலயக்கல்வி அலுவலகத்திற்குட்பட்ட தி/மூ/கடற்கரைச்சேனை அ.த.க.வித்தியா லயத்திலிருந்து தோற்றிய மாணவர்களில் மூவர் வெட்டுப்புள்ளிக்கு மேல் பெற்று சித்தியடைந்துள்ளனர்.

பாடசாலை வரலாற்றில் கூடுதலான மாணவர்கள் ஒரே தடவையில் சித்திபெற்ற முதல் சந்தர்ப்பம் இதுவாகும்.பரீட்சைக்கு தோற்றிய அனைவரும் 70புள்ளிகளுக்கு மேல் பெற்று 100% சித்தியினை பெற்றுக்கொடுத்துள்ளனர்.

ஜெ.சதுர்ஷி(166), ஜெ.ஷோபிகா(162), பி.வக்சன்(143) ஆகிய மாணவர்களே சித்தியடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சம்புநகர் அல் - மினா வித்தியாலயத்தில் முகம்மது மில்பர் 146 புள்ளி பெற்று சித்தி

(கே எ ஹமீட் )



அட்டாளைச்சேனை சம்புநகர் அக்ஃஅல்– மினா வித்தியாலயத்தில் முதல் தடவையாக ஒரு மாணவர் அண்மையில் வெளிவந்த தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த முகம்மது ஹஸ்பர் முகம்மது மில்பர் என்ற மாணவன் 146 புள்ளிகளைப் பெற்று வெட்டுப்புள்ளிக்கு மேல் பெற்று சித்தி அடைந்துள்ளார். அக்கரைப்பற்று வலயக் கல்விப் பணிப்பாளர் அஷ்ஷெய்க் றஹ்மத்துல்லா வருகை தந்து மாணவர், ஆசிரியர்கள்

மற்றும் அதிபரை பாராட்டி கௌரவித்தார்.இந்நிகழ்வில் பிரதிக் கல்விப் பணிப்பாளர்களான எம். எம் சித்தி பாத்திமா, அப்துல் மஜீத் பாடசாலையின் அதிபர் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

## புலமைப்பரிசில் பரீட்சையில்

# சாய்ந்தமருது அல்ஹிலாலில் 49 மாணவர்கள் சித்தி



(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

சாய்ந்தமருது அல்ஹிலால் வித்தியாலயத்தில் நடைபெற்ற புலமைப்பரிசில் பரீட்சையில் 49 மாணவ, மாணவிகள் வெட்டுப் புள்ளிகளுக்கு மேல் பெற்று, புலமைக்குத் தகுதி பெற்றுள்ளனர்.

இப்பாடசாலையில் இருந்து 237 பிள்ளைகள் தோற்றியுள்ளனர்.

இம் மாபெரும் அடைவுக்காய் பல்வேறுபட்ட திட்டங்கள் வகுத்து, தரம் 5 வகுப்பாசிரியர்களுக்கான அனைத்து செயற்றிட்டங்களுக்கும் ஆலோசனை,அங்கீகாரம் வழங்கி, தியாகத்துடன் செயற்பட்டு வெற்றிக்கு வித்திட்ட இப்பாடசாலையின் அதிபர் யூ.எல். நஸார் உட்பட உதவி அதிபர்களான முஹம்மட் /ஹஸைன் லாபிர், நுஸ்ரத்ஹுஸை ன், நஸ்லின் றிப்கா அன்சார், ஜௌபர் அப்துல், றொஸான் பஸீர், சரிப்டீன் உவைஸ் மற்றும் பாடசாலையின் அபிவிருத்தி தற்போதைய செயலாளர் பொறியியலாளர் கமால் நிஷாத் மாவட்ட பொறியியலாளர் முஹம்மட் சாஹிர் ஆதம்பாவா, முன்னாள் அதிபர் ஐ.எல்.ஏ. மஜீட் மற்றும் இம்மாபெரும் அடைவுக்காய் மாணவர்களை வழிநாடாத்தி நெறிப்படுத்தி கற்றுக்கொடுத்து கரைசேர உதவிய வகுப்பாசிரியர்களான அஸ்வர் யூசுப், முஹம்மட் றிஸ்வான், திருமதி பாத்திமா முறாஅத், திருமதி சமீனா ஹில்மி, திருமதி முபீனா இஸ்மத், ஏ. நசுருதீன், மேலதிக வகுப்புகளில் கற்பித்த ஆசிரியர்களான அருள்குமார், கலேஜன், சுதர்சனன், இர்பான் ஆகியோருடன் ஆங்கில மற்றும் சிங்கள பாட ஆசிரியர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் உட்பட்ட பாடசாலை சமூகத்தினருக்கு அவர்களின் அயராத சேவையினைப் பாராட்டி, பெற்றோர்கள் மற்றும் கல்வியாளர்கள் வாழ்த்துகளைத் தெரிவித்துள்ளனர்.

# றோயல் கனிஷ்ட கல்லூரியில் 25 மாணவர்கள் சித்தி

(ஜௌபர் ஏ கரீம்)



இறக்காமம் கோட்டக்கல்வி அலுவலகத் திற்குட்பட்ட றோயல் கனிஷ்ட கல்லூரியில் இம்முறை வெளியான தரம் ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் 25 மாணவர்கள் வெட்டுப்புள்ளிக்கு மேல் சித்தி அடைந்து கோட்டத்தில் முன்னிலையில் உள்ளனர்.

இறக்காமம் ரோயல் கனிஷ்ட கல்லூரி அதிபர் எம் .ஏ .எம் .பஜீர் தலைமையில் கற்பித்த ஆசிரியர்களான ஏ .எம் .மும்தாஜ் எஸ் .ஏ. எல். ஜெஸ்லி அகமத் (பிரதி அதிபர்) எ. நபிஷா உம்மா, ஏ.எல்.எப் சன்பரா ஆகியோர்களுடன் சித்தி அடைந்த மாணவர்கள் முறையே எம் .ஆர். ஹன்பல் அஹ்மத் (140), எம். எப்.எம். சயான் (141), என். சுஹைல் அப்சர் (154), எம். எப் .எம் முஆத்(159), பி .எம். சயான் (149),எப். அப்துல் ஹாதி (151), எம் .ஐ . பதீன் அஹமத் (144).ஏ.அஹ்னப் அஹமத் (150).எப் .அனான் ஸிம்னத் (151),எம். ஏ. பாத்திமா(141),என்.பதீனா ஸரப்(139),ஆர். தன்ஸிஹா ஷேய்க் ஹாதி (156), ஜே.பதீனா ஸெய்னப் (144), எம் .ஆர். அய்பா ஸீனத் (156),ஏ. எம். மன்ஹா பதீன்(149),கே. ஆர். பாத்திமா றுஸ்தா(149),ஆர். சிமா ஸீனத்(152), என் .ஐதா ஸெய்னப் (156), எம்.எஸ். ஸீனத் சேஹா(142)எம் .லபீகா ஸாறாஹ் ( 143),ஐ. மன்ஹா (147), எம். ஐ .அலீனா ஹயா(143),எச். சுமையா (150), ஏ. மெஹர் ஷெரீன் (147),ஜே. மன்ஹா (154).

# பள்ளிவாசலில் 40 வருட காலமாக பணிபுரியும் சித்தீக்குக்கு கௌரவம்



(எச்.எம்.எம்.பர்ஸான்)

ஓட்டமாவடி பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட மீராவோடை மீரா ஜும்ஆப் பள்ளிவாசலில் சுமார் 40 வருட காலமாக பணிபுரியும் ஆதம் லெப்பை முகம்மது சித்தீக் எனும் வயோதிபரை கௌரவிக்கும் நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை (26) நடைபெற்றது. மீராவோடை மீரா ஜும்ஆ பள்ளிவாசல் நிருவாகம் ஏற்பாடு செய்த இந்நிகழ்வு பள்ளிவாசல் தலைவர் எம்.ஏ.ரஷீத் தலைமையில் நடைபெற்றது. மீராவோடை ரைஸ் மில் வீதியில் வசித்து வரும் 79 வயதுடைய ஏ.எல்.சித்தீக் என்பவர் மீரா ஜும்ஆ பள்ளிவாசலோடு மிகவும் நெருக்கமான தொடர்பினை வைத்திருந்தார். வயோதிபர் சித்தீக் பள்ளிவாசல் நிர்வாகத்தினரால் பொன்னாடை போர்த்தி நினைவுப் பரிசு வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

# சாய்ந்தமருது ஜீ.எம்.எம்.எஸ் பாடசாலை கோட்டத்தில் முதலிடம் பெற்றுச் சாதனை

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

சாய்ந்தமருது ஜீ.எம்.எம்.எஸ் பாடசாலையில் (அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலை) இம்முறை 31 மாணவர்கள் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் வெட்டுப்புள்ளிக்கு மேல் பெற்று தகைமை பெற்றுள்ளனர். இம்முறை இடம்பெற்ற தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றிய 159 மாணவர்களில் 31 மாணவர்கள் வெட்டுப்புள்ளிக்கு மேல் எடுத்து தகைமை பெற்று, இவ்வரலாற்றுச் சாதனையைப் புரிந்த அதேவேளை, சித்தி வீதத்திலும் 95.6 சதவீதம் பெற்று சாய்ந்தமருது கோட்டத்தில் 1ஆம் இடத்தை மீண்டும் தக்கவைத்துள்ளது. இது கடந்த 97 வருட பாடசாலை வரலாற்றில் பெற்ற அதிகூடிய எண்ணிக்கையாகும்.



# கண்டி - மஹியங்கனை வீதி நேற்று முதல் திறப்பு

(எம்.ஏ.அமீனுல்லா)



மழையை தொடர்ந்து ஏற்பட்ட மண்சரிவு சூழ்நிலை காரணமாக இரவு வேளையில் தற்காலிகமாக மூடப்பட்ட கண்டி – மஹியங்கனை வீதி நேற்று (27) இரவு முதல் வாகனப் போக்குவரத்துக்காக திறக்கப்படும் என கண்டி மாவட்ட செயலாளர் இந்திக்க உடவத்த தெரிவித்துள்ளார்.

கடந்த 21ஆம் திகதி முதல் தினமும் மாலை 06.00 மணி முதல் மறுநாள் காலை 06.00 மணி வரை முற்றாக மூடப்பட்டிருந்த இந்த வீதி, தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தினால் வழங்கப்பட்ட பரிந்துரைகளின் அடிப்படையில் திறக்கப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

வீதியில் விழுந்து ஆபத்தான நிலையில் இருந்த கற்கள் அகற்றப்பட்டு, வீதியின் நிலைமை குறித்து தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் ஆய்வு செய்து அறிக்கை அளிக்க விருப்பதாகவும் மற்றும் தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் தேசிய அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் கண்டி மாவட்ட பிரிவு ஆகியன இணைந்து உரிய கடமைகளில் ஈடுபட்டுள்ளன எனவும் கண்டி மாவட்ட செயலாளர் மேலும் தெரிவித்தார்.



மாத்தளை மாவட்ட முஸ்லிம் சமய கலாசார அபிவிருத்தி அதிகாரி எம். ஜிப்ரியின் வேண்டுகோளின் பேரில் மாத்தளை மாவட்டத்தில் எலமல்பொத்த ஜும்ஆ மஸ்ஜித் உட்பட மூன்று தக்கியாக்கள், நிக்ககொல்ல ரஹீமியா மஸ்ஜித், உக்குவளை பரகஹவெல ஆயிஷா மஸ்ஜித் ஆகியனவற்றுக்கு தெரிவான நிர்வாகிகளுக்கான நியமனக் கடிதங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

# வேறொருவரின் தலைமையில் ரணில் ஒன்றிணைய மாட்டார்: கட்சிகள் இணைப்பு சாத்தியமற்றது

(எம்.ஏ.அமீனுல்லா)

ரணில் விக்கிரமசிங்க வேறொருவரின் தலைமையில் என்றுமே ஒன்றிணைய மாட்டார் என்பதால் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் ஐக்கிய மக்கள் சக்தியிற்கும் இடையிலான பேச்சுவார்த்தை வெற்றியடையும் என நம்ப முடியாது என சர்வஜன அதிகாரம் கட்சியின் தேசிய அமைப்பாளர்திலும் அமுனுகம தெரிவித்துள்ளார்.

கண்டி சஹஸ் உயனேயில் ஞாயிற்றுக்கிழமை (26) இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்ததிலும் அமுனுகம மேலும் கூறியதாவது:

ஒன்றாக இருந்த இரு கட்சிக்காரர்கள் தான் மீண்டும் இணைவது குறித்து ஆலோசித்து வருகின்றனர். இவர்கள் ஒன்றாக இணைவார்களா இல்லையா என்பது எங்களுக்குத் தெரியாது.

ஆனால் ரணில் வேறு ஒருவருக்கு தலைமைத்துவத்தை கொடுக்கும் நிலைக்கு செல்வார் என நான் நினைக்கவில்லை. வேறு யாரேனும் வழிநடத்தினால் இந்த இணைதல் நடவடிக்கை வெற்றி அளிக்காது என்பது வேறு விடயம் . ஏனெனில் சஜித்தின் தலைமையில் ஐக்கிய மக்கள் சக்தி கட்சி பல தேர்தல்களில் தோல்வியடைந்தது.

வரலாற்றில் முதன்முறையாக கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் எதிர்க்கட்சிக்குப் பதிலாக வேறொரு குழு ஆட்சிக்கு வந்துள்ளது. எதிர்க் கட்சிகளின் பலவீனத்தால் இது நடந்தது. ஆளும்கட்சி தோற்றால் எதிர்க்கட்சி ஆட்சிக்கு வருவது வரலாற்றில் எப்போதும் நடக்கும் ஒரு மரபாகும். ஆனால் இம்முறை நோக்கு தவறிவிட்டது.

சர்வஜன அதிகாரக் கட்சியியை முன்னிறுத்தி உள்ளூராட்சி மன்றத் தேர்தல் மாத்திரமன்றி, விவசாயத்தின் மூலம் நாட்டை முன்னேற்றும் நோக்குடன் செயற்பட்டு வருகின்றோம்.

துபாய், சிங்கப்பூர், கொரியா போன்ற நாடுகள் இந்தக் கருத்தின் அடிப்படையில் செயல்பட்டதால் வெற்றி பெற்றன.உபாலி விஜேவர்தன இந்த நாட்டிற்கு அறிமுகப் படுத்த எதிர்பார்த்த வேலை திட்டம் இதுவாகும். திலித் ஜயவீர தலைமையில் கட்சி மறுசீரமைப்பு செய்யப்பட்டு முன்னோக்கி நகர்கிறது. மக்களுடன் இருப்பவர்களையும், மக்களை நேசிப்பவர்களையும் நாங்கள் ஒன்று திரட்டுகிறோம்.

உள்ளூராட்சித் தேர்தலில் கூட்டணியில் போட்டியிடுவது குறித்து குற்றச்சாட்டுகள் உள்ளவர்களை நாங்கள் ஏற்கவில்லை.

ஐக்கிய ஐக்கிய முன்னணியுடனான பேச்சுவார்த்தைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்ட போதிலும், இதுவரை இணக்கப்பாடு எட்டப்படவில்லை. பெரும்பான்மையான மக்கள் ஒன்றிணைந்து கூட்டணியாக போட்டியிடுவதே நல்லது என்ற நிலைப்பாட்டில் உள்ளனர். புதிய கட்சியாக நாடு முழுவதும் அமைப்பு பணிகளை செய்து கட்சியின் அடித்தளத்தை கட்டி வருகிறோம்.

மக்களுக்கு பொய்யான வாக்குறுதிகள் வழங்கப்பட்டு அவற்றை நிறைவேற்ற முடியாத போது எதிரணியினர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்படுவது இந்நாட்டின் வரலாறு நெடுகிலும் காணப்படுகின்றது. அந்த பாரம்பரிய அரசியலைத் தான் இன்று தேசிய மக்கள் சக்தி செய்து வருகிறது.

அன்று எங்கள் அரசாங்கம் சரத் பொன்சேகாவை சிறையில் அடைத்தது. அதுவும் தவறுதான். ஆட்சிக்கு வந்த குழு எப்போதும் எதிரிகளையும் அவர்களது குடும்பத்தினரையும் சிறையில் அடைத்தது. இந்த சிறிய வேடிக்கையான காரியத்தை இவர்கள் செய்ய மாட்டார்கள் என்று நினைத்தோம்.



ஆனால் தற்போது இவர்கள் முன்பு இருந்த வழியிலேயே செல்வதை காண முடிகிறது.

'கோயபல்ஸ்' கோட்பாட்டின் அடிப்படையில் பல அபாண்டமான பொய்களைக் கூறி ஆட்சிக்கு வந்த அரசு இது. பொய்களை கூறி மக்களின் மனதை வளைத்து ஆட்சிக்கு வந்த இவர்களால் இன்று வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியவில்லை. அவற்றை மறைக்க, வாகனங்களில் இருந்து துண்டுகள் அகற்றப்படுகின்றன. கைதுகளும் இடம்பெற்று வருகின்றன . இதை மக்கள் எதிர்பார்க்கவில்லை. இன்று ரணில் நடத்திய வேலைத்திட்டத்தை கூட முன்னெடுக்க முடியாத நிலையில் இவர்கள் உள்ளனர்.

# புதிய அரசியலமைப்பு சீர்திருத்தம் சமூகத்துக்கு தெளிவூட்டும் சந்திப்பு





(பு.கஜிந்தன்)

புதிய அரசியலமைப்பு சீர்திருத்தம் தொடர்பாக சமூகத்திற்கு தெளிவூட்டும் முனைப்பில் ஊடக வியலாளர்களுடனான சந்திப்பு ஒன்று நேற்று (28) செவ்வாய்க் கிழமை தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியால் யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விடுதியில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

மேற்படி கலந்துரையாடலில் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் – நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன், ஊடகப் பேச்சாளர் கனகரத்தினம் சுகாஷ், சட்டத்தரணி காண்டீபன் மற்றும் ஊடகவிய லாளர்கள் இதில் கலந்து கொண்டிருந்தனர்.

# புசல்லாவையில் குளவி கொட்டி சிறுவன் பலி; 5 பேர் வைத்தியசாலையில்

புசல்லாவை பிளக் போரஸ்ட்டை சேர்ந்த சிறுவன், குளவிக் கொட்டுக்கு இலக்காகி நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளான்.

புசல்லாவை இந்து ஆரம்பப் பாடசாலையில் தரம் மூன்றில் கல்வி பயிலும் மாணவர் என்பது குறிப்பிடத்தக்கது. சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,

நேற்று முன்தினம் பாடசாலை முடிந்து தனது தந்தையுடன் வீடு திரும்பிக் கொண்டிருந்த வேளை வீட்டுக்கு அருகாமையில் இருந்த குளவிக்கூடு களைந்து சிறுவன் மீதும் தந்தைமீதும் சரமாரியாக கொட்டியுள்ளது. ,அதனைக்கண்ட சிறுவனின் தாய் மற்றும் சகோதரர் காப்பாற்ற முட்பட்டப்போது அவர்கள் மீதும் குளவி கொட்டியத்தில் தந்தை அதி தீவிர சிகிச்சைப்பிரிவிலும் தரம் 09 படிக்கும் சகோதரன் உட்பட குடும்ப அங்கத்தவர்கள் 05 பேர் வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் புசல்லாவை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# முச்சக்கர வண்டி விபத்து: இருவர் படுகாயம்



(க.கிஷாந்தன்)

ஹட்டனில் இருந்து வட்டவளை மவுண்ட்ஜீன் தோட்டத்திற்குச் சென்ற முச்சக்கர வண்டி ஒன்று வீதியை விட்டு விலகி சுமார் 30 அடி பள்ளத்தாக்கில் விழுந்து விபத்துக்குள்ளானதில் முச்சக்கர வண்டியின் சாரதியும், பயணி ஒருவரும் படுகாயமடைந்து வட்டவளை பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பின்னர் காயமடைந்தவர்கள் மேலதிக சிகிச்சைக்காக நாவலப்பிட்டி மாவட்ட பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர் என வட்டவளை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து ஹட்டன் – கொழும்பு பிரதான வீதியில், வட்டவளை குயில்வத்தை எரிபொருள் நிரப்பும் நிலையத்திற்கு அருகில் நேற்று முன்தினம் (27) அதிகாலை இடம்பெற்றுள்ளது.

விபத்து குறித்து விசாரணை மேற்கொண்ட வட்டவளை பொலிஸ் அதிகாரிகள், அதிகவேகத்தில் முச்சக்கரவண்டியை செலுத்தியதன் காரணமாக அதன் வேகத்தைக் கட்டுப்படுத்த முடியாமல் போனதனாலேயே முச்சக்கரவண்டி வீதியை விட்டு விலகி பள்ளத்தில் வீழ்ந்து விபத்துக்குள்ளானதாகக் தெரிவித்தனர்.

விபத்தில் முச்சக்கரவண்டி பெரும் சேதமடைந்துள்ளதோடு, விபத்து குறித்து மேலதிக விசாரணைகளை வட்டவளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# புனித ஜோகிம் தேயிலை ஆராய்ச்சி நிலையத்திற்கு பிரதியமைச்சர் விஜயம்

பெருந்தோட்ட சமூக உட்கட்டமைப்பு வசதிகள் பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப் இரத்தினபுரி மாவட்டத்திலுள்ள கரபிஞ்ச, புனித ஜோகிம் தேயிலை ஆராய்ச்சி நிலையத்தினை (TRI) நேரில் சென்று பார்வையிட்டுள்ளார்.

அச்சந்தர்ப்பத்தில் அங்கு நிலவுகின்ற குறை நிறைகளை நேரடியாகக் கேட்டறிந்த அவற்றுக்கான தீர்வினை பெற்றுக் கொடுப்பதற்காகச் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்தார். அதன் பின்னர் இயந்திர சாதனங்களையும் பார்வையிட்ட அமைச்சர் எதிர்காலத்திலே புதிய தொழில் நுட்பங்கள் மூலம் உலகின் போட்டித் தன்மைக்கு ஏற்ப சந்தை யில் இலங்கையின் தேயிலையின் தரத்தை உயர்த்த வேண்டும்.

இலங்கை மொத்த தேசிய உற்பத்தியில் தேயிலை உற்பத்தியில் ஒரு தன்னிறைவை அடைய வேண்டுமாயின் புதிய வழிமுறைகளை மேற்கொள்ளுவதன் மூலமே தேயிலை உற்பத்தியின் ஓர் நிலையான அன்னிய செலாவணியை ஈட்டிக் கொள்ள முடியும்



எனக் கலந்து கொண்டிருந்த அதிகாரிகளுக்கு அமைச்சர் விளக்கமளித்தார்.

# ஹப்புகஸ்தென்ன தமிழ் வித்தியாலயத்திற்கு மைதானம்





மலையகம் எமது தாயகம் அமைப்பின் 490ஆவது வேலை திட்டமாக மஸ்கெலியா ஹப்புகஸ்தென்ன தமிழ் வித்தியாலயத்திற்கான மைதானம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டு கொடுக்கப்பட்டுள்ளது.

இந்த பாடசாலை மாணவர்களின் கனவாக இருந்த இந்த மைதானம் அவர்களின் விளையாட்டு திறனை வளப்பதற்கு ஓர் உந்து சக்தியாக இது அமைவுள்ளது.

அத்தோடு பாடசாலை மாணவர்களுக்கான பாடசாலை உபகரணங்கள் மற்றும் பாடசாலை மாணவர்களுக்கு விளையாட்டு உபகரணங்கள், அனைத்தும் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

# கண்டியில் சுதந்திர தின நிகழ்வு தொடர்பான கலந்துரையாடல்

(எம்.ஏ.அமீனுல்லா)

மத்திய மாகாண சபையும் கண்டி மாவட்ட செயலகமும் இணைந்து ஏற்பாடு செய்த 77ஆவது சுதந்திர தின நிகழ்வுக்கான விசேட கலந்துரையாடல் மத்திய மாகாண பிரதம செயலாளர் அஜித் பிரேமசிங்க தலைமையில் நேற்று முன்தினம் (27) மத்திய மாகாண பிரதம செயலகத்தில் இடம்பெற்றது.

06 பாடசாலைகளை மாதிரி பாடசாலையாகத் தரம் உயர்த்துதல், இரத்த தானம் வழங்கும் நிகழ்ச்சிகள், கிளீன் ஸ்ரீலங்கா சுத்திகரிப்பு நிகழ்ச்சிகள், மர நடுகை நிகழ்ச்சிகள் என்பன போன்ற அபிவிருத்தி நோக்குடன் இவ்வருட மத்திய மாகாண சுதந்திரதின நிகழ்வுக்கான நிகழ்ச்சி ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.



இது தொடர்பான பிரதான வைபவம் பெப்ரவரி 04ஆம் திகதி கண்டி கல்வி வலயத்தில் ஹிந்தகல சீவலி மகா வித்தியாலயத்தில் நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இப்பாடசாலையை முன்மாதிரி பாடசாலையாக அபிவிருத்தி செய்வது தொடர்பிலும் மாகாண சுதந்திர தின நிகழ்வு தொடர்பான ஆலோசனைகளையும் யோசனைகளையும் பெற்றுக்கொள்வது தொடர்பிலும் நீண்ட கலந்துரையாடல் இடம்பெற்றது.

இக் கூட்டத்தில் அமைச்சின் செயலாளர்கள், திணைக்கள உயர் அதிகாரிகள், கண்டி மேலதிக மாவட்டச் செயலாளர் லலித் எட்டம்பாவல மற்றும் மத்திய மாகாண சபையின் அதிகாரிகள் பலர் இதன்போது கலந்து கொண்டனர்.



# "புகைப்படத்தை வாங்கித்தா" சீமான் என்னிடம் கெஞ்சினார்

பிரபாகரனுடன் சீமான் இருக்கும் புகைப்படம் போலியானது என விடுதலைப் புலிகளின் தோழர் கரு.அண்ணாமலை தெரிவித்துள்ளார். சன் நியூஸ் தொலைக்காட்சிக்கு அளித்துள்ள பேட்டி ஒன்றிலேயே கரு.அண்ணாமலை, சீமான் வெளியிட்டது கிராபிக்ஸ் புகைப்படம் எனத் தெரிவித்துள்ளார்.

நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான், விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் பிரபாகரனுடன் இருக்கும் புகைப்படம் போலியானது என்றும் அதனை எடிட் செய்து கொடுத்ததே நான்தான் எனவும் திரைப்பட இயக்குநர் சங்ககிரி ராஜ்குமார் கடந்த சில தினங்களுக்கு முன்பு அதிரடியாக அறிவித்திருந்தார்.

இது தொடர்பில் கரு. அண்ணாமலை கூறுகையில், "சீமான் ஈழத்துக்கு போனது உண்மை. பல நாள் காத்திருந்து பிரபாகரனை பார்க்க முயற்சித்தும் அனுமதி மறுக்கப்பட்டதால் கொளத் தூர் மணி மூலமாக பிரபாகரனை சந்தித்து அவருடன் புகைப்படம் எடுத்ததும் உண்மை. ஆனால், அது இந்தப் புகைப்படம் அல்ல. இது கிராபிக்ஸ் மூலம் எடிட் செய்யப்பட்டது என்றார்.




# 21 சமூக நீதிப் போராளிகள் மணிமண்டபம் திறப்பு





விழுப்புரம் வழுதரெட்டியில் தமிழக அரசால் அமைக்கப்பட்டுள்ள முன்னாள் அமைச்சர் ஏ.கோவிந்தசாமி நினைவு அரங்கம், 21 சமூகநீதி போராளிகளின் மணிமண்டபத்தை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நேற்று திறந்து வைத்தார். தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நேற்று முன்தினம் மாலை விழுப்புரம் சென்ற நிலையில் அவருக்கு தி.மு.க தொண்டர்களும் பொதுமக்களும் திரண்டு உற்சாக வரவேற்பு அளித்தனர்.

இந்நிலையில் நேற்று காலை மக்கள் புடைசூழ வழுதரெட்டி பகுதிக்குச் சென்ற முதலமைச்சர் ஸ்டாலின். விழுப்புரம் நகராட்சிக்கு உட்பட்ட வழுதரெட்டியில் அமைக்கப்பட்டுள்ள முன்னாள் அமைச்சர் ஏ.கோவிந்தசாமி நினைவரங்கம் மற்றும் சமூகநீதி போராளிகளின் மணிமண்டபத்தை திறந்து வைத்து நலத்திட்ட உதவிகள் வழங்கினார்.

# அயோத்தி கோயிலில் பக்தர்கள் இருவர் உயிரிழப்பு

பிரயாக்ராஜ் நகரில் மகா கும்பமேளாவில் புனித நீராட வரும் பக்தர்கள் அயோத்தி ராமர் கோயிலுக்கு வருகின்றனர். இதனால் அயோத்தி நகரத்தில் பக்தர்கள் கூட்டம் நேற்று அதிகமாக இருந்தது. இந்தநிலையில்,



நேற்று கோயிலில் வழிபட காத்திருந்த ஒரு முதியவர் மற்றும் மூதாட்டி திடீரென மயங்கி விழுந்து இறந்தனர். கோயிலில் ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி அவர்கள் இறந்து விட்டதாக சமூக வலைதளங்களில் தகவல் பரவியது. இந்த செய்திக்கு பொலிசார் மறுப்பு தெரிவித்துள்ளனர்.

# ஜனநாயகம் செழிக்க ஒரே நாடு ஒரே தேர்தல் விவாதம் அவசியம்:

இந்திய ஜனநாயகம் செழிக்க ஒரே நாடு ஒரே தேர்தல் குறித்த விவாதங்கள் மிகவும் முக்கியம் என பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார். குடியரசு தினத்தையொட்டி டெல்லியில் 2,361 மாணவ, மாணவிகளுடன் தேசிய மாணவர் படை (என்சிசி) முகாம் நடைபெற்று வந்தது. இந்த முகாமின் நிறைவாக, கரியப்பா மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற வருடாந்திர என்சிசி கூட்டத்தில் பிரதமர் நரேந்திர மோடி கலந்து கொண்டு உரையாற்றினர். அங்கு அவர் உரையாற்றுகையில் தெரிவத்ததாவது:



இந்திய ஜனநாயக நடைமுறைகளுக்கு ஒரே நாடு, ஒரே தேர்தல் குறித்த விவாதம் முக்கியம். ஒரே நாடு, ஒரே தேர்தல் குறித்த விவாதங்களில் அனைவரும் ஈடுபட வேண்டும் என கேட்டுக்கொண்டார். சுதந்திரத்திற்கு பிறகு மத்திய அளவிலும், மாநிலங்கள் அளவிலும் ஒரே நேரத்தில் தான் தேர்தல்கள் நடத்தப்பட்டதாக தெரிவித்த அவர், பிற்காலத்தில் பல்வேறு சாவல்களால் அந்த நடைமுறைகள் பாதிக்கப்பட்டதாக கூறினார்.

வெவ்வேறு காலகட்டங்களில் தேர்தல்கள் நடத்தப்படுவதால் ஆட்சி நிர்வாகமும், நாட்டின் வளர்ச்சியும் பாதிக்கப்படுவதாக குறிப்பிட்டுள்ள அவர், இதற்கு தீர்வு காணவே ஒரே நாடு ஒரே தேர்தல் என்ற திட்டத்தின் பரிந்துரை கொண்டுவரப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

## தனுஷ் - நயன்தாரா வழக்கு:

# நெட்பிளிக்ஸ் தாக்கல் செய்த மனு தள்ளுபடி!




நடிகை நயன்தாராவின் திருமண ஆவணப்படத்தில் நானும் ரவுடிதான் படப்பிடிப்பு காட்சிகளை பயன்படுத்தியதற்காக 10 கோடி ரூபா இழப்பீடு கோரி நடிகர் தனுஷின் வொண்டர் பார் நிறுவனம் தாக்கல் செய்த வழக்கை நிராகரிக்க வேண்டும் என நெட்பிளிக்ஸ் நிறுவனம் தரப்பில் சென்னை உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டிருந்தது. இந்த மனு தற்போது தள்ளுபடி செய்யப்பட்டிருக்கிறது. நடிகை நயன்தாரா திருமண ஆவணப்படத்தில், நானும் ரவுடி தான் படப்பிடிப்பு காட்சிகளை பயன்படுத்தியதற்கு எதிர்ப்பு தெரிவித்து, 10 கோடி ரூபாய் இழப்பீடு கேட்டு நடிகர் தனுஷின் வொண்டர்பார் நிறுவனம் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்திருந்தது. இந்த மனுக்கள் நீதிபதி அப்துல் குத்தூஸ் முன்பு விசாரணைக்கு வந்தபோது, நெட்பிளிக்ஸ் சார்பில் ஆஜரான சிரேஷ்ட வழக்கறிஞர் பார்த்தசாரதி, திரைப்படத்தில் இடம்பெறாத படப்பிடிப்பு காட்சிகளுக்கு வொண்டர்பார் நிறுவனம் பதிப்புரிமை கோர முடியாது எனவும் படப்பிடிப்பு காட்சிகள் 2020ஆம் ஆண்டே வெளியான போதும், தாமதமாக 2024ஆம் ஆண்டே குறித்த வழக்கு தொடரப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# 100வது ராக்கெட்டை விண்வெளியில் ஏவும் இஸ்ரோ..

இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் (இஸ்ரோ) ஜி.எஸ்.எல்.வி. எப்ரல் 15 ரொக்கெட் மூலம் என்.வி.எஸ்-02 என்ற செயற்கைக்கோளை வெற்றிகரமாக விண்ணில் செலுத்தவுள்ளது. இதன் மூலம் இஸ்ரோ, தனது 100ஆவது செயற்கைக்கோளை விண்ணில் செலுத்தி வரலாறு படைக்க தயாராகி வருகிறது. ஸ்ரீஹறிகோட்டாவில் உள்ள சதீஷ் தவான் விண்வெளி ஆய்வு மையத்தில் உள்ள 2ஆவது ஏவுதளத்தில் இருந்து



நாளை காலை 6.23 மணிக்கு ரொக்கெட் விண்ணில் செலுத்தப்பட உள்ளது.

இந்த ரொக்கெட்டுக்கான இறுதிக்கட்டப்பணியான 25 மணி நேர சரிபார்ப்பு நேற்று செவ்வாய்க்கிழமை காலை 5.23 மணிக்கு தொடங்கியுள்ளதுடன் ரொக்கெட் மற்றும் செயற்கைக்கோளின் செயல்பாடுகள் கண்காணிக்கப்பட்டு வருவதாக இஸ்ரோ விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

# தமிழக மீனவர்களின் கைதுக்கு மத்திய அரசின் நடவடிக்கை அவசியம்



தமிழக மீனவர்கள் கைது செய்யப்படும் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காண மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக அவர் தனது எக்ஸ் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில், "25.1.2025ஆம் திகதி வங்கக்கடலில் மீன் பிடித்துக்கொண்டிருந்த இராமேஸ்வரத்தைச் சேர்ந்த மீனவர்கள் 13 பேரை இலங்கை கடற்படை கைது செய்ததுடன், அவர்களது படகுகளையும் பறிமுதல் செய்துள்ளதாக வெளிவந்த செய்தி அதிர்ச்சியளிக்கிறது.

மீன்பிடிக்கச் செல்லும் தமிழக மீனவர்கள் அடிக்கடி இலங்கை கடற்படையினரால் கைது செய்து சிறையில் அடைக்கப்படுவதும், மீனவர்களது படகுகளை இலங்கை கடற்படையினர் பறிமுதல் செய்வதும் அதிகரித்துள்ளது. என்றாா. இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்: காரைக்கால் மாவட்டம் கிளிஞ்சல்மேடு மீனவ கிராமத்தை சேர்ந்த ஆனந்தவேல் என்பவருக்குச் சொந்தமான விசைப்படகில் அதே ஊரைச் சேர்ந்த 13 பேர் கடந்த 25ஆம் திகதி காரைக்கால் மீன்பிடி துறைமுகத்திலிருந்து கடலுக்குள் மீன்பிடிக்கச் சென்றனர். இந்நிலையிலேயே குறித்த 13 மீனவர்களும் விசைப்படகுடன் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றார்.

## லட்டு மகா உற்சவத்தில் ஏற்பட்ட விபரீதம்:

# கண்காணிப்பு கோபுரம் சரிந்ததில் 7 பேர் பலி 50க்கும் மேற்பட்டோர் படுகாயம்!



உத்தரபிரதேச மாநிலம் பாக்பத் மாவட்டத்தின் பாரவுத் நகரில் உள்ள ஆதிநாத் கோவிலில் லட்டு மகாஉற்சவம் நடைபெறுகிறது.

ஜெயின் சமூகத்தினர் இந்த "லட்டு மஹோத்சவ" நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்துள்ளர். இந்நிலையில் இன்று காலை கண்காணிப்பு கோபுரம் சரிந்து விழுந்ததில் குறைந்தது 7 பேர் உயிரிழந்தனர். சுமார் 50 பேர் காயமடைந்துள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

சம்பவம் நடைபெற்ற கோவிலில் "லட்டு மஹோத்சவம்" என்ற நிகழ்வுக்கு ஜெயின் சமூகத்தினர் ஏற்பாடு செய்திருந்தனர். இதையடுத்து, திரளானோர் கோவிலுக்கு வருகை தந்து லட்டு வழங்கி வந்தனர். பக்தர்கள் வசதிக்காக கோவில் அருகே மூங்கிலில் மேடை போன்று அமைக்கப்பட்டு இருந்தது. இதில் பக்தர்கள் ஏறி சென்ற நிலையில், அதிக பாராம் தாங்க முடியாமல் மேடை சரிந்தது. இந்த நிகழ்வில் கலந்து கொண்ட ராகேஷ் ஜெயின் என்பவர் கூறும் போது, இந்த நிகழ்வு ஒவ்வொரு ஆண்டும் நடைபெறுகிறது. இதற்காக மேடை அமைக்கப்படுவது வழக்கமான ஒன்று தான். அந்த வகையில், பூசாரிகள் லட்டு வழங்க சென்ற போது, மேடை சரிந்து கீழே விழுந்தது. அப்போது நூற்றுக்கும் அதிகமானோர் மேடையில் இருந்தனர், என்று தெரிவித்தார்.

# சென்னையில் மாணவிகள் மூவர் பாலியல் பலாத்காரம்

சென்னையில் காதலிப்பதாக கூறி பாடசாலை மாணவிகள் 3 பேரை அழைத்துச் சென்ற அப்பகுதியைச் சேர்ந்த 3 மாணவர்கள் பாலியல் வன்கொடுமை செய்த சம்பவம் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தி உள்ளது. இதுதொடர்பாக 6 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சென்னை பெரம்பூரை சேர்ந்த 12 வயது சிறுமி ஒருவர் கடந்த 24ஆம் திகதி, தோழியின் வீட்டுக்கு செல்வதாக கூறி புறப்பட்டு சென்ற நிலையில் வீடு திரும்பாததால் பெற்றோர் பல இடங்களில் தேடியும் மாணவியை கண்டுபிடிக்க முடியவில்லை. இதையடுத்து, மகள் காணாமல் போனது குறித்து பொலி ஸில் புகார் தெரிவித்தனர்.




இந்நிலையில் மாணவியின் தோழிகளான அதே பகுதியை சேர்ந்த 14 வயது மாணவி மற்றும் வில்லிவாக்கத்தை சேர்ந்த 16 வயது மாணவி ஆகியோரும் மாயமானது தெரியவந்தது. இதையடுத்து தொடர்ந்த விசாரணையில் 3 மாணவிகளையும் மாணவர்கள் 3 பேர், காதல் வலையில் வீழ்த்தி அழைத்து சென்றதும் தெரியவந்தது.

### இருப்பிடத்தை காட்டிய கைப்பேசி:

இதையடுத்து, குறித்த விசாணையில் களமிறங்கிய சைபர் க்ரைம் பொலிஸார் சம்பந்தப்பட்ட அனைவரது கைப்பேசிகள் மூலம் அவர்கள் இருப்பிடத்தை கண்டுபிடிக்கும் பணி முடுக்கிவிடப்பட்டனர். இதில் ஒரு ஐடிஐ மாணவர் மற்றும் சிறுமியின் நண்பர்களான 16 மற்றும் 17 வயது மாணவர்கள் ஆகியோர் சேர்ந்துதான் மாணவிகளை அழைத்துச் சென்றுள்ளனர் என்பதையும் பொலிஸார் கண்டுபித்த நிலையில் காதலிப்பதாக கூறி 3 மாணவிகளையும் அந்த மாணவர்கள் கடந்த 24ஆம் திகதி இரவு பெரம்பூரில் உள்ள அரசு நூலகம் ஒன்றின் மொட்டை மாடிக்கு அழைத்து சென்று பாலியல் வன்கொடுமை செய்துள்ளனர் என்பதும் தெரியவந்தது.

# விருத்தகிரீஸ்வரர் கோவிலில் ஒரேநேரத்தில் மண் சோறு சாப்பிட்ட 2000 பக்தர்கள்



கடலூர் மாவட்டம் , விருத்தாசலம் எருமனூர் வீதியிலுள்ள ஜெகமுத்துமாரி அம்மன் கோவிலில் ஆண்டுதோறும் பக்தர்கள் தை மாதம் சமயபுரம் மாரியம்மனுக்கு மாலை அணிந்து யாத்திரை செல்வது வழக்கம்.

அந்த வகையில் இந்தாண்டு பக்தர்கள் யாத்திரை செல்வதை முன்னிட்டு திருமணம், குழந்தை வரம் உள்ளிட்ட வேண்டுதல்களுடன் மாலை அணிந்து விரதம் இருந்து கோயிலுக்கு சென்றனர்.

இதன் ஒரு பகுதியாக பக்தர்கள் மண்சோறு சாப்பிடும் நிகழ்வு நடைபெற்றது. இந்நிலையில் ஜெகமுத்துமாரி அம்மனுக்கு பால், தயிர், இளநீர், பன்னீர், தேன் உள்ளிட்ட பல்வேறு பொருட்களால் அபிஷேகம் பெற்று பின்னர் சிறப்பு மலர் அலங்காரத்தில் எழுந்தருளிய ஜெகமுத்துமாரி அம்மனை பக்தர்கள் தென் கோட்டை வீதி வழியாக விருத்தாசலம் விருத்தகிரீஸ்வரர் கோவிலிலுக்கு கொண்டு சென்றனர். இதனைத்தொடர்ந்து 2000க்கும் மேற்பட்ட பக்தர்கள் ஒரேநேரத்தில் கோவில் வளாகத்தில் தரையில் அமர்ந்து மண்சோறு சாப்பிட்டனர்.

# ட்ரம்ப் மீதான விசாரணை: சட்டத்தரணிகள் குழு பணி நீக்கம்

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் நிர்வாகம் அவருக்கு எதிரான இரண்டு குற்றவியல் வழக்குகளில் பணியாற்றிய பத்துக்கும் மேற்பட்ட நீதித்துறை சட்டத்தரணிகளை பணிநீக்கம் செய்துள்ளது.

பதவி நீக்கமானது திங்கட்கிழமை (27) முதல் அமுலுக்கு வந்துள்ளது.

ஜனாதிபதிக்கு எதிராக வழக்குத் தொடுப்பதில் இவர்கள் குறிப்பிடத்தக்க பங்கைக் கொண்டிருப்பதால், ஜனாதிபதியின் நிகழ்ச்சி நிரலை நம்பிக்கைத் தன்மையாக செயல்படுத்துவதை நம்ப முடியாது என்று தீர்மானம் எடுக்கப்பட்டதை அடுத்து சட்டத்தரணிகள் பணிநீக்கம் செய்யப்பட்டதாக செயல் சட்டமா அதிபர் ஜேம்ஸ் மெக்ஹென்றி சுட்டிக்காட்டியுள்ளார். சட்டத்தரணிகள், முன்னாள் சிறப்பு ஆலோசகர் ஜாக் ஸ்மித்தின் குழுவின் ஒரு பகுதியாக இருந்தனர்.

இந்தக் குழு ட்ரம்பின் இரகசிய ஆவணங்களை தவறாகக் கையாண்டதுடன், 2020 தேர்தல் தோல்வியை முறியடிக்க அவர் செய்ததாகக் கூறப்படும் முயற்சி மீதான விசாரணைகளை மேற்கொண்டிருந்தது.

ட்ரம்ப் மீதான இரண்டு நீதித்துறை வழக்குகளை மேற்பார்வையிட ஜாக் ஸ்மித் 2022 இல் சிறப்பு ஆலோசகராக நியமிக்கப்பட்டார்.

இந்த நிலையில், ஜனாதிபதியாக மீண்டும் பதவியேற்ற இரண்டு வினாடிகளுக்குள் அவரை பதவி நீக்கம் செய்வதாக ஜனாதிபதி சபதம் செய்திருந்தார். எனினும், ஜனவரி 20 ஆம் திகதி ஜனாதிபதியாக ட்ரம்ப் பதவியேற்பதற்கு முன்பே ஜாக் ஸ்மித் பதவி விலகினார். இரண்டு வழக்குகளும் ட்ரம்ப் மீது குற்றவியல் குற்றச்சாட்டுகளை விளைவித்தன.

எனினும், 2024 நவம்பர் தேர்தலில் அவர் வெற்றி பெற்றதைத் தொடர்ந்து வழக்குகள் முடக்கப்பட்டன. நீதித்துறை விதிமுறைகளின் படி, ஒரு பதவியில் இருக்கும் ஜனாதிபதியை வழக்குத் தொடர அனுமதிக்காது என்று சட்டத்தரணிகள் சுட்டிக்காட்டினர். எவ்வாறெனினும் ஸ்மித்தின் குழுவிலிருந்து பதவி நீக்கப்பட்டவர்கள் யார் என்பது உடனடியாகத் தெரியவில்லை.



# ரஷ்யாவின் போர் விமானங்களை வாங்கிய ஈரான்



ஈரான், ரஷ்ய தயாரிப்பான சுகோய்-35 போர் விமானங்களை வாங்கியுள்ளதாக இஸ்லாமிய புரட்சிகர காவல்படையின் (IRGC) தளபதி ஒருவர் திங்கட்கிழமை (27) தெரிவித்தார்.

தெஹ்ரானுக்கும் மொஸ்கோவிற்கும் இடையிலான இராணுவ ஒத்துழைப்பு குறித்து மேற்கு நாடுகளில் அதிகரித்து வரும் கவலைகளுக்கு மத்தியில் இந்த அறிவிப்பு வந்துள்ளது. ஈரானிய அதிகாரி ஒருவர் Su-35 ஜெட் விமானங்களை வாங்குவதை உறுதி செய்வது இதுவே முதல் முறை. எனினும், எத்தனை ஜெட் விமானங்கள் வாங்கப்பட்டன, அவை ஏற்கனவே ஈரானுக்கு வழங்கப்பட்டதா என்பது போன்ற விடயங்களை IRGC தளபதி அலி ஷத்மானி அவரது அறிவிப்பில் தெளிவுபடுத்தவில்லை.

2023 நவம்பரில் ஈரானின் Tasnim செய்தி நிறுவனம், ரஷ்ய போர் விமானங்களை வாங்குவதற்கான ஏற்பாடுகளை தெஹ்ரான் முடித்துள்ளதாகத் தெரிவித்தது. இந்த மாத ஆரம்பத்தில், ஈரானும் ரஷ்யாவும் ஒரு விரிவான மூலோபாய கூட்டாண்மையில் கையெழுத்திட்டன. இது ஆயுத பரிமாற்றங்கள் வெளிப்படுத்தப்படவில்லை, ஆனால் இரு நாடுகளும் தங்கள் "இராணுவ-தொழில்நுட்ப ஒத்துழைப்பை" மேம்படுத்துவதை நோக்காகக் கொண்டு செயற்படுவதாக கூறியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.




# ஐரோப்பாவில் தமது பானங்களை திரும்பப் பெறும் கொககோலா!



குளிர்பானங்கள் தயாரிப்பு நிறுவனமான கொக்ககோலா (Coca-Cola) ஐரோப்பா முழுவதும் உள்ள சில நாடுகளில் அதன் பானங்களில் "குளோரேட்டு" எனப்படும் அதிக அளவு இரசாயனங்கள் இருப்பதால் அவற்றை திரும்பப் பெறுவதாக பிபிசி செய்தி வெளியிட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட தயாரிப்புகளில் கொக்ககோலா, ஃபன்டா, மினிட் மெய்ட், ஸ்ப்ரைட் மற்றும் டிராபிகோ பிராண்டுகள் அடங்கும் என்று கோக கோலாவின் சர்வதேச பாட்டில் மற்றும் விநியோக நடவடிக்கையின் பெல்ஜியக் கிளை தெரிவித்துள்ளது.

2024 நவம்பர் முதல் பெல்ஜியம், இங்கிலாந்து, பிரான்ஸ், ஜேர்மனி, லக்சம்பேர்க் மற்றும் நெதர்லாந்தில் அதிக அளவு குளோரேட்டு கொண்ட கேன்கள் மற்றும் கண்ணாடி போத்தல்களில் கொககோலா பானங்கள் விநியோகிக்கப்படுவதாக நிறுவனம் திங்களன்று (27) தெரிவித்துள்ளது.

இங்கிலாந்தில் உள்ள ஏதேனும் கொக்ககோலா தயாரிப்புகளில் அதிக அளவு குளோரேட்டு உள்ளதா என ஆய்வு செய்து வருவதாக உணவு தர நிர்ணய நிறுவனம் உறுதி செய்துள்ளது.குளோரேட்டு உணவுகளில் காணப்படுகிறது, ஏனெனில் இது நீர் சுத்திகரிப்பு மற்றும் உணவு பதப்படுத்துதலில் பரவலாக பயன்படுத்தப்படும் குளோரின் கிருமிநாசினிகளிலிருந்து பெறப்படுகிறது.

அதிக அளவு இரசாயன கலவையை வெளிப்படுத்துவது தைரொய்ட் பிரச்சினைகளை ஏற்படுத்தும். குறிப்பாக சிறுவர்களிடையே உடல்நலப் பிரச்சினைகளை ஏற்படுத்தும்.

2015 ஆம் ஆண்டின் அறிவியல் கருத்துப்படி, குளோரேட்டின் நீண்டகால வெளிப்பாடு சிறுவர்களுக்கு, குறிப்பாக இலகுவான அல்லது மிதமான அயடின் குறைபாடு உள்ளவர்களுக்கு உடல்நலக் கவலையை ஏற்படுத்துவதாக ஐரோப்பிய உணவு பாதுகாப்பு ஆணையம் தெரிவித்துள்ளது.

# காஸாவில் உள்ள பலஸ்தீனர்களுக்கு அரபு நாடுகள் புகலிடம் வழங்க வேண்டும்

## டொனால்ட் ட்ரம்ப் அறிக்கை

காஸாவில் உள்ள பலஸ்தீனர்களுக்கு ஜோர்தான், எகிப்து மற்றும் பிற அரபு நாடுகள் புகலிடம் வழங்க வேண்டும் என அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

இஸ்ரேல் மற்றும் பலஸ்தீனத்தின் காஸா முனையை நிர்வகித்து வரும் ஹமாஸ் அமைப்பினர் இடையேயான போர் 15 மாதங்களுக்குப் பிறகு போர் நிறுத்த ஒப்பந்தம் மூலம் முடிவுக்கு வந்தது. இதில் இஸ்ரேல் தரப்பில் சுமார் 1,700 பேரும், பலஸ்தீன தரப்பில் சுமார் 47,000 பேரும் கொல்லப்பட்டனர். போர் நிறுத்த ஒப்பந்தப்படி ஹமாஸ் அமைப்பினர் தங்களிடம் உள்ள இஸ்ரேல் பிணைக் கைதிகளை விடுத்துவித்து வருகின்றனர். அதற்கு ஈடாக பலஸ்தீன கைதிகளை இஸ்ரேல் விடுதலை செய்து வருகிறது. போர் நிறுத்தத்தையடுத்து இடப்பெயர்ந்த மக்கள் தங்களது பகுதிகளுக்குத் திரும்பி வருகிறார்கள். எல்லையைத் திறந்தபின் வடக்கு காசாவுக்குள் நெட்சாரிம் பாதை வழியாக இலட்சக்கணக்கான மக்கள் நேற்றுமுதல் செல்லத் தொடங்கியுள்ளனர்.

இதற்கிடையே அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் கூறியுள்ள கருத்து பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

"காஸாவில் உள்ள பலஸ்தீனர்களுக்கு ஜோர்தான், எகிப்து மற்றும் பிற அரபு நாடுகள் புகலிடம் வழங்க வேண்டும் என்று அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார். போரினால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள காஸாவை முழுவதுமாக சுத்தம் செய்யவேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

சில தினங்களுக்கு முன்னர் தனது ஏர் ஃபோர்ஸ் ஒன் விமான பயணத்தின்போது செய்தியாளர்களிடம் பேசிய அவர்,

"காஸா இப்போது ஒரு பாதிக்கப்பட்ட இடமாகவே உள்ளது, கிட்டத்தட்ட எல்லாமே இடிக்கப்பட்டுள்ளன. மக்கள் அங்கே இறந்து கொண்டிருக்கிறார்கள். நான் அங்கிருந்து வெளியேறும் 15 இலட்சம் மக்களின் எதிர்காலம் குறித்து யோசிக்க வேண்டும். காஸாவை நாம் முழுவதுமாக சுத்தம் செய்ய வேண்டும். அதுதான் ஒரே வழி. அங்கே அவ்வளவு தான். எல்லாம் முடிந்துவிட்டது. அங்கிருந்து அவர்கள் வெளியேறுவதே சரியாக இருக்கும். எனவே நான் சில அரபு நாடுகளுடன் இணைந்து, அவர்களுக்கு வேறு இடத்தில் வீடுகளை அமைத்துத் தர



வேண்டும். அங்கு அவர்கள் நிம்மதியாக வாழலாம்" என ட்ரம்ப் அந்த பேட்டியில் தெரிவித்திருந்தார்.

பலஸ்தீன அகதிகளை ஜோர்தான் இப்போதே ஏற்று வருகிறது. கூடுதலாக இன்னும் அவர்கள் காஸா அகதிகளை ஏற்க வேண்டும். இதுதொடர்பாக ஜோர்தான் மன்னர் இரண்டாம் அப்துல்லா மற்றும் எகிப்து ஜனாதிபதி அப்தெல் பத்தா எல்-சிசியுடன் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாகவும் ட்ரம்ப் தெரிவித்துள்ளார். இதனால் சூழ்நிலையை சாதமாகப் பயன்படுத்தி ட்ரம்ப் மறைமுகமாக காஸாவை காலி செய்து இஸ்ரேலிடம் கொடுக்க உள்ளாரா என்ற கேள்வியும் பலரிடையே எழுந்துள்ளது.

இதனிடையே, ஏற்கனவே அமெரிக்காவுடன் செய்த ஒப்பந்தங்களின்படி 907 கிலோ எடையுள்ள வெடிகுண்டுகளை இஸ்ரேலுக்கு அனுப்ப ட்ரம்ப் உத்தரவிட்டுள்ளார். காஸா மீதான போரில், இஸ்ரேல் கட்டுப்பாடுகளை மீறியதால், முன்னாள் ஜனாதிபதி ஜோ பைடன் இந்த வெடிகுண்டுகளை அனுப்பாமல் தற்காலிகமாக நிறுத்தி வைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# சீனா அறிமுகம் செய்த புதிய செயற்கை நுண்ணறிவு செயலி




செயற்கை நுண்ணறிவு (AI) தொழில்நுட்பம் உலக அளவில் ஆதிக்கம் செலுத்த ஆரம்பித்துள்ளது. இப்போதுவரை இந்த AI தொழில்நுட்பத்தில் ஓபன் ஏஐ - சட்ஜிபிரி, கூகுள் - ஜெமினி ஆகிய அமெரிக்க நிறுவனங்களே கோலோச்சி வந்தன. இந்நிலையில் அவற்றுக்கு சவால் விடும் வகையில் சீன நிறுவனம் அறிமுகப்படுத்தியுள்ள புதிய AI செயலி அமைந்துள்ளது. இது ஏஐ உலகில் புரட்சியை ஏற்படுத்தும் என்று நம்பப்படுகிறது. 2023ஆம் ஆண்டில் சீன குவாண்ட் ஹெட்ஜ் ஃபண்ட் தலைவரான லியாங் வென்ஃபெங் என்பவரால் ஆரம்பிக்கப்பட்ட நிறுவனம் டீப்சீக் (Deepseek).

இந்த நிறுவனம் தற்போது டீப்சீக், ஆர்1 மற்றும் ஆர்1 ஜீரோ என்ற இரு AI செயலிகளை அறிமுகப்படுத்தியுள்ளது. இதில் ஆர்1 மாதிரி செயலி பயன்பாட்டுக்கு வந்துள்ளது. ஆர்1 என்பது வழக்கமான AI செயலி ஆகும். இன்னும் பயன்பாட்டுக்கு வாராத ஆர்1 ஜீரோ தானாகவே கற்பித்துக்கொள்ளும் (self-taught) AI செயலி ஆகும். அமெரிக்க நிறுவனங்களை விட குறைவாக 6 மில்லியன் டொலர்கள் செலவில் டீப்சீக்AI உருவாக்கப்பட்டுள்ளது.

டீப்சீக் AI செயலி வருகையால் அமெரிக்க நிறுவனங்கள் ஆட்டம் கண்டுள்ளன. ஏனெனில் டீப்சீக் ஏஐ முற்றிலும் இலவசமாகும். தற்போது சந்தையில் உள்ள சாட்ஜிபிடி, ஜெமினி ஆகியவை பயனர்களுக்குப் பழைய வெர்ஷன்களை மட்டுமே இலவசமாக வழங்குகிறது. புதிய அம்சங்களுக்குக் கட்டணம் பெறுகிறது. ஆனால் டீப்சீக் AI, அனைத்து நவீன வசதிகளையும் இலவசமாக வழங்குகிறது.

# சீன மாணவர்களுக்கு உடற்கல்வி பாடம் கட்டாயம்

சீனாவில் பாடசாலை குழந்தைகள் இடையே அதிகரித்துவரும் உடல் பருமனை தடுக்க உடற்கல்வி வகுப்பை முதன்மையான பாடங்களுள் ஒன்றாகச் சேர்க்க அந்நாட்டு அரசு திட்டமிட்டுள்ளது. சீனாவில் 1990 இல் 1.3மூ ஆக இருந்து மாணவர்களின் உடல் பருமன் விகிதம் 2022 இல் 15.2% ஆக உயர்ந்தது. உடல் பருமன் சீனாவின் மிகப்பெரிய சுகாதார அச்சுறுத்தலாக மாறிய நிலையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக கொரோனா பெருந்தொற்றுக்கு பின்பு உடல் பருமன் பிரச்சினைகள் மேலும் அதிகரித்துள்ளது.

இதனால் சீனாவில் உள்ள அனைத்து பாடசாலைகளும் கட்டாயமாக ஒருநாளில் 2 மணி நேரமாவது உடற்கல்வி பாடத்திற்காக ஒதுக்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதன்மூலம் மாணவர்களின் கிட்டப்பார்வை, தூரப்பார்வை, உடல் பருமன் பிரச்சினைகளை கட்டுப்படுத்த முடியும் என தெரிவிக்கப்படுகிறது.

சீன



மொழி ஆசிரியர், கணித ஆசிரியர், அறிவியல் ஆசிரியருக்கு இணையாக உடற்கல்வி ஆசிரியருக்கும் மரியாதையை தரவேண்டும் என்றும் கால்பந்து, கூடைப்பந்து, கைப்பந்து உள்ளிட்ட விளையாட்டுகளை பாடசாலைகளில் ஊக்குவிக்க வேண்டும் என்றும் சீனாவின் கல்வி அமைச்சகம் தெரிவித்துள்ளது.

# பங்களாதேஷ் பிபிஎல் தொடரும் சர்ச்சை; 5 வெளிநாட்டு வீரர்கள் போட்டி புறக்கணிப்பு





பங்களாதேஷ் கிரிக்கெட் சபையால் நடத்தப்படும் பிபிஎல் கிரிக்கெட் போட்டியில் ராஜ்ஷாஹி அணிக்காக விளையாடும் இலங்கை வீரர் லஹிரு சமரக்கோன் மற்றும் ஐந்து வெளிநாட்டு வீரர்களுக்கு ஒப்பந்தப் பணம் வழங்கப்படாததால் போட்டிகளைப் புறக்கணிக்க நேர்ந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

சில நாட்களுக்கு முன்பு, சிட்டகொங் கிங்ஸை அணியைச் சேர்ந்த பினுர பெர்னாண்டோவுக்கு வாக்குறுதியளித்தபடி பணம் செலுத்தாததற்கு எதிர்ப்புத் தெரிவித்து மைதானத்திற்கு வர மறுத்துவிட்டார், நேற்று முன்தினம் லஹிரு சமரகோனுடன் பாகிஸ்தான் வீரர் முகமது ஹாரிஸ், சிம்பாப்வே வீரர் ரியான் பர்லே, கயானா வீரர் மார்க் தயாள், மேற்கிந்திய தீவுகள் வீரர் மிகுவல் கம்மின்ஸ் மற்றும் ஆப்கானிஸ்தானின் அப்தாப் ஆலம் ஆகியோரும் போட்டியைப் புறக்கணித்துள்ளனர்.

இந்த சீசனில் ராஜ்ஷாஹி ஸ்போர்ட்ஸ் கிளப்புடன் சமரக்கோன் உட்பட இந்த வீரர்கள் கையெழுத்திட்ட ஒப்பந்தத்தின் மதிப்பு தலா 15,000 அமெரிக்க டாலர்கள் (இலங்கை ரூபாவில் 4.5 மில்லியன்)இந்த வெளிநாட்டு வீரர்கள் நிதி வழங்காமை தொடர்பாக பங்களாதேஷ் கிரிக்கெட் சபையிடம் எழுத்து மூலம் அறிவித்துள்ளனர்.

மேலும் வீரர்கள் தங்கியுள்ள ஹோட்டலில் இருந்தும் நிர்வாகக் குழுவிற்கு முறைப்பாடுகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

பங்களாதேஷ் கிரிக்கெட் ஊடகக் குழுவின் தலைவர் இப்திகார் ரஹ்மான்,

இந்தப் பிரச்சினையைத் தீர்க்க கிளப் உரிமையாளர்களுக்கு போதுமான அவகாசம் வழங்கப்பட்டுள்ளதாகவும், இனி அவ்வாறு செய்ய அனுமதிக்க முடியாது என்றும் கூறினார்.

பிபிஎல் கிரிக்கெட் போட்டியின் விதிகளின்படி, ஒரு அணியில் குறைந்தது இரண்டு வெளிநாட்டு வீரர்களைக் விளையாட வேண்டும். ராஜ்ஷாஹி அணியின் வெளிநாட்டு வீரர்கள் களமிறக்க மாட்டார் என்பது தெளிவாகத் தெரிந்ததும்,பங்களாதேஷ் கிரிக்கெட் குழு விதியை மீற அனுமதித்தது.

அந்தப் போட்டியில் ரங்பூரை எதிர்த்து ராஜ்ஷாஹி 2 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றியைப் பெற்றுக் கொண்டது.

கெப்டன் டாஸ்கின் அகமது,

இது ஒரு நீண்ட மற்றும் கடினமான நாட்களுக்குப் பின்னரான ஒரு சந்தோசம் என்று கூறினார். வெளிநாட்டு வீரர்களிடம் நான் கேட்டபோது, பணம் இல்லாமல் விளையாட மாட்டோம் என்று சொன்னார்கள்.அது அவர்களின் உரிமை. நான் என்ன சொல்ல முடியும், நானும் ஒரு வீரர்தான். வெளிநாட்டு வீரர்கள் இல்லாமல் நாங்கள் விளையாடுவது உண்மையில் போதுமானதாக இல்லை என்றார்.




# மேற்கிந்தியத் தீவுகள் 34 ஆண்டுகளின் பின் வரலாற்று வெற்றி





மேற்கிந்தியத் தீவுகள் 34 ஆண்டுகளின் பின்னர் பாகிஸ்தானில் திங்கட்கிழமை (27) முதல் டெஸ்ட் வெற்றியைப் பதிவு செய்துள்ளது.

இந்த வெற்றியின் மூலம் மேற்கிந்தியத்தீவுகள் இரு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரினை 1-1 என்ற கணக்கில் சமன் செய்தது.

முல்தான் சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் கடந்த 25 ஆம் திகதி ஆரம்பமான இப் போட்டியில் மேற்கிந்தியத்தீவுகள் அணியின் சுழற்பந்து வீச்சாளர் ஜொமெல் வாரிகன் இரு இன்னிங்ஸகளிலும் 70 ஓட்டங்களை வழங்கி ஒன்பது விக்கெட்டுகளை கைப்பற்றியிருந்தார்.

தொடரின் மற்றும் போட்டியின் ஆட்டநாயகனாகவும் அவர் தேர்வு செய்யப்பட்டார். இறுதியாக 1990 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் பைசலாபாத்தில் மேற்கிந்தியத்தீவுகள் அணி பாகிஸ்தானில் ஒரு டெஸ்டில் வெற்றி பெற்றது. எனினும், அதன் பின்னரான காலப் பகுதியில் (1997, 2006) மேற்கிந்தியத்தீவுகள் கிரிக்கெட் அணி பாகிஸ்தானில் இரண்டு தொடர்களில் மாத்திரமே விளையாடியுள்ளனர்.

# தலைவர் கிண்ண இளைஞர் உதைப்பந்தாட்ட போட்டி; முகமது அஷாதி ஹெட்ரிக் கோல்





இலங்கை உதைப்பந்தாட்ட சம்மேளனத்தினால் நடத்தப்படும் தலைவர் கிண்ணத்துக்கான இளைஞர் உதைப்பந்தாட்ட போட்டியின் மூன்றாவது வாரத்தில், பெத்தகான உதைப்பந்தாட்ட மைதானத்தில் மான்செஸ்டர் அகடமி அணிகளுக்கு இடையேயான 16 வயதுக்குப்பட்டோர் போட்டியில் 5-0 கோல்கள் மென்செஸ்டர் "ஏ" அணி,வித்தியாசத்தில் வெற்றி பெற்றது, அதே நேரத்தில் 14 வயதுக்குட்பட்டோர் போட்டி 2-2 கோல்கள் வித்தியாசத்தில் சமநிலையில் முடிவடைந்தது. இந்த உதைப்பந்தாட்ட போட்டி, கொழும்பை மையப்படுத்தியுள்ள கால்பந்து அகாடமிகளில், 14 மற்றும் 16 வயதுக்குட்பட்ட அணிகளுக்கு இடையே ஒவ்வொரு வார இறுதியிலும் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

16 வயதுக்குட்பட்டோருக்கான போட்டியில் மிகச் சிறந்த வீரர் விருதை வென்ற முகமது அஷாதி ஹெட்ரிக் கோல் அடித்துள்ளார். அதே நேரத்தில் முகமது ஷமி மற்றும் எம்.ஐ.எம். ரிஷாத் ஆகியோரும் கோல் அடித்தனர். மென்செஸ்டர் "பி" அணியின் முகமது உமர் 14 வயதுக்குட்பட்டோருக்கான போட்டியில் மிகச் சிறந்த வீரர் விருதை வென்றார்.

மென்செஸ்டர், கொழும்பு சோண்டர்ஸ், ஜாவலேன், பார்சிலோனா மற்றும் கொழும்பு யூத் உதைப்பந்தாட்ட அகாடமிகளுக்கு இடையே நடைபெறும் இந்தப் போட்டியின் வெற்றியாளர்களுக்கு ஒரு இலட்சம் ரூபாயும், ரன்னர்ஸ் அப அணிக்கு 50,000 ரூபாவும் பரிசாக வழங்கப்படும். இந்தப் போட்டியை மென்செஸ்டர் உதைப்பந்தாட்ட அகாடமியின் தலைவர் அகஸ்டின் ஜார்ஜ் உள்ளிட்ட குழு ஏற்பாடு செய்துள்ளது.

# ஐ.பி.எல் 2025 தொடர் மார்ச் 21இல் ஆரம்பம்



2025 ஐபிஎல் தொடர் மார்ச் 21 ஆரம்பமாகும் என ஐபிஎல் தலைவர் அருண் துமால் உறுதி செய்துள்ளார்.

மேலும், இந்த ஆண்டு ஐபிஎல் தொடரில் விதிகளில் பெரிய அளவில் எந்த மாற்றமும் இருக்காது எனவும் அவர் கூறி இருக்கிறார். அருண் துமால் இமாச்சலப் பிரதேசத்தில் உள்ள பிலாஸ்பூரில் நடைபெற்ற மகா கும்பமேளா விழாவில் பங்கேற்ற போது இந்த அறிவிப்பை வெளியிட்டார். முன்னர் மார்ச் 14 ஆம் திகதி ஐபிஎல் தொடர் ஆரம்பமாகும் என சில செய்திகள் வெளியாகி இருந்தன. அருண் துமால் வெளியிட்டு இருக்கும் அறிவிப்பை வைத்து பார்க்கும் போது மார்ச் 21 முதல் மே 25 வரை ஐபிஎல் தொடர் நடைபெறும் என எதிர்பார்க்கலாம். ஏனெனில், சென்ற ஆண்டு இருந்த அதே எண்ணிக்கையிலான போட்டிகள் தான் இந்த ஆண்டும் நடைபெறும்.

ஐபிஎல் தொடருக்கு முன் 2025 சம்பியன்ஸ் கிண்ணத் தொடர் நடைபெற உள்ளது.

அந்த தொடர் மார்ச் 9 அன்று முடிவுக்கு வரும் என்பது குறிப்பிடத்தக்கது. அதன் பின்னர் இந்திய அணி வீரர்கள் நாடு திரும்பி சற்று ஓய்வு எடுத்த பின்னர் தங்களின் ஐபிஎல் அணிகளுடன் இணைந்து பயிற்சி செய்யும் வகையில் போதிய கால அவகாசமும் கிடைக்கும். 2025 ஐபிஎல் தொடருக்கான மெகா ஏலம் கடந்த டிசம்பர் மாதம் நடைபெற்றது. சவுதி அரேபியாவின் ஜெத்தாவில் நடந்த அந்த மெகா ஏலத்தில் 182 வீரர்கள் சுமார் 639.15 கோடிக்கு ஐபிஎல் அணிகளால் வாங்கப்பட்டனர். அதிகபட்சமாக ரிஷப் பண்ட் 27 கோடி ரூபாயையும், ஸ்ரேயாஸ் ஐயர் 26.75 கோடியையும் சம்பளமாக பெற்றனர்.

# ஒருநாள் கிரிக்கெட்டின் சிறந்த வீராக அஸ்மத்துல்லா ஓமர்சாய்






அஸ்மத்துல்லா ஓமர்சாய் (Azmatullah Omarzai) திங்கட்கிழமை ஐசிசி ஆடவர் ஒருநாள் கிரிக்கெட்டின் சிறந்த வீரர் விருதை வென்றுள்ளார். இதன் மூலம் குறித்த விருதினை வென்ற ஆப்கானிஸ்தானின் முதல் கிரிக்கெட் வீரர் என்ற வரலாற்றை அவர் படைத்தார். 24 வயதான சகலதுறை வீரர், 2024 இல் ஹஷ்மத்துல்லா ஷாஹிடி தலைமையிலான அணிக்காக 14 ஒருநாள் போட்டிகளில் விளையாடினார். அந்தப் போட்டிகளில் ஒரு சதம் மற்றும் மூன்று அரைசதங்களுடன் 417 ஓட்டங்களை எடுத்தார். அது மாத்திரமன்றி பந்து வீச்சில் 17 விக்கெட்டுகளையும் அவர் கைப்பற்றியிருந்தார். 2024 டிசம்பர் 17 அன்று சிம்பாப்வேக்கு எதிராக நடந்த போட்டியில் 4.2 ஓவர்களில் 18 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களை கைப்பற்றியமை அவரது சிறந்த பந்து வீச்சு திறனமையாக அமைந்தது. இந்த ஆண்டின் தொடக்கத்தில் ஆப்கானிஸ்தானுக்கு இலங்கையில் தொடரை வெல்லும் முயற்சிக்கு அவரது தனிப்பட்ட திறமை போதுமானதாக இல்லை. எனினும் அயர்லாந்து, தென்னாப்பிரிக்கா, பங்களாதேஷ் மற்றும் சிம்பாப்வேக்கு எதிராக அவர் அணி வெற்றி பெற்றதால், ஆப்கானிஸ்தானுக்கு தொடர்ச்சியாக நான்கு ஒருநாள் தொடர் வெற்றிகளுக்கு அவர் மிகப்பெரிய பங்காற்றியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

இந்தப் பத்திரிகை கொழும்பு - 08 கலாநிதி என்.எம்.பெரேரா மாவத்தை, இலக்கம் 42 இல் அமைந்துள்ள "அபே ஜனஹண்ட பப்ளிகேஷன் பிரைவேட் லிமிடெட்" நிறுவனத்தினரால் 2025 ஜனவரி 29ம் திகதி புதன்கிழமை தயார் செய்யப்பட்டு வெளியிடப்பட்டது.